Registered as a News Paper in Sri Lanka | දිනමුරසු වාරමලර් | பக்கம் 24 ரூபா 30.00
செப்ரெம்பர் 19 - 25, 2013

# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1032








## இணக்க அரசியல் எதிர்ப்பு அரசியல்



# மக்களே நீதிபதிகள்

## வடபகுதி முஸ்லிம்களின் துன்பியல் கதை

இறுதிப்பகுதி



## தற்கொலைகள் பலவிதம்

## வல்லரசுகளின் ஆடுகளத்தில் அழியும் சிரிய மக்கள்



## அறுகம்புல்

பிரம்மதேவன் 'ஐய்யனே! அனலாசுரன் என்கிற அசுரன் நம் தேவர்களுக்கு மிகவும் துன்பம்தந்து கொடுமைப்படுத்துகிறான். நாளாக நாளாக அவன் தரும் தொல்லைகளுக்கு அளவோ, வரம்போ இல்லை" என்றார். விநாயகர் அவர்கள் கூறுவதைக் கேட்டுக் அவனை துவம்சம் செய்துவிடுகிறேன் என்று வாக்குறுதி அளித்தார்.

விநாயகப் பெருமானும் போரிட்டார். அந்த அசுரனோ, வாயிலிருந்து நெருப்பு கக்கினான். விநாயகரின் படைகள் பொசுங்கின. இதனால், தனது தும்பிக்கையால் அசுரனை அப்படியே தூக்கி, வாயில்போட்டு விழுங்கிவிட்டார். வயிற்றின் உள்ளே சென்ற அசுரன் சும்மா இருக்கவில்லை. விநாயகருக்கு தகிக்கவைத்தான். இந்த விஷயம் தெரிந்தவுடன் தேவர்கள் ஓடோடி வந்தனர். விநாயகர்மீது குடம்குடமாக கங்கை நீரை அபிஷேகம் செய்தனர். பலனில்லை. அடுத்த முயற்சியாக, சந்திரனிடமிருந்து ஒளியைப் பாய்ச்சினர். எரிச்சல் அப்படியே இருந்தது. அப்போது ஒரு ரிஷி வந்தார். நிறைய அறுகம்புல்லை எடுத்துவந்து விநாயகரின் தலையில் வைத்தார். விநாயகருக்கு எரிச்சல் தணியஆரம்பித்தது. வயிற்றில் இருந்த அனலாசுரன் அப்படியே ஜீரணம் ஆகிவிட்டான்.

விநாயகருக்கு மகிழ்ச்சி தாளவில்லை. அதனால், விநாயகரின் அருளைப் பெறவிரும்பும் பக்தர்கள், அறுகம்புல்லை அர்ச்சனை செய்தால் நல்லது என்ற வழக்கம் உண்டானது.

## மதிப்புப் பெறுதல்

ஆன்மீகம்

இயேசுவின் 'செயல்வழிக் கற்றல் முறை இன்றும் தொடர்கிறது. உணவு அருந்தும் வேளையைப் பயன்படுத்தி இயேசு நல்ல மதிப்பீடுகளை மக்களுக்குக் கற்றுத்தருகிறார். குறிப்பாக, இயேசுவின் சீடர்கள் முதன்மையான இடத்தையும், மதிப்பையும் விரும்பித் தேட வேண்டாம் என்று அறிவுரை பகர்கின்றார். அதற்காக நடைமுறை எடுத்துக்காட்டுகளையும் தருகிறார்.

விருந்துக்கு செல்லும்போது விருந்தளிப்பவர் தருகின்ற மதிப்பைப் பற்றி இயேசு கூறுகின்ற எடுத்துக்காட்டு நமது வாழ்விலேகூட எப்போதேனும் நடந்திருக்கச்கூடிய ஒரு நிகழ்வுதான். நாம் முதன்மை இடத்தைத் தேடினால், அதை இழந்து பின்னிடத்திற்கு செல்லநேரிடும். கடைசி இடத்தைத் தேர்ந்தெடுத்தால், அனைவரின் முன்பாக மேலிடத்திற்கு அழைத்துச்செல்லப்படும் பெருமைக்கு உள்ளாகியிருப்போம்.

ஆகவே, முதன்மை இடத்தை, பெருமையை, பாராட்டை பிறருக்கு விட்டுக்கொடுக்கின்ற நல்ல பழக்கத்தை ஒரு வாழ்வு மதிப்பீடாக ஏற்றுக்கொள்வோம். அப்போது, இறைவன் நம்மைப் பெருமைப்படுத்துவார்.

## ஆயிஷா நாயகியின் அறிவிப்பு

அண்ணல் நபியின் அறிவில் சிறந்த அருமை மனைவி ஆயிஷா நாயகி பத்து விடயங்கள் உன்னத நல்லொழுக்கங்களுக்குரிய முக்கிய அம்சங்களெனக் கூறி எவரிடம் இந்த விஷயங்கள் அமைந்திருக்குமோ அவரை நல்லொழுக்கம் உடையவரென கருதுங்கள் என்றார்கள்.

அவைகள்: 01. உண்மை பேசுதல், 02. மக்களிடம் நேர்மையாக நடந்துகொள்ளுதல், 03. வேண்டுவோரின் வேண்டுதலை தடை செய்யாதிருத்தல், 04. நன்றியின் பிரதிபலனை நன்றியைக்கொண்டே நிறைவேற்றல், 05. அமானிதத்தை பாதுகாத்தல், 6. பேருதவி புரிதல், 07. அண்டைய வீட்டாரை ஆதரித்தல், 08. விருந்தினரை உபசரித்தல், 09. நண்பர்களின் உபசாரத்திற்காகவும் அவர்களின் உதவிகளுக்காகவும் எண்ணத்தால் அன்பு செலுத்துதல், 10. நாணயத்தைக் கடைப்பிடித்தல்.

இவைகள் நாளும் நமது நடைமுறையில் வரும் போது நாம் ஒழுக்கசீலர்களாக ஓங்குவோம் என்பதே ஆயிஷா நாயகியின் அறிவிப்பு.

எம்.சீ.கலீல், கல்முனை-05

## கவிதைப்போட்டி இல 1029



### அக்கறை!


பாராட்டுக்குரியது

வேலை
ஓய்வெடுத்து
வெள்ளைக்காரக்
குள்ளன்
வெயில்
காய்கிறான் - அது
அவனின்
உட லக்கறை!
எம்மவன்
ஓய்வில்லாமல்
ஒவ்வொரு
நாளும் - உழைத்து
வெயில்
காய்கிறான் - இது
அவனின்
குடலக்கறை!

பாண்டியூர்
பொன்.நவநீதன்.




## கவிதைப் போட்டி இல 1032



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 01. 10. 2013

கவிதைப் போட்டி இல. 1032 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### குழந்தையா? குள்ளனா?

விரிப்பில் உறங்கும்
வியப்பு மனிதன்
குழந்தையா? – குள்ளனா?
மூக்குக் கண்ணாடியை நோக்கும் போது
முன்னே தெரிவது
கறுப்புக் கண்ணாடியணியும்
கருணாநிதியின் தோற்றம்!

எம்.சி.கலீல், கல்முனை-05

### முன்னேற்றம்

சூரியக் குளிப்புக்கு
பெற்றோர் இன்னும்
அரையாடையில்
குழந்தைக்கோ
முழு ஆடை
இதுதான் கலாசார
முன்னேற்றமோ?

அ.சந்தியாகோ, கண்டி.

### உலகமே... பொம்மை

அட... நீயும் பொம்மை
நானும் பொம்மை
நினைச்சுப் பார்த்தா
உலகமே பொம்மை
ஹி...ஹி...ஹி...

K.M.A.அஸீஸ், சாய்ந்தமருது -11

### அமெரிக்காவின் குழந்தை

அமெரிக்காவில்
அரும்பும் மொட்டுக்கள்
கலகலப்போடும்
குளுகுளுப்போடும் மலர்ந்தாலும்
இதயத்துடிப்பில்
இம்சை இருக்கும்
உலகம் முழுவதும்
உருவாக்கிய நாய்க்கூட்டம்
குதறி விடலாம் எனும்
கடும் பயத்தால்!
தலையை உயர்த்தி
உலகை நோக்கி வண்ணம்.

ஏ.பாரிஸ், கட்டுக்கெலியாவ.

### வாழ்வா? சாவா?

பூமியில் பிறந்து
பாயில் தவழ்ந்தாலும்
புகழுக்கு ஆசைப்பட்டால்
கறுப்புக்கண்ணாடி
மட்டுமல்ல
கண்கவர் அலங்காரமும்
தேவைப்படலாம்.

நா.ஜெயபாலன், பிபிலை.

## உங்கள் பக்கம்

### கோட்டையில் அரங்கேறும் அசிங்கங்கள்

தமிழர்களின் பெருமைமிக்க கலாசாரத்திற்கும் சமூகக் கட்டுப்பாடுகளுக்கும் அத்திவாரமாக விளங்குவது யாழ்ப்பாணப் பிரதேசமாகும்.

அப்படிப்பட்ட யாழ்.நகரின் மையப் பகுதியில் வரலாற்றுப் பெருமைமிக்க மையமாக யாழ்.கோட்டை விளங்குகின்றது. இக்கோட்டையை கடந்த கால யுத்த அழிவுகளிலிருந்து புனரமைத்து பேணிப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முயற்சிகள் பாராட்டுக்குரியவை.

யாழ். கோட்டையின் பராமரிப்பையிட்டு மகிழ்ச்சியடைகின்ற போதிலும் அதற்குள் அரங்கேறுகின்ற அசிங்கங்கள் அதிருப்தியடையச் செய்கின்றன.

நாகரிகம் என்றபெயரில் நான்கு சுவருக்குள் நடக்க வேண்டியவற்றையெல்லாம் கோட்டை சுவருக்குள் நடாத்தி முடிக்க சில இளைஞர் - யுவதிகள் நடந்துகொள்ள முற்படுவது வேதனைக்கும் கண்டனத்திற்கும் உரியதாகும். இவ்வாறான சமூகத்தைச் சீரழிக்கும் சல்லாபப் புத்திகளை துரத்தியடித்து எமது பிரதேசத்தின் புனிதத்தை பாதுகாக்க வேண்டியவர்கள் கண்டும்காணாமல் மௌனமாக இருப்பது சமூகநலன் சார்ந்தவர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்துகின்றது.

ஊடகங்கள்கூட அரசியல்வாதிகளின் பின்னாலேயே தமது பெரும்பாலான நேரங்களைக் கடத்திக்கொள்வதால் இதுபற்றி பெரிதாக அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. இந்தச் சாபக் கேட்டிலிருந்து எமது சமூகத்தைப் பாதுகாத்துக் கொள்ள அதிகாரம் மிக்கவர்கள் அவசரமாகச் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

எம்.அன்ரனி குரூஸ்,
குருநகர்.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com


## அன்புக் கட்டளை!

அன்பின் முரசே!

அற்புதனின் அற்புதங்களால் கவரப்பட்டவர்களில் நானும் ஒருவன். அன்று தொட்டு இன்றுவரை உன் வாசகன். அந்த அற்புதப் பிறவியின் அற்புதப் படைப்பைக் கண்டதும் என் இதயத்தில் என்றும் இல்லாத திருவிழா... எனது பல கோடி நன்றிகள்.

அத்துடன் அமரர் அற்புதனின் படைப்புக்கள் அத்தனையும் மீண்டும்தர அன்புடன் வேண்டுவதோடு அவரின் படத்தோடு பிரசுரித்து அவரை கௌரவப்படுத்தும்படி அன்புக் கட்டளை இடுகின்றேன்.

A.பாரிஸ், மிகிந்தலை.

## வாசகர் சாலை

### முக்கியத்துவம்

யார் இந்த புதிய எழுத்தாளர் குணபாலசிங்கம் அவரின் கதைகள் சூப்பரோ... சூப்பர்... 1030 தினமுரசில் வெளிவந்த 'பொலிஸ் அம்மா' சிறுகதை அருமையிலும் அருமை. தினமுரசில் முன்பு இருமுறை 'பூலான் தேவி'யின் தொடர்கதை, வந்துவிட்டது. அதே போல் 'சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளைக்காரிகள் 'பட்லி', 'ஜமேலா', குஜராத் மோகினி... இவர்களின் தொடருக்கும் முக்கியத்துவம் கொடுத்து தொடராக பிரசுரிக்குமாறு என் போன்ற பலரின் வேண்டுகோள். உன் பணி தொடர வாழ்த்துக்கள்.

வே.பரமலிங்கம், வட்டுக்கோட்டை.

## பிரார்த்தனை...


முரசுக்கு வணக்கம்.

நீண்ட நெடுங்காலமாக அரசியல் சகதிக்குள் சிக்கிக்கிடக்கும் எமது சமூகத்தை காப்பாற்றி அரசியல் ஆரோக்கியம்மிக்க சமுதாயப் பிரஜைகளாக மாற்றுவதற்கு நீ மேற்கொள்ளும் முயற்சிகளும், வழிவகைகளும் அவ்வவ்போது பல்வேறு சவால்களையும் சந்தித்து வெற்றி அடைந்து கொண்டிருக்கின்றது. எனினும் உனது இலக்கு பூரணமாக வெற்றியைப் பெறவில்லை.

அதற்கு தொடர்ந்தும் நீ போராடுவாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. இந்தப் பத்திரிகை உலகில் ஆயிரம் பூக்கள் மலர்ந்தாலும் உனக்கு நிகர் வேறொருவரும் இல்லையென்பதை நீ சுமந்துவரும் ஆக்கங்களும், பக்கவடிவமைப்பும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. உன் பணிதொடர மானமார்ந்த வாழ்த்துக்களும் பிரார்த்தனைகளும் தொடர்ந்துகொண்டே இருக்கும்.

ஆர்.சைலானி, மன்னார்.

# தமிழ் மக்கள் தோற்றுப்போகும் வரலாற்றை மாற்றியமைப்போம்



## முதன்மை வேட்பாளர் தவராசா சூளுரை

**காலத்துக்குக் காலம், கோஷங்களையும் கொள்கைகளையும் மாற்றிக்கொள்ளும் நபர்களுக்கும் கட்சிகளுக்கும் வாக்களித்து அவர்களை வெற்றி பெறச்செய்து, தமிழ் மக்கள் தோற்றுப்போகும் வரலாற்றை இந்தத் தேர்தலில் மாற்றியமைப்போம் எனவும், வெற்றிலைச் சின்னம் எந்தவொரு சிங்களக் கட்சிக்கும் சொந்தமானதல்ல. அது சிங்கள, தமிழ், முஸ்லிம் கட்சிகள் பலவற்றின் கூட்டணிக் கட்சி ஒன்றின் சின்னமாகும். வடக்கு வாழ். தமிழ் மக்களின் க்கட்சியாக அதில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியே உள்ளது எனவும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதன்மை வேட்பாளர் சி. தவராசா தெரிவித்துள்ளார்.**

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், நாம் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவது இணக்க அரசியல் என்பதற்காக மட்டுமல்ல, தமிழர்களாகிய நாம் ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து இனங்களுடனும் நல்லிணக்கமாக வாழவிரும்புகின்ற விருப்பத்தை செயற்திட்டமாக்குவதற்காகவேயாகும். எனவே எமது மக்கள், நல்லிணக்கத்துக்கான சமிக்ஞைக்காகவும், அபிவிருத்தியுடன் கூடிய உரிமைக்கான அரசியல் முன்னெடுப்புகளுக்காகவும் வெற்றிலைச் சின்னத்தை ஆதரித்து அதற்கே வாக்களிக்கவேண்டும்.

எமது அரசியல் அணுகுமுறைகள் தமிழ் மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதற்காகவும், எமது தாய் மண்ணை அழிவுகளிலிருந்து மீளக்கட்டியெழுப்பி மேம்படுத்துவதாகவும் கௌரவமானதும் நிரந்தரமானதுமான அரசியல் உரிமையை நோக்கியதாகவுமே எப்போதும் இருந்துள்ளது.

நாம் சுய இலாபங்களுக்காகவோ, தேர்தலுக்காகவோ, முரண்பாடாக எதையும் பேசுவதில்லை. வாக்குகளுக்காக விளைவுகளையிட்டு சிந்திக்காமல் உங்களை உணர்ச்சியூட்டும் விதமாகப் பேசுவதற்கு நாம் தேர்தலுக்குப் பின்னர் உங்களைவிட்டு ஓடிவிடும் அரசியல்வாதிகள் இல்லை.

நாம் உங்கள் மத்தியில், உங்களுடனேயே வாழ்பவர்கள். எனவே நாம் உண்மையே உங்களுடன் பேசமுடியும், உண்மையாகவே செயற்பட முடியும். எமது மக்கள் உண்மையானவர்களை தெரிவுசெய்ய வேண்டுமாக இருந்தால் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர்களை ஆதரித்து வெற்றிலைச் சின்னத்துக்கு வாக்களிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

## திருடப் போன இடத்தில் ஆடை திருட்டு

தென்னை மரத்திலேறி களவாக 'கள்' குடித்த இருவர் உள்ளாடையுடன் தங்களுடைய வீடுகளுக்கு சென்ற விநோதமான சம்பவமொன்று பெந்தர கங்கைக்கு அருகிலுள்ள கிராமமொன்றில் இடம்பெற்றுள்ளது. தென்னை மரத்திலேறி களவாக 'கள்' குடிப்போர் தொடர்பில் வீட்டு சொந்தக்காரர் அவதானமாக இருந்துவந்தார். இந்நிலையில் இருவர், அவருடைய தோட்டத்திற்குள் நுழைந்து தங்களுடைய உடையெல்லாம் கழற்றி வைத்துவிட்டு தென்னை மரத்திலேறியுள்ளனர். இதனை அவதானித்த வீட்டு சொந்தக்காரர் கழற்றிவைக்கப்பட்ட உடைகளை வீட்டுக்கு எடுத்துச்சென்றுவிட்டார். 'கள்' குடித்துவிட்டு மரத்திலிருந்து இறங்கியவர்கள் தங்களுடைய உடைகள் காணாமல் போனதையிட்டு அதிர்ச்சியடைந்தனர். இவர்கள் வேறுவழியின்றி உள்ளாடைகளுடன் தங்களுடைய வீடுகளுக்கு செல்லவேண்டிய நிலையேற்பட்டது.

# தீயாய் வேலை செய்யணும் குமாரு...



**பதவியிலிருந்து** ஒய்வப்பெற்றமா கொழும்பு கடற்கரையோரமாக வோக்கிங் போனமா அப்பப்ப தமிழ்ச்சங்கத்தில் கம்பனையும் கந்தசஷ்டியையும் பற்றிக் கதைத்து கொண்டிருந்தமா என இருந்த மனுசனை. குழந்தைப்பிள்ளைகளை பலவந்தமாக இழுத்துவந்து குளத்தில் விழுத்தி நீச்சல் பழக்குவதைப்போல அரசியலில் இழுத்துவந்து விழுத்தியிருக்கிறார்கள். பாவம் மனுசன். நீந்தத் தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார். அவரை யார் இழுத்துவந்த விழுத்தினார்கள் என்ற ஆராய்ச்சிகளை விட்டுவிடுவோம். அதுவா இப்பொழுது முக்கியம். ஆபத்தில் சிக்கித்தவிக்கும் தமிழீழத்தை காப்பற்ற எல்லோரும் ஓடிக் கொண்டிருக்கும் பொழுது இந்த ஆராய்ச்சியெல்லாம் ரொம்ப முக்கியம் அல்லத்தான். மகிந்த என்கிறார்கள். இந்தியா என்கிறார்கள். பிரபாகரன் இல்லை என்பது மட்டும் நிச்சயம்.

கைலாசமலையை பற்றியும், பேரின்பப் பெருவாழ்வு பெறுவது பற்றியும் பேசிக் கொண்டிருந்தவரை கொண்டுவந்து மண்கிண்டி மலையையும், இனப்பிரச் சினையையும் பற்றி பேசவிட்டால் ரங் சிலிப் ஆகும்தானே. அப்படித்தான் ஆனது. அடிக்கடி சிலிப் ஆகிக்கொண்டிருக் கிறது. ஆரம்பத்தில் ஒருமுறை சிலிப் ஆகி. ஜனாதிபதியுடன் இணக்கமாக பேசித்தான் எதனையும் பெற்றுக் கொள்ளலாம் என்றார். உசைன் போல்ட் வேகத்தில் தமிழீழத்தை எடுக்க ஓடிக் கொண்டிருந்த கூட்டாளிகள் எல்லோரும் வெலவெலத்து நின்று விட்டார்கள். அட இவ்வளவு குழந்தைப்பிள்ளையா இருக்கிறியளே. "தீயாய் வேலை செய்யணும் குமாரு" எனச் செல்லமாக நுள்ளி. கையை பிடித்து இழுத்துக்கொண்டு மீண்டும் ஓடத் தொடங்கிவிட்டார்கள். அவரும் வாயில் நுரைதள்ள ஓடிக் கொண்டிருக்கிறார். கையைப் பிடித்து நடத்தியும் நடக்காவிட்டால் பிறகென்ன? வட்டச்செயலாளர் வண்டுமுருகன் றேஞ்சிலாவது ஏதோ ஓடிக் கொண்டிருக்கிறார். எதிர்க்கட்சி காரங்களெல்லாம் எங்கிருந்து. எத்தனை அடி உயரத்திலிருந்து அரசியலில் குதித்தீர்கள் என்றுமட்டும் இதுவரை கேட்கவில்லையென்ற அளவில் தமிழர்கள் தங்கள் அதிர்ஷ்டத்தை மெச்சிக் கொள்ளலாம்.

எப்படியோ தனது கையை பிடித்து அழைத்து சென்று முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வைப்பதற்கு சிலர் தீயாய் வேலை செய்கிறார்கள் என்பதால் அவர் பயப்பட ஒன்றுமில்லை. அரசியலில் பழம் தின்று கொட்டை போட்டவர்களின் அட்வைஸ் அவருக்கு கிடைத்தபடியிருக்கிறது. அரசியல் ஒன்றும் பெரிய கஷ்டமான விசயம் கிடையாது. இதுவரை கோயில் பிரசங்கங்களில் செய்தது மாதிரித்தான். நல்லூர் போனால் முருகனை பற்றி கதையுங்கள். வல்லிபுரம் போனால் கிருஸ்ணரை பற்றி கதையுங்கள் என வழங்கப்பட்ட பால பாடத்தை கச்சிதமாகக் கௌவிக்கொண்டு விட்டார். வல்வெட்டித்துறை போனபோது பிரபாகரனையும், தெல்லிப்பளை போனபோது உயர் பாதுகாப்பு வலயத்தையும் பற்றி கதைத்து பொலிற்றிக்ஷில் டெவலப் ஆகி வருவதை நிரூபித்துள்ளார். நல்லவேளையாக இந்த நாட்களில் கேரளாப் பக்கம் போகவில்லை. பழ்க்கதோஷத்தில் சகிலாவை பற்றியும் கதைத்துவிடலாம்.

என்னதான் இருந்தாலும். இந்த ரங் இருக்கிறதே ரங். அது அடிக்கடி சிலிப் ஆகிக் கொண்டிருக்கிறது. இப்படித்தான் கடைசியில் சிலிப் ஆகி சீமானிடம் மாட்டிக்கொண்டு விட்டார். மூன்று மணித்தியால படத்திற்கே மூவாயிரம் பக்கத்தில் ஸ்கிரிப்ற் எழுதும் சீமான். தமிழீழத்திற்காக தன் உயிரையே தரத் தயாராக இருக்கிற சீமான்விடுவாரா? நோண்டி நொங்கெடுத்துவிட்டார்.

நடந்தது இதுதான். எங்கட பொலிற்றிக்ஷில நீங்கள் தலையிடாமல் உங்கட பிள்ளை குட்டியளை படிப்பிக்கிற அலுவலை பாருங்கோ என்ற சாரப்பட சொல்லிப்போட்டார். நான் நினைக்கிறன், பழைய டிவோஸ் கேஸ் ஏதாவது ஞாபகம் வந்திதோ என்னவோ. கணவன் -மனைவி மாதிரித்தான் சிங்களவரும் தமிழரும். எங்களுக்க ஆயிரம் பிரச்சனையிருக்கும். அடிச்சு விளையாடுவம். குத்தி விளையாடுவம். செத்துச் செத்து விளையாடுவம். தென்னிந்திய அரசியல்வாதிகளுக்கு இதுக்குள்ள என்ன வேலை என்று கேட்டுவிட்டார்.

தமிழகம் யார்? எங்கட தொப்புள் கொடி உறவல்லவா? கருணாநிதி, தங்கபாலு. வாசன் மாதிரி சில துரோகிகள் இருக்கிறார்கள்தான். அவர்களை விட்டுவிடுங்கள். நெடுமாறன், வைகோ, சீமான் ஆட்களுக்கு உரிய மரியாதை குடுத்திருக்கத்தானே வேணும். சரியோ. பிழையோ அவையள்தானே இப்ப தமிழீழத்திற்காக போராடும் ஆட்கள்.

இப்போது பார்த்தீர்களெனில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சொல்கிறதல்லவா. தமிழர்களின் விடுதலைக்காக தாங்கள்தான் போராடுகிறோம் என. அதனைத்தான் சற்று வெளிப்படையாக வேறும் சிலர் சொல்கிறார்கள். தமிழீழத்திற்காக தாங்கள்தான் போராடுகிறோம் என. ஃபாதர் இம்மானுவேல் மனசார நம்புகிறார். தான் தான் இப்பொழுது தமிழீழக் கோரிக் கையை உயிர்ப்போடு வைத்திருப்பதாக. அது மாதிரித்தான் பிரதமர் உருத்திர குமாரனும். தனது நாடு கடந்த தமிழீழ அரசு கலைந்தால் தமிழீழமே சிதறிவிடும் என நினைக்கிறார். சரவணபவனும் அதனைத்தான் சொல்கிறார். உதயன் பேப்பர் ஒருநாள் வர்ாவிட்டாலும். தமிழீழத்தை சனம் மறந்துவிடும் என. இவர்கள் எல்லாம் இப்படி இருக்கும்போது சீமான் மாத்திரம் ஏன் விட்டத்தை பார்த்தபடி படுத்திருக்க வேண்டும்? சில நடிகைகளுடன் கிசுகிசு வந்தாலும். இந்த அலு வல்கள் தவிர்ந்த மற்ற நேரங்களில் தமிழீழத்திற்காக தான்தான் போராடு கிறேன் என அவர் கற்புரமடித்து சத்தியம் செய்கிறார். முன்னாள் சபாநாயகர் காளி முத்துவின் மகளை அவர் திருமணம் செய்ததே தமிழீழத்தை பெற்றெடுப்பதற்காகத்தான் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புத்தான் இப்பொழுது விடுதலை தேரின் வடத்தை பிடித்து இழுக்கினம் என்றாலும், விக் னேஸ்வரன் என்னதான் முதலமைச்சர் வேட்பாளர் என்றாலும் அடிமடியில் கைவைத்தால் யார்தான் விடுவார்கள்?

சீமான் இரண்டுநாள் தின்னாமல் குடிக் காமல் இருந்து யோசித்து ஒரு அறிக்கை தயாரித்துவிட்டார். ஆறேழு பக்கத்தில் இருந்த அந்த அறிக்கை எப்படியிருந்த தென ஒரு வரியில் சொன்னால். தேர்தல் பரப்புரையில் நிற்க இருக்க நேரமில்லாமல் ஓடிக் கொண்டிருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரை அப்பிடியே கொத்தோடு கொண்டுவந்து ஒரு இடத்தில் உட்கார்ந்து விக்னேஸ்வரனது கருத்திற்கு வரிக்கு வரி விளக்கம் சொல்லவைத்தது. நாளையே அமலாபால் ஏதாவது பிரச்சனையை கிளப்பினால் மாகாண சபை அமர்வையே ஒத்திவைத்துவிட்டு. அதற்கும் இந்த போராளிகள் விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்கலாம்.

தமிழக அரசியல்வாதிகள் பற்றிய தனது திரித்து வெளியிடப்பட்டுள்ளது என உட்கார்ந்திருந்த இடத்திலேயே அந்தர்பல்டி அடித்துவிட்டார். போதாததற்கு. நீங்கள் இல்லாமல் நாங்களா, தொப்புள்கொடி உறவு, உங்கள் அனுசரணையுடன் விடுதலைப்போர் என இடையிடையே மானேதேனே போட்டும் விட்டார். விசயம் முடிந்தது.

நடந்த சம்பவங்கள் கொஞ்சம் டமேஜை ஏற்படுத்தலாம் என நினைத்தாரெனில். ஒருமுறை அவர் முள்ளிவாய்க்கால் சென்றுவரலாம். முன்னர் ஆலயங்களில் பிரசங்கம் செய்யும்போது காசிக்கு செல்வது பற்றி பேசியிருப்பார். இப்பொழுது முள்ளிவாய்க்கால் செல்வது பற்றி பேசுகிறார். இடமா முக்கியம்? மேற்றர்தானே முக்கியம். பிறகென்ன. அவர் பிராயச்சித்தம் பெற்றுவிடுவார்.

கொத்துக்குண்டின் வாசனைகளுக்கு மத்தியில் எங்கள் அண்ணனின் சந்தன வாசத்தை முகர்ந்தேன் என சீமான் ஒரு சென்டிமென்ட் அறிக்கைவிடலாம். பிறகென்ன, தம்பி படம் மாதிரியே படம் சுபமாக முடியும்.

வாரமலர்
# தினமுரசு

த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com


## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## தொடர் தோல்விகள் இனியும் வேண்டாம்!

வடக்கு மாகாண சபைக்கான தேர்தலுக்கு இன்னும் இரண்டு நாட்களே இருக்கின்றன. வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களுக்கான தேர்தல்களும் நடைபெறவுள்ளபோதும் வட மாகாண சபைக்கான தேர்தலின் முடிவு இலங்கை அரசியலின் முக்கியமான முடிவாக எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைந்த மாகாணமாக முதலில் தமிழ் மக்களுக்கே மாகாண சபையை அனுபவிக்கும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றது.

அதைப் புலிகள் இயக்கம் நிராகரித்ததோடு, தமிழீழக் கோரிக்கையை மழுங்கடிக்கச் செய்யும் இந்தியாவின் சதி என்றும் வர்ணித்தனர். மாகாண சபையைப் பொறுப்பேற்ற ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கமோ அந்த அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தது.

பின்னர் மாகாண சபை அதிகாரத்தை வடக்கு - கிழக்கு மக்கள் தவிர்ந்த ஏனைய மாகாண மக்கள் கடந்த இருபத்தி ஐந்து வருடங்களாக அனுபவித்துவருகின்றனர்.

புலிகள் கிழக்கு மாகாணத்திலிருந்து அகற்றப்பட்ட பின்னர் கிழக்கு மாகாண சபையை அந்த மக்கள் தமக்கான அதிகார மையமாகக் கொண்டு செயற்படுத்தத் தொடங்கினார்கள்.

இப்போது வட மாகாண மக்களுக்கு அந்தப் பொன்னான வாய்ப்பு கிடைத்துள்ளது. வடக்கு மாகாண மக்கள் வடக்கு மாகாண சபையின் நிர்வாகத்தை யாரிடம் ஒப்படைத்தால் அதன் உச்சப்பயன்களை அனுபவிக்க முடியும் என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

வட மாகாண மக்களுக்கு இரண்டு தெரிவுகளே இருக்கின்றன. ஒன்று தேசியம், தன்னாட்சி என்று வீரவசனங்கள் பேசி வாக்குகளைப் பெற்று கிடைக்கப் பெறும் அதிகாரங்களை எதிர்ப்புக் கோஷம் உச்சரிக்கும் ஓர் ஆயுதமாக வைத்துக் கொள்வது. இவர்கள் நிர்வாக மையங்களை செயற்படுத்தும் ஆற்றல் இல்லாதவர்கள் அல்லது அதற்கான சிறந்த வழிகாட்டல் இல்லாதவர்கள். இதற்கு கண்ணுக்கு முன்னால் இருக்கும் ஆதாரங்களாக எதிர்ப்பு அரசியல் நடத்துவோரின் வசமிருக்கும் உள்ளூராட்சி சபைகளைக் குறிப்பிடலாம்.

இரண்டாவது தெரிவு கிடைக்கப் பெற்ற அதிகாரங்களை அரசுடனான இணக்க அரசியல் என்னும் வாய்ப்பைப் பயன்படுத்தி, அதன் அதிகார மையங்களின் பலாபலன்களை அதுசார்ந்த மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கின்ற அரசியலாகும். இதற்கு உதாரணமாக தீவக உள்ளூராட்சி சபைகளைக் குறிப்பிடலாம்.

எதிர்ப்பு அரசியல் எனும்போது அது தமிழ் தேசியக் கூட்டமைப்பினரைக் குறிப்பிடுகின்றது. இணக்க அரசியல் என்று கூறும்போது அது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயற்பாடுகளைக் குறிப்பிடுகின்றது.

தமிழ் மக்கள் மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல் நன்றியுணர்வுடன் சிந்திப்பார்களேயானால், வடக்கு மாகாண சபை துயரம் நிறைந்த அழிவுக்கும், துன்பத்திற்கும் முகங்கொடுத்து நிற்கும். தமிழ் மக்களுக்கு சர்வரோக நிவாரணியாக அமையும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# தலைவிதியைத் தீர்மானிக்கும் புள்ளடி ? யாருக்கு




**“அடிப்படைத் தேவைகள் பற்றிய எதிர்பார்ப்புகள் குறைவான வாக்காளர்களை ஒப்பீட்டளவில் அதிகமாகக் கொண்ட யாழ். மாவட்டத்தில் கூட்டமைப்பினால் வெளிப்படுத்தப்பட்டுவருகின்ற உணர்வு ரீதியான சிலாகிப்புக்களுக்கு இன்னும் ஓரளவு ஆதரவு இருக்கவே செய்கின்றது. எனினும் கூட்டமைப்பின் அண்மைக் கால செயற்பாடுகள் அவர்களது நிரந்தர வாக்கு வங்கிகளில் தடுமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அவற்றில் கணிசமானளவு ஊசலாடும் வாக்குகளாக மாறி இருக்கின்றது.”**

**எதிர்வரும்** 21ஆம் திகதி வடக்கு, மத்திய மாகாணம், வடமேல் மாகாணங்களுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. தென்னிலங்கை அரசியலில் பலமான எதிர்க்கட்சியின்மை, ஆளுங்கட்சிக்கு இருக்கின்ற மக்கள் செல்வாக்கு போன்ற காரணங்களினால் வடமேல் மாகாண சபையை ஆளுங்கட்சி சவால் இன்றி கைப்பற்றுகின்ற சூழலே காணப்படுகின்றது.

மத்திய மாகாண சபையைப் பொறுத்தவரையில் மலையகத் தமிழ் மக்களின் செல்வாக்கு மிக்க பிரதேசமாக இது காணப்படுகின்றது. எனினும் மலையக மக்களை பிரதிநிதிப்படுத்தும் பல தரப்புக்கள் ஆளுந்தரப்புடன் இருப்பதால் அங்கும் ஆளுங்கட்சியின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றாகவே இருக்கின்றது.

பலத்த எதிர் பார்ப்பை ஏற்படுத்தியிருப்பது வட மாகாண சபைத் தேர்தலாகும். எனவே மக்களின் தீர்ப்பு எப்படி இருக்கப் போகின்றது என்பதை நாமும் சற்று ஆழமாகப் பார்க்கலாம்.

ஆயுதக் கலாசாரமும், ஆயுதப் பலத்தின் அபிலாஷைகளை தீர்க்கும் நிர்ப்பந்தங்களற்ற ஜனநாயகச் சூழலுக்கு திரும்பிய பின்னர் வடக்கு மக்கள் இதுவரை மூன்று தேர்தல்களைச் சந்தித்துள்ளனர். ஜனாதிபதி தேர்தல் (2010), நாடாளுமன்றத் தேர்தல் (2010), உள்ளூராட்சித் தேர்தல் (2011) என்பவையே அந்த மூன்று தேர்தல்களுமாகும்.

குறித்த தேர்தல்களின் வாக்களிப்பு விபரங்கள், அதன் பின் ஏற்பட்ட மாற்றங்கள் என்பவற்றை பார்ப்பதன் ஊடாக தற்போது மக்களின் உணர்வுகள் எவ்வாறு இருக்கும் என்று ஓரளவு ஊகிக்கக் கூடியதாக இருக்கும்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவை பிரதான கட்சிகளாகவும் மேலும் சில சுயேட்சைக் குழுக்களும் களத்தில் இருக்கின்றன.

சுயேட்சைக் குழுக்கள் பெரும்பாலும் வாக்குகளை சிதறடிக்கும் நோக்குடனேயே களம் இறக்கப்படுகின்றன. அதற்கு - சமூகத்தில் நன் மதிப்புள்ள, அறியப்பட்ட முகங்களை வேட்பாளர்களாக நிறுத்தவேண்டும். ஆனால் இங்கே அப்படிப்பட்ட முகங்கள் எதனையும் காணவில்லை. பிரதான கட்சிகளில் ‘லாயக் கற்றவர்கள்’ என்று கழட்டி விடப்பட்ட பிரமுகர்களே முகம் காட்டுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. எனவே சுயேட்சைக் குழுக்களின் தாக்கம் வடக்குத் தேர்தலில் பெரிதாக இருக்கப் போவதில்லை.

மூன்றாவது சக்தியாக ஐ.தே.க. இருக்கின்றது. அதன் முதன்மை வேட்பாளராக தி.துவாரகேஸ்வரன் போட்டியிடுகின்றார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனின் சகோதரர் என்பதைத் தவிர குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எந்த அரசியல் பின்னணியும் அற்றவர் துவாரகேஸ்வரன். தனது வாய்வீச்சாலும் துறுதுறுப்பாலும் ஓரளவு அறியப்பட்டுள்ளார். இவருடன் காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் பாலா போட்டியிடுகின்றார். பல ஆண்டுகளாக நுவரெலியாவில் வியாபாரம் செய்துவந்த பாலா, மறைந்த அமைச்சர் சந்திரசேகரனுடன் நெருக்கமானவர். ம.ம.மு. சார்பில் நுவரெலியாவின் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டவர். இவர்கள் இருவருமே காரைநகர் பிரதேச வாக்காளர்களை நம்பிப் போட்டியிடுகின்றனர். ஏனையவர்கள் அனுபவமற்ற புதுமுகங்கள். அவர்களது குடும்ப வாக்குகள்கூட அவர்களுக்கு கிடைக்கும் என்பது சந்தேகமே, எனினும், வடக்கைப் பொறுத்தவரையில் ஐ.தே.க.விற்கு ஒரு வாக்கு வங்கி இருக்கின்றது. அதனை ஐ.தே.க. பெற்றுக்கொள்ளுமாக இருந்தால் ஒரு ஆசனத்தை எதிர்பார்க்கலாம்.

ஆளும் ஐ.ம.சு.மு., கூட்டமைப்பு ஆகிய இரண்டுமே கடுமையான போட்டியைச் சந்திக்க இருக்கின்றன. இறுதியாக நடந்த 3 தேர்தல்களை வைத்துப்பார்க்கும்போது யாழ். மாவட்டத்தில் சுமார் 50000க்கு மேற்பட்ட வாக்குகளை ஐ.ம.சு.மு. பெற்றுவருகின்றது. அவை ஈ.பி.டி.பி.யினுடைய நிரந்தர வாக்குகளாகவே இருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் கூட்டமைப்பின் ஆதரவைப்பெற்ற சரத் பொன்சேகாவிற்கு யாழ்ப்பாணத்தில் சுமார் 113,000 வாக்குகள் கிடைத்திருந்தது. பின்னர் நாடாளுமன்றத் தேர்தலில் 65,119 வாக்குகள் கூட்டமைப்பு பெற்றுக்கொண்டது. இறுதியாக உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 124,967 வாக்குகளை கூட்டமைப்பு பெற்றுக்கொண்டது.

வன்னி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் (கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார்) ஐ.ம.சு.மு.வின் வாக்குகள் அதிகரித்துச் செல்வதை தரவுகள் காண்பிக்கின்றன. அதே வேளை கூட்டமைப்பின் வாக்கு வங்கி வீழ்ச்சியைச் சந்தித்து வருகின்றது.

இந்தப் பின்னணியில், கடந்த 2 வருடங்களில் வடக்கு மக்களின் மனங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் வடக்கு மாகாண சபையில் பிரதிபலிக்கப்போகின்றன.

பொதுவாக எந்தவொரு தேர்தலிலும் வாக்காளர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

01. **நிரந்தர வாக்கு வங்கி**
குறிப்பிட்ட கட்சியின் நிரந்தர ஆதரவாளர்கள், அபிமானிகள், உறுப்பினர்கள் இதில் அடங்குவர்.

02. **ஊசலாடும் வாக்கு வங்கி**
வாக்களிப்பு நாள் நெருங்கும் போது நிலைமைக்கு ஏற்ப முடிவு எடுப்பவர்கள், பிரசாரங்களுக்கும் - வாக்குறுதிகளுக்கும் விலைபோகக் கூடியவர்கள், தெரிந்தவன் - ஊரவன் - ஒரே சமூகத்தவன் போன்ற குறுகிய சிந்தனைகளுக்கு இடம்கொடுப்போர், பெற்றுக்கொண்ட உதவிகளுக்கு பிரதியுபகாரம் செய்ய விரும்புவோர் போன்றோர் அடங்குவர்.

இங்கே யாழ். வாக்காளர்களின் முடிவுகளை தீர்மானிக்கின்ற காரணிகளும், வன்னி மக்களின் தீர்மானங்க ளில் தாக்கம் செலுத்துகின்ற காரணங்களும், வேறுபட்டு இருப்பதால் அவற்றை தனித் தனியாகப் பிரித்துப் பார்ப்பது புரிந்துகொள்வதற்கு இலகுவானதாக இருக்கும்.

கடந்த கால ஆயுதப் போராட்டத்தின் வலிகள், இழப்புக்கள், அத்தனையையும் நேரடியாகச் சுமந்தவர்கள் இவர்கள். வாழ்வை அடிப்படையிலிருந்து மீளக்கட்டியெழுப்ப வேண்டிய தேவையை யுத்தம் கடந்த காலங்களில் பெற்றுக் கொடுத்திருந்தது. அடுத்த தலைமுறையின் கௌரவமான வாழ்விற்காக, நாள்தோறும் போராடிக்கொண்டிருக்கின்ற இந்த மக்களிடம் தேசியம், சுயநிர்ணயம் போன்ற உணர்வுரீதியான சிந்தனைகள் வலுவிழந்துவருகின்றது. ஒரு காலத்தில் மோசமான முறையில் உணர்வுரீதியாக தூண்டப்பட்டிருந்த வன்னி மக்களுக்கு அவை பெற்றுக்கொடுத்த வலிகளும், தற்போது இருக்கின்ற தேவைகளும் இணக்க அரசியலின் அவசியத்தையும், தேவையையும் உணர்த்துகின்றது.

அதேவேளை, வேலை தேடிச் சென்ற இளம் யுவதிகளுக்கு விபச்சாரிகள் என்ற பட்டம் சூட்டியதைத் தவிர, கடந்த 2 வருடத்தில் அந்த மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையிலான எவ்வித செயற்பாடுகளையும் கூட்டமைப்பினர் மேற்கொண்டிருக்கவில்லை. இந்நிலையில், மேற்கொள்ளப்பட்டுவருகின்ற அபிவிருத்திப் பணிகள், வீட்டுத் திட்டங்கள், நிவாரண உதவிகள், போன்றன அரசாங்கத்தின் மீது ஒரு நம்பிக்கை அலையை உருவாக்கிக்கொண்டு இருக்கின்றது.

குறிப்பாக, ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரினால் கிளிநொச்சிப் பிரதேசத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தித் திட்டங்கள், அரசியல் செயற்பாடுகள் என்பன மக்கள் மத்தியில் பெரிதாகப் பேசப்படுகின்றன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல்பீடம், சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதானம் என்பவையெல்லாம் தமது எதிர்காலத்துக்கான அடிப்படை என மக்கள் கருதுகின்றனர். மறுபுறத்தில் அமைச்சர் றிசாட் பதியுதீனின் செயற்பாடுகள் முஸ்லீம் வாக்காளர்களை ஈர்க்கின்றது. இவையெல்லாம் ஐ.ம.சு.மு.வினுடைய வாக்குகளாக மாறுவதற்கு சந்தர்ப்பங்கள் நிறையவே இருக்கின்றது.

அடிப்படைத் தேவைகள் பற்றிய எதிர்பார்ப்புகள் குறைவான வாக்காளர்களை ஒப்பீட்டளவில் அதிகமாகக் கொண்ட யாழ். மாவட்டத்தில் கூட்டமைப்பினால் வெளிப்படுத்தப்பட்டு வருகின்ற உணர்வு ரீதியான சிலாகிப்புக்களுக்கு இன்னும் ஓரளவு ஆதரவு இருக்கவே செய்கின்றது. எனினும் கூட்டமைப்பின் அண்மைக்கால செயற்பாடுகள் அவர்களது நிரந்தர வாக்கு வங்கிகளில் தடுமாற்றத்தை ஏற்படுத்தியருக்கின்றது. அவற் றில் கணிசமானளவு ஊசலாடும் வாக்குகளாக மாறியிருக்கின்றது.



(தொடர்ச்சி 21ஆம் பக்கம்)


-சிவன்-




**2009 மே 19இற்குப் பின்னர் வட மாகாணத்தில் நடைபெற்ற தேர்தல்களில் யாழ், வன்னியில், பிரதான கட்சிகள் பெற்ற வாக்குகள்**

| | ஐ.ம.சு.மு | | கூட்டமைப்பு | | ஐ.தே.க | |
|---|---|---|---|---|---|---|
| | யாழ். | வன்னி | யாழ். | வன்னி | யாழ். | வன்னி |
| ஜனாதிபதித் தேர்தல் (2010) | 44.154 | 28740 | 113 377 | 70364 | - | - |
| பாராளுமன்றத் தேர்தல் (2010) | 47.622 | 37522 | 65119 | 41673 | 12624 | 12783 |
| உள்ளூராட்சி தேர்தல் (2011) | 47.067 | 44.492 | 1.24962 | 65658 | 3756 | 3795 |



# வீரத்தாயின்... அவலம்...

ஆனால் ஒண்டெண்டாலும் என்னோடை இருக்கலாம்... என்ற சின்ன வருத்தம் எப்போதும் இதயமூலையில் வலியைக் கொடுத்தபடியே இருந்தது.

2000ஆம் ஆண்டு அம்மாவும் பிள்ளைகள் போன வழியில் மெல்லத் தன்னையும் இணைத்துக் கொண்டாள். 2001 சமாதானக் கதவுக்ள் திறபடும் அத்தியாயத்தை எழுதிய பெருஞ்சமரில் ஒன்றான வடமுனையை உலகெல்லாம் திரும்பிப் பார்க்க வைத்த தீச்சுவாலை நடவடிக்கையில் அம்மாவின் மூத்தவள் காயமடைந்தாள்.

விழுப்புண்ணடைந்த மகளுக்கு மருத்துவம் பார்க்க அம்மாவும் போனாள். அங்கே அவள் போன்ற பல பிள்ளைகள் அம்மாவின் மகள்களாயினர். அம்மாவிற்கு அந்த உலகம் பிடித்திருந்தது. அம்மா செய்யாத செய்யத் துணியாத எத்தனையோ வெற்றிகளைச் செய்துவிட்டு அங்கே அம்மாவின் குழந்தைகள் இருந்தார்கள். அவர்களுக்குத் தனது காலங்கள் பற்றியெல்லாம் கதை சொல்லுவாள்.

ஒரு பெரிய பொறுப்பாளரின் அம்மாவென்ற எண்ணம் ஏதுமில்லாத ஒரு சாதாரண அம்மாவாய் அவர்களோடு அம்மா ஒன்றாகினாள்.

ஆடி 2001 கொழும்பைத் தாக்கிய புலிகளணியின் வெற்றி பற்றி அம்மாதான பிள்ளைகளுக்கு ஓடியோடிச் செய்தி சொன்னாள். தானே கட்டுநாயக்காவில் நின்று தாக்குதல் செய்தது போலிருந்தது அம்மாவின் ஆரவாரம். அம்மாவின் கடைக்குட்டி கரைந்த தெருவில் ஒருநாள் காலாற நடந்து அவள் கடைசி மூச்சின் வாசனையை நுகர வேணுமென நினைத்துக் கொண்டாள்.

2002 பெப்ரவரி சமாதான ஒப்பந்தம் எழுதப்பட்டது. எல்லா அம்மாக்களைப் போல அம்மாவும் நம்பினாள். இனிச் சண்டையில்லை சமாதானமென்று. ஒரு பொழுது அன்னியத் தெருவில் காற்றோடு காற்றாய் கலந்த சின்னவள் கடைசியாய் தன்னுயிரை வீசிய தெருவைப் பார்க்க ஆசைப்பட்டாள் அம்மா. அம்மாவின் ஆசையும் ஒருநாள் நிறைவேறியது. சின்னவளை கடைசியாக வழியனுப்பியவன் அம்மாவை அவள் கரைந்த தெருவிற்கு கூட்டிப்போனான்.

அம்மாவின் செல்லக்குழந்தை கரைந்த தெருவில் அன்னியமொழியும் அன்னியப் பழக்க வழக்கங்களும் சிந்திக்கிடந்தது. ஒரு தடையை உடைத்து வெற்றியைக் கொடுத்து பேருமில்லை கல்லறையுமில்லாமல் கரைந்தவளின் நினைவில் கரைந்து ஊர் திரும்பியதிலிருந்து சின்னவள் கலந்த தெருவே அம்மாவை இடைஞ்சல்படுத்திக் கொண்டிருந்தது. அந்த நினைவுகளிலிருந்து விடுபட அம்மாவுக்கு பலமாதங்கள் சென்றது.

சின்னவள் கரைந்த நாளைக்கேட்டு அவளுக்காக அம்மா விளக்கெரிக்கத் தொடங்கினாள். ஊமையாய் அம்மா இரவுகளில் வடித்த கண்ணீர் பகலில் பெண்போராளிகளுடன் புன்னகைத்தபடி வேலையில் நிற்பா.

போராளிகளுடனான அம்மாவின் வாழ்வு முள்ளிவாய்க்கால் வரையாகி 18.05.2009 ஓய்ந்து போனது. கண்ணீரோடு கடைசிவிடைபெற்றுப் போன அம்மா நேசித்த பிள்ளைகளின் பிரிவோடும் துயரோடும் அம்மா அந்தரித்தாள்.

மோனை வாணை நாங்களும் போவம்.... நான் வரேல்ல நான் குப்பிடியடிக்கப் போறன்.... இவ்வளவு பேரையும் சாகக் குடுத்திட்டு எங்கேயணை வரச்சொல்றீங்கள்? மூத்தவள் அம்மாவுடன் இப்படித்தான் முரண்டுபிடித்தாள். என்ரை குஞ்சு அம்மாக்கு நீ மட்டும்தானணை மிச்சம்.....வா ராசாத்தி எல்லாரும் தான போகினம் நாங்களும் போவம்......

அம்மாவின் கண்ணீரும் அம்மா நேசித்த அம்மாவின் மூத்தவள் வளர்த்த பிள்ளைகளின் கண்ணீரும் அம்மாவின் மூத்தவளை உயிர் காத்து ஓமந்தையில் நிறுத்தியது.

ஒருகாலம் மூத்தவளை அக்காவென்றவர்கள் அவள் பெயரைச் சொல்லியழைத்து தலையாட்டிகளாய் அவளைச் சிறைக்கனுப்பிய துயரம் அம்மாவால் மறக்க முடியாத துயரமாய் தொடர்கிறது.

ஓமந்தையில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட மூத்தவள் தான் இப்ப அம்மாவை அதிகம் வாட்டுகிற துயரமாகிப்போனாள். மகள் சிறைவாசம் முடித்து வர அவளுக்கொரு கலியாணம் கட்டி வைக்க வேணுமெண்டது அம்மாவின் கனவு. ஒவ்வொரு முறையும் மூத்தவளைக் காண கொழும்பு போகிறபோதெல்லாம் விடைபெறச் சில நிமிடங்கள் திருமணம் பற்றித்தான் சொல்லியழுது விட்டு வருவாள்.

அம்மாவின் மகள் தன்சகபோராளிகள் எத்தனையோ பேருக்கு திருமணம் செய்து வைத்தாள். ஆனால் தனக்கொரு துணையை அவள் தேடாமல் விட்டது பற்றி அம்மாவுக்குச் சரியான கவலை.

எணயம்மா 40வயதாகீட்டுதணை இந்தா பாரணை எத்தின நரைமுடி இனி எனக்கொரு மாப்பிளை தேடி நான் கலியாணங்கட்டி...சும்மா போணை.... அம்மாவின் திருமணக்கதை கேட்டால் இப்படித்தான் அலுத்துக் கொள்வாள் மூத்தவள். ஆயினும் மூத்தவளுக்கு திருமணம் முடித்து வைத்துவிட்டே தான் கண்மூடுவேனெண்ட வைராக்கியத்தோடு அம்மா காத்திருக்கிறாள்.

அன்று சனிக்கிழமை. வெளியில் மழை ஓயாது பேயடையாகப் பெய்து கொண்டிருந்தது. அம்மாவின் வசந்தமாளி கையையும் அள்ளிக் கொண்டு போய் விடுமோ என்ற கணக்கில் வெளியில் வெள்ளக்காடாயிருந்தது.

(தொடரும்)



# புலிகளின் வதை முகாமில்

வதை 79

## மணியம்

**பயிற்சி முகாம் என்றதும் இன்றைய தலைமுறையினர் உடனடியாக ஆயுதப் பயிற்சி முகாம் பற்றியே எண்ணுவர். அதற்குக் காரணம் கடந்த 30 வருடங்களாக அவர்கள் அனுபவித்து** வந்த யுத்தச் சூழல். 1960களின் நடுக்கூறிலிருந்தே இலங்கையில் உழைக்கும் வர்க்கத்தின் ஆட்சியொன்று அமைய வேண்டுமானால், அது ஆயுதம் தாங்கிய புரட்சி ஒன்றின் மூலமே சாத்தியப்படும் என. எமது புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே பிரசாரம் செய்துவந்த போதிலும், அதற்கான ஒரு சிறு தயாரிப்பிலும்கூட அது ஈடுபட்டிருக்கவில்லை. (அதையும் ஒரு பிரதான காரணமாகச் சொல்லியே எமது கட்சியிலிருந்து சென்ற ரோகண விஜேவீர தமது மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) இயக்கத்தை உருவாக்கி இருந்தார்.)

இங்கு நான் குறிப்பிடும் பயிற்சி முகாமும் வெறுமனே ஓர் அரசியல் பயிற்சி முகாம் மட்டுமே. இது அக்கராயன் பகுதியிலுள்ள கோணாவில் மத்தியதர வகுப்புக் குடியேற்றத் திட்டத்தில் 70ஆம் இலக்க வயல் காணியில் அமைந்திருந்தது. இந்த வயல் காணி 10 ஏக்கர்கள் விஸ்தீரணம் கொண்டது. அக்கராயன் குளத்திலிருந்து நீர்ப்பாசனம் செய்யப்பட்டது. இதுதவிர, இதனுடன் சேர்த்து 5 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட மேட்டுக் காணியும் வேறு ஒரு இடத்தில் வழங்கப்பட்டிருந்தது. அது நாம் அங்கு பயிற்சி முகாம் அமைத்த போது துப்பரவு செய்யப் படாமல் காட்டுக் காணியாக இருந்தது.

இந்தப் பகுதியிலுள்ள காணிகள் அனைத்தும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வசதிபடைத்த உயர் அரசாங்க அதிகாரிகளுக்குச் சொந்தமான வையாக இருந்தன. காணிச் சொந்தக்காரர்களில் சிலர் மட்டுமே ஆட்களை வைத்து அதில் விவசாயம் செய்தனர். பெரும் பாலோர் அவற்றைக் குத்தகைக்குக் கொடுத்திருந்தனர். அவற்றில் வடபகுதியைச் சேர்ந்த ஏழை மக்களும், மலையகத்தைச் சேர்ந்த இந்திய வம்சாவழி உழைப்பாளி மக்களும் கூலிகளாக வேலை செய்தனர்.

எமது 70ஆம் இலக்கக் காணி டாக்டர் குரோசற் தம்பையா அவர்களுக்குச் சொந்தமானது. யாழ்ப்பாணத்திலுள்ள செல்வாக்குப் பெற்ற தம்பையா குடும்பத்தைச் சேர்ந்த அவர் கம்பஹாவில் வைத்தியசாலை ஒன்றை நடாத்திவந்தார். அவர் அத்தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரான தோழர் எஸ்.டி. பண்டாரநாயக்கவுடன் நெருங்கிய நட்புணர்வைக் கொண்டிருந்ததுடன், எமது கம்யூனிஸ்ட் கட்சியின் அதாபியாகவும் இருந்தார். எனவே எமது பயிற்சி முகாம் திட்டத்தைச் சொன்னவுடனும், எவ்வித குத்தகைப் பணமும் வாங்காமல் தமது 15 ஏக்கர்கள் காணியையும் எம்மிடம் மனமுவந்து ஒப்படைத் தார். உண்மையில் அந்தக் காணியைப் பெறுவதிலும், அந்த முகாமை நிறுவுவதிலும் எமது கட்சியின் அப்போதைய வட பிரதேசச் செயலாளர் தோழர் வீ.ஏ. கந்தசாமி முக்கிய பங்குவகித்தார். (இந்த முகாம் அமைத்ததை விரும்பாத கட்சியின் பொதுச்செயலாளர் நா.சண்முகதாசன், 1972இல் கட்சி பிளவுபட்டு நாமும் அவரும் வேறு அணிகளான போது, எமக்கு எதிராக அவர் வெளியிட்ட 18 பக்க அறிக்கையில் தோழர் வீ.ஏ.கந்தசாமியும் நாமும் கிளிநொச்சிப் பிரதேசத்தில் 'நக்சல்பாரி' வேலைமுறையை உருவாக்க முனைந்ததாகக் குற்றஞ்சாட்டியிருந்தார்)

இந்தக் காணியில் நாம் பயிற்சி முகாமை அமைத்ததின் நோக்கம், புதிதாக எம்முடன் இணையும் இளைஞர்களுக்கு அரசியல் தலைமைத்துவப் பயிற்சி வழங்குவதே. அரசியல் வகுப்புகளை தோழர் வீ.ஏ. கந்தசாமியும், எம்மில் சிலரும் எடுத்தோம். பகலில் எமது வயலிலும், மேட்டுக்காணியிலும் வேலைகளில் ஈடுபடுவதுடன், மற்றைய நேரங்களில் அங்குள்ள ஏனையோரின் வயல்களிலும் எமது தோழர்கள் உழைப்பில் ஈடுபடுவர். இரவில் சுமார் இரண்டு மணி நேரம் மார்க்சிய நூல்களைக் கற்பதிலும், அவற்றைப் பற்றிய கலந்துரையாடல்களிலும் ஈடுபடுவர். அதன்பின்னர் முறை வைத்து எம்மிடம் இருந்த சாதாரணதர துப்பாக்கிகளைக் (shot gun) கொண்டு வேட்டைக்குச் செல்வர்.

இந்த முகாமில் பெரும்பாலும் வெளியிடங்களைச் சேர்ந்த புதிய தோழர்களே வந்துதங்கியிருந்து அரசியல் பயிற்சிபெற்றனர். குறிப்பாக நெல்லியடி, கரவெட்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களும், விவசாயப்படை கலைக்கப்பட்டபின்னர் எம்முடன் இணைந்தவர்களும், கிளிநொச்சிப் பிரதேசத்தின் பரந்தன், உமையாள்புரம், வட்டக்கச்சி, முரசுமோட்டை போன்ற இடங்களைச் சேர்ந்தவர்களும்,பயிற்சி பெற்றனர். இவர்களில் பலர் பின்னர் கிளிநொச்சிப் பிரதேசத்தின் பெரும்பாலான கிராமங்களில் முழுநேர அரசியல் ஊழியர்களாகச் செயற்பட்டனர்.

நாம் இதை ஒரு சாதாரண அரசியல் முகாமாக நடாத்திய போதும், பொதுமக்கள் மத்தியில் அதுபற்றிப் பலவிதமான தப்பான அபிப்பிராயங்கள் நிலவிவந்தன. சிலர் அப்போததான் முளைவிட ஆரம்பித்திருந்த தமிழ் இளைஞர்களின் தீவிரவாத இயக்கங்களுடன் (தமிழ் மாணவர் பேரவை போன்றவை) எம்மை இணைத்துப் பார்த்தனர். வேறு சிலர் ஜே.வி.பிஇயக்கத்துடன் இணைத்து நோக்கினர். அந்தப் பகுதி இளைஞர்களுடன் நாம் நெருங்கிய நட்புறவை வளர்த்துக் கொண்டிருந்த போதிலும், சாதாரண மக்கள் எம்மை ஒரு பயம் கலந்த மரியாதையுடனேயே நோக்கினர்.

அங்குள்ள வயல்களுக்கு எப்போதுமே தண்ணீர்த் தட்டுப்பாடு இருந்துகொண்டே இருந்தது. ஆதலால் தண்ணீர் பாய்ச்சுவதற்கான ஒரு முறை வகுக்கப்பட்டிருந்த போதும், ஒருவர் தண்ணீர் பாய்ச்சும் போது முறையில்லாத மற்றொருவர் அதில் களவாகத் தனது வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சு வதும், தடைகள் ஏற்படுத்துவதும், வாய்க்கால்களை வெட்டிவிடுவதும் எனப்பல தகராறுகளும், சில வேளைகளில் அடிதடிச் சண்டை களும் நடப்பதுண்டு. ஆனால் எமது 70ஆம் இலக்க வயலுக்குத் தண்ணீர் பாய்கிறது என்றால், அன்றைய தினம் அங்குள்ள எல்லோருமே சுய கட்டுப்பாட்டுடன் எவ்வித இடையூறும் எமக்குச் செய்யாமல் பார்த்துக் கொள்வர்.

நாம் ஆயுதம் தாங்காத, ஆனால் கட்டுப்பாடான ஓர் அரசியல் அமைப்பாகச் செயற் பட்டதைக் கண்டே மக்கள் ஒருவித பயத்துடன் கூடிய மரியாதை செலுத்தினர் என்றால், ஆயிரக்கணக்கான போர் வீரர்களையும், அவர்களது உடம்பு முழுவதும் ஆயுதங் களாலும் அலங்கரித்திருந்த புலிகள் இயக்கத்தைக் கண்டு மக்கள் அஞ்சி நடுங்கியதில் வியப்பதற்கு எதுவும் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

பொதுமக்கள் ஒருபக்கம் எம்மைப்பற்றி பலவிதமான ஊகங்களைக் கொண்டிருக் கையில், கிளிநொச்சிப் பொலிசாரும் எம்மைப் பற்றிய தகவல்களைத் திரட்டிக் கொண்டிருப்ப தாகக் கேள்வியுற்றோம். (1971 ஏப்ரலில் ஜே.வி.பியின் முதலாவது ஆயுதக்கிளர்ச்சி நடைபெற்ற நேரத்தில், அந்த முகாமில் எங்களில் பலர் தங்கியிருந்தோம். எங்களில் 42 பேரைக் கைதுசெய்வதற்கான பட்டியல் ஒன்றை வைத்திருந்த கிளிநொச்சிப் பொலிசார், தினசரி கோணாவில் சந்தி வரை வந்து பொதுமக்களிடம் எங்களைப் பற்றி விசாரித்துவிட்டுச் சென்றனரேயொழிய, முகாமருகே வரவில்லை.

(தொடரும்...)



# நிலமெல்லாம் இரத்தம் 68

பா.ராகவன்

எத்தனை நெருக்கடி நேர்ந்தாலும் யூதர்கள் மனம் தளராமல் மீண்டும் அழிவிலிருந்து மேலேறி வந்து வாழத் தொடங்கிவிடுகிறார்களே என்கிற எரிச்சல் இன்னொரு காரணம்.

ஆனால் ஓர் இனத்தையே அழிக்குமளவுக்கு இவையெல்லாம் ஒரு காரணமாக முடியுமா?

உண்மையில், ஐரோப்பாவில் யூதர்கள் சந்திக்க நேர்ந்த கொடுமைகள்தான் அவர்களை மேலும் பலவான்களாக, மேலும் புத்திசாலிகளாக, வாழ்வின்மீது மேலும் மேலும் காதல்கொண்டவர்களாக மாற்றியது என்று சொல்லவேண்டும். பள்ளிகள் தடைசெய்யப்பட்டபோது, அவர்கள் வீட்டிலிருந்தே படித்தார்கள். யூத தேவாலயங்கள் உடைக்கப்பட்டபோது அவர்களை மறைவிடங்களுக்குப் போய் பிரார்த்தனையைத் தொடர்ந்தார்கள். வர்த்தக நிலையங்கள் சூறையாடப்பட்டபோது வீட்டில் இருந்தபடியே வியாபாரங்களை கவனித்தார்கள். வீடுகளும் உடைக்கப்பட்டபோது நாடோடிகளாகச் சென்று எங்காவது வெட்டவெளிகளில் கூடாரம் அடித்துத் தங்கி வேலையைத் தொடங்கிவிடுவார்கள். எல்லாமே எல்லை மீறும்போதுதான் அவர்கள் அதிகாரிகளை வளைத்துப் போட்டு தமக்கான வசதிகளையும் வாய்ப்புக்களையும் உருவாக்கிக் கொள்ளத் தொடங்கினார்கள்.

உலக சரித்திரத்தில் யூதர்களைக் காட்டிலும் அதிகமாக லஞ்சம் கொடுத்தவர்கள் கிடையாது. எதற்கு, எதனால் என்பதெல்லாம் முக்கியமே இல்லை. எல்லாவற்றுக்கும் கொடுத்தார்கள். வாங்குவதற்கு ஆட்கள் இருந்த இடங்களிலெல்லாம் அவர்கள் கொடுத்துக்கொண்டே இருந்திருக்கிறார்கள். பத்து, இருபதில் தொடங்கி, பல லட்சங்கள், கோடிகள் வரை கொடுத்தார்கள். அரசாங்கமும் மக்களும் அவர்களுக்குத் தராத பாதுகாப்பை அந்த லஞ்சப் பணம்தான் கொடுத்து வந்திருக்கிறது, சரித்திரமெங்கும்.

அருவருப்பானதுதான். வருத்தம் தரக்கூடிய விஷயம்தான். ஆனாலும் அவர்களுக்கு வேறெந்த வழியும் இல்லாமல் போனதற்கு ஐரோப்பிய கிருத்தவர்களே காரணமாயிருந்தார்கள்.

வசதிகளுக்காக லஞ்சம் தருவது உலகெங்கும் இருக்கும் நடைமுறை என்றாலும், வாழ்வதற்கே லஞ்சம் தரக்கூடிய சூழ்நிலையில்தான் யூதர்கள் இருந்தார்கள். இதற்காகவே அவர்கள் நிறைய சம்பாதிக்க நினைத்தார்கள். பிசாசுபோல் உழைத்தார்கள்.



பெஞ்சமின் டி' ஸ்ரேலி

புதிதுபுதிதாக இன்றைக்கு உலகம் கடைப்பிடிக்கும் எத்தனையோ பல நூதன வியாபார உத்திகளெல்லாம் யூதர்கள் தொடங்கி வைத்தவைதான். இன்றைக்கு எம்.எல்.எம். என்று சொல்லப்படும் மல்டி லெவல் மார்க்கெடிங் இந்தியாவில்கூடப் பிரபலமாக இருக்கிறது. இதெல்லாம் பதினேழாம் நூற்றாண்டிலேயே யூதர்கள் கண்டுபிடித்துவிட்ட விஷயம். இப்படியொரு பெயரை அவர்கள் தரவில்லையே தவிர, ஒவ்வொரு தேசத்துக்குள்ளும் அவர்கள் எம்.எல்.எம். வர்த்தகத்தில் கொடிகட்டிப் பறந்திருக்கிறார்கள்.

வெளிநாடுகளுக்குப் பணமாற்றம் செய்வது, ஹவாலா போன்ற வேலைகளிலும் ஈடுபட்டு நிறைய சம்பாதித்திருக்கிறார்கள். ஒவ்வொரு பைசாவையும் மிக முக்கியமாகக் கருதிய இனம் அது. வர்த்தகத்தில் நேர்மை அவர்கள் இரத்தத்தில் பிறந்த விஷயம். வர்த்தகம் தடைப்படாமல் நடப்பதற்குத் தாங்கள் லஞ்சம் கொடுப்பார்களே தவிர, மக்களை ஒருபோதும் ஏமாற்ற மாட்டார்கள். போலிச் சரக்குகளை விற்பது, சரக்குப் பதுக்கல், திடீர் விலையேற்ற நடவடிக்கைகள் இவையெல்லாம் ஐரோப்பாவில் பரவலாகிக் கொண்டிருந்தபோதுகூட, எந்த ஒரு யூதக் கடையிலும் நம்பிப்போய் என்ன வேண்டுமானாலும் வாங்கலாம். ஒரு சிறு ஏமாற்றம்கூட இருக்காது!

இவை ஒருபுறமிருக்க, பத்தொன்பதாம் நூற்றாண்டில் யூத குலத்தில் சில மகத்தான சாதனையாளர்கள் உதிக்க ஆரம்பித்தார்கள். எந்தத் துறையில் இருக்கிறார்களோ, அந்தத் துறையின் மிக உயர்ந்த இடத்தை அடையக்கூடியவர்களாக அவர்கள் இருந்திருக்கிறார்கள். பொதுவாக யூதர்களுக்கு இழைக்கப்பட்ட எந்த ஒரு கொடுமையும் அவர்களின் வளர்ச்சியைத் தடுக்கவில்லை.

இந்தச் சாதனையாளர்களை வளைத்து, அரவணைத்து அவர்களின் வெற்றிக்காக உழைக்கக்கூடியதாக இருந்தது யூதகுலம். சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும். நாம் ஒரு சாதனை செய்யக்கூடியவர்களாக இருக்கிறோம் என்றால் நமது குடும்பம் நம்மை ஊக்கப்படுத்தலாம். உற்சாகப்படுத்தலாம். ஒருவேளை மாநில அரசு கவனித்து ஏதாவது உதவலாம். சாதனை செய்யப்பட்ட பிறகு தேசம் கொண்டாடலாம். பெருமைப்படலாம். ஆனால் ஒரு சாதனையாளர் உருவாகிக் கொண்டிருக்கிறார் என்று கவனித்து, அந்த இனத்திலுள்ள அத்தனை பேருமே தோள்கொடுக்க முன்வருவார்களா?

யூதர்களிடம் மட்டும்தான் அது சாத்தியம். ஒரு யூதர் அரசியல்வாதியாக வருகிறார் என்றால் ஒட்டுமொத்த யூதர்களும் அவரை மட்டுமே ஆதரிப்பார்கள். சுத்தமாகப் பிடிக்காது என்றால்கூட. யாராவது ஒரு யூதர் கல்லூரிப் பேராசிரியர் ஆகிறார் என்றால் அங்குள்ள அத்தனை யூதர்களும் அவருக்குப் பின்னால் திரண்டு நிற்பார்கள். ஒருவர் அறிவியலில் முன்னேறுகிறார் என்றால் அவரது ஆராய்ச்சிக்காக ஒவ்வொரு யூதக் குடும்பமும் மாதம் தவறாமல் பணம் அனுப்பும். ஒரு யூத எழுத்தாளரின் புத்தகம் வெளியாகிறதென்றால், சந்தேகமில்லாமல் அந்தக் காலகட்டத்தில் எத்தனை படித்த யூதர்கள் இருக்கிறார்களோ, அத்தனை பிரதிகள் விற்றே தீரும்.

மேலோட்டமான பார்வைக்கு இவற்றின் வீரியம் சட்டென்று புரியாது. யூதர்கள் தமக்காகவோ, தமது குடும்பத்தினருக்காவோ கவலைப்பட்டதில்லை. மாறாக, தமது இனத்துக்காக மட்டுமே சரித்திரம் முழுவதும் கவலைப்பட்டு, உழைத்து வந்திருக்கிறார்கள். உலகில் வேறெந்த ஓர் இனமும் இப்படி இருந்தது கிடையாது.

பத்தொன்பதாம் நூற்றாண்டு பிறந்தவுடனேயே ஐரோப்பாவின் மேற்கு தேசங்களில் யூதர்களின் செல்வாக்கும் வாழ்க்கை நிலையும் நம்பமுடியாத அளவுக்கு உயரத் தொடங்கியிருந்தது. ஆங்காங்கே இனப்படுகொலைகள், ஊரைவிட்டுத் துரத்தல் போன்ற காரியங்கள் நடந்துகொண்டிருந்தன என்றபோதும் யூதர்களின் அந்தஸ்தும் அதற்குச் சமமாக வளரத்தொடங்கியிருந்தது. காரணம், ஐரோப்பிய மறுமலர்ச்சி. பலதேசங்களில் ஜனநாயகம் வரத் தொடங்கியிருந்தது. அப்போது பொருளாதார கெடுபிடிகள் தளர்த்தப்படத் தொடங்கின. வர்த்தகம் சுலபமாகத் தொடங்கியிருந்தது.

ஜனநாயகம் எங்கெல்லாம் முளைவிட்டதோ, அங்கெல்லாம் யூதர்கள் அரசியலில் ஈடுபட ஆரம்பித்தார்கள். சிறு சிறு உள்ளூர்த் தேர்தல்கள் முதல் மாகாண சட்டசபை, தேசியத் தேர்தல்கள் வரை அவர்கள் போட்டியிட ஆரம்பித்தார்கள். தேர்தல்களில் போட்டியிடும் யூதர்களுக்காக உலகெங்கிலுமிருந்த யூதர்கள் உதவிசெய்ய ஆரம்பித்தார்கள். யூத வர்த்தகர்கள் கணக்கு வழக்கில்லாமல் பணம் கொடுத்தார்கள். பணம் கொடுக்க முடியாதநிலையில் இருந்தவர்கள், துண்டேந்தி வசூல் வேட்டை நடத்தி உடலுழைப்பைத் தந்தார்கள். தேர்தல் தோல்விகளால் அவர்கள் துவளவில்லை. மாறாக வாழப்போன தேசங்களில் தமது இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள அதையும் ஒரு சாதக அம்சமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். 1848ஆம் ஆண்டு யூதர்கள் தமது சரித்திரத்திலேயே முதல் முறையாக தமது பிரதிநிதி ஒருவரை நாடாளுமன்றத்துக்கு அனுப்பினார்கள்.

(தொடரும்...)

இறப்பு - மரணம் என்னும் சொல்லைக் கேட்டவுடனே மக்கள் பலரும் திடுக்கின்றார்கள். அதற்குக் காரணம் யாது? இந்த உலகத்தில் தாம் மிகவும் வருந்தித் தேடிய பொன்னையும், பொருளையும் விட்டுப்பிரிய மனம் இல்லாமல் பலர் வருந்துகின்றனர். வேறு பலர் தம் அன்பிற் சிறந்த அழகிய மனையாளைப் பிரிய மனம் இன்றி வருந்துகின்றனர்.

மற்றும் சிலர் தந்தையர், உறவினர், நண்பர் முதலியோரைப் பிரியமாட்டாமல் வருந்துகின்றனர். இன்னும் சிலர் பிள்ளைகளையும் உடன்பிறந்தவர்களையும் விட்டுப் போக மனமின்றி வருந்துகின்றனர். இவர்கள்

# தற்கொலைகள் பலவிதம்



இப்படியிருக்க, வேறு சிலர் முரட்டுத் தன்மையுடையவர்களாய் வெட்டுக்கும் குத்துக்கும் கொலைக்கும் துணிந்து மரணத்திற்கு அஞ்சாதவர்களாய் எந்த நேரத்திலாயினும் தம் உயிரைப் போக்குவதற்குச் சித்தமாயிருக்கிறார்கள். இன்னும் ஒரு வகையார் "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்று நினைத்துத் தாம் உண்ணுவதும் உறங்குவதும் இன்புற்றிருப்பதும் தவிர வேறு ஒன்றையும் எண்ணாதவர்களாய்க் கடவுளும் இல்லை, ஆத்மாவும் உயிருமில்லை, முற்பிறப்புமில்லை, பிற்பிறப்புமில்லை, நல்வினையுமில்லை, தீவினையுமில்லை. எந்தவழியிலாயினும் பொருளைத்தேடி நலமாக வாழ்வதே சொர்க்கம் என்று சொல்லி மறுமையைப் பற்றி சிறிதாயினும் நினைத்துப் பாராமல் விலங்குகள், பறவைகளைப் போல் காலங் கழித்துவருகிறார்கள்.

மரணத்தைக் கண்டு பயம்கொள்ள வேண்டியதில்லை. பிறப்பு, என்று நிகழ்ந்ததோ அன்றே இறப்பும் ஒருநாள் உண்டு என்பது உறுதியாகிவிட்டது. மரணதினம் ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்குமானால், ஒவ்வொரு நாளும் மரண தினமாகவே அமைந்துவிடலாம். இதனால்தானோ தெரியவில்லை. மரணம் என்று நிகழும் என்பது, இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

மரணத்தைக் கண்டு பயம்கொள்ள வேண்டியதில்லை. அதுமட்டுமல்ல மரணமில்லா பெருவாழ்வைத் தரும்படி இறைவனிடம் - இயற்கையிடம் வேண்டுவதும் தவறில்லை. மனிதனாகப் பிறவி எடுத்தது வாழ்வாங்கு வாழ்வதற்காகவே! நல்ல வழியில் பொருளீட்டி, தர்ம நியாயங்களுக்கு உட்பட்டு வாழ்ந்து வாழ்க்கையின் இலட்சியத்தை அடையவேண்டும்.

பிறப்பும் வாழ்வும் அவசியமாகவுள்ள போது, இன்று மரணங்கள் வலிந்து வரவேற்கப்பட்டு வருகிறது. ஆம், நமது நாட்டில், யாழ் மாவட்டத்தில் இளசுகளின் தற்கொலை வீதம் அண்மைக்காலத்தில் அதிகரித்து வருகின்றன எனப்புள்ளி விபரங்கள் சொல்லுகின்றன. இந்தத் தகவல் சமூக ஆர்வலர்களைப் பெரிதும் கவலையடைய வைத்துள்ளது. நமது இளைஞர்கள் சிறு வயதில் வாழ்க்கையில் விரக்தியடைவதற்கு காரணம் என்ன? இந்த நிலையிலிருந்து இளைஞர்களை மீட்பது எவ்வாறு என்று சிந்திக்கவேண்டும். நாட்டில் நடைபெற்ற கொடிய யுத்தம் ஆயிரக்கணக்கான இளைஞர்கள், யுவதிகளின் உயிர்களைக் காவுகொண்டது. அந்தச் சோகம் ஒவ்வொருவருடைய மனதிலும் ஏற்படுத்தியுள்ள ஆழ்ந்த துன்பம் ஒருபுறம் மாறாமலிருக்கையில் இன்று நடைபெற்றுவரும் இளசுகளின் தற்கொலைக் கதை பாதரசத்தைக் காய்ச்சி காதுக்குள் ஊற்றுவது போல உள்ளது.

நாங்கள் பாடசாலை சென்ற காலங்களில் 50 ஆண்டுகளுக்கு முன்னர், மாணவர்கள் தற்கொலை செய்யும் செய்தி அங்கொன்றும் இங்கொன்றுமாக பத்திரிகையில் வருவது உண்டு. அதுவும் க.பொ.த. சாதாரண தரம், உயர்தரம் பரீட்சைகளின் முடிவுகள் வெளிவிட்டால் அடுத்த நாள் நாளிதழில் தற்கொலைச் செய்திகள் வருவதுண்டு. புகையிரதப் பாதையில் விழுந்து தற்கொலை, அரலிக்கொட்டை அரைத்துக் குடித்துத் தற்கொலை, பொலிடோல் என்னும் பூச்சி நாசினியை குடித்ததால் பலர் தற்கொலை, இப்படியாகச் செய்தியிருக்கும். காரணம், பரீட்சை முடிவு தந்த தோல்வியே. வீட்டிற்குச் சென்றால் பெற்றோர் கண்டிப்பார்கள், ஆசிரியர்கள் மதிக்கமாட்டார்கள்.

அதுவும் நண்பன் சித்தியடைந்தான் என்றால் சொல்லவும் வேண்டிய தில்லை, இந்த நிலைக்கு ஏதோ நியாயம் சொல்லிவிட முயற்சிக்கலாம். ஆனால் இன்றும் பரீட்சைகள் நடக்கின்றன. பரீட்சை முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. அதிக வீதத்தில் வடபகுதி மாணவர்கள் தோல்வியடை கிறார்கள். அதற்காக யாரும் தற் கொலை செய்ததாகச் செய்திவருவதில்லை. ஒருவேளை தற் கொலையை தடுப்பதற்காகத்தான் புகையிரதப் பாதை அகற்றப்பட்டதோ தெரியவில்லை. இதுவும் ஒருவகை மாற்றம் தான்.

சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல்

(தொடரும்...)

"தமிழ் மக்களின் வாக்குகள் தேவை என்பதற்காக வீரப்பேச்சுக்கள் பேசவும், விளைவுகளைச் சிந்திக்காமல் சவால்களை விடுக்கவும் ஈ.பி.டி.பி. ஒருபோதும் தயாராகவில்லை. இணக்க அரசியலின் தத்துவமே, சமயோசிதமும், தந்திரோபாய நகர்வுகளுமாகும். கத்திமேல் நடப்பதுபோல், ஈ.பி.டி.பி. அத்தகைய அரசியலையே செய்துகொண்டிருக்கின்றது."




"சர்வதேச சமூகத்திற்கு ஒற்றுமையைக் காட்ட வேண்டும். மாகாண அதிகாரத்தை செயற்படவிடாமல் உரிமை கிடைக்கும்வரை முடக்கிப்போட வேண்டும். செயற்திறன் மிகுந்தவர்களிடம் மாகாண சபை சென்றுவிட்டால் அவர்கள் உரிமைக்கான கூர்முனையை தமிழ் மக்களிடம் இருந்து மழுங்கடித்துவிடுவார்கள். இப்படியும் எதிர்ப்பு அரசியல் செய்வோர் கூறுகின்றனர்.

## இணக்க அரசியல் | எதிர்ப்பு அரசியல்

# மக்களே நீதிபதிகள்

அலசுவது மதியூகி

தமிழ் மக்களிடம் இரண்டு அரசியல் தெரிவுகள் இருக்கின்றன. அரசாங்கத்தையும் தென்னிலங்கை சிங்கள மக்களையும் எதிராளிகளாக எதிர்முனையில் நிறுத்தி எதிர்ப்பு அரசியல்பேசுவதும், இணக்க அரசியலும்தான்.

அரசாங்கம் தமிழ் மக்களை அழிக்கின்றது. சிங்கள அரசு தமிழ் மக்களுக்குத் தீர்வு எதையும் தரப் போவதில்லை. இலங்கை அரசு தமிழர்களின் வாழ்விடங்கள் எங்கும் அங்குலம். அங்குலமாக இராணுவத்தை ஆயுதங்களுடன் நிறுத்திவைத்துள்ளது. இலங்கை அரசு தமிழர்களைப் புறக்கணித்து செயற்படுகின்றது. இப்படியெல்லாம் எதிர்ப்பு அரசியல் செய்கிறவர்களால் பேசமுடியும்.

இணக்க அரசியல் செய்கின்றவர்கள் இவ்வாறு பேசமுடியாது. 2009ஆம் ஆண்டு முன்புவரை இலங்கையில் நடந்தவைகளை முன்னுக்குப் பின்னாக எவராலும் எதையும் பேச முடிந்திருக்கின்றது.

ஆனால், 2009ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பிறகு, இலங்கை அரசு தமிழ் மக்களை அழிக்கின்றது என்று ஆதாரங்கள் இல்லாமல் எப்படிக்கூற முடியும். சிங்கள அரசு தமிழ் மக்களுக்குத் தீர்வைத் தரப் போவதில்லை என்றும் கூறிவிட முடியாது. தீர்வுக்காக எதிர்ப்பு அரசியல் செய்தது எதுவுமில்லை. அரசோடு பின்கதவால் சென்று பேச்சுவார்த்தை நடாத்த விரும்பியவர்கள் வெளிப்படையாகப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு எந்தவொரு முயற்சியையும் எடுக்கவில்லை. ஆறு மாதங்களைக் காலக்கெடுவாக அரசு தீர்மானித்தபோதும், எதிர்ப்பு அரசியல் நடத்துபவர்கள் அதற்குத் தயாராக இருக்கவில்லை. யுத்தம் முடிவுக்கு வந்தபோது பரவலாக இருந்த இராணுவம், தற்போது பல இடங்களில் இருந்து அகன்றுள்ளது. பல மினி இராணுவ முகாம்களும் காவலரண்களும் அகற்றப்பட்டுள்ளதை வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் காணமுடிகின்றது.

இராணுவம் தமது பகுதிகளில் இருந்து அகன்று சென்றபின்னரே, திருடர்களின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகவும், சமூகவிரோதிகளின் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாகவும் யாழ்ப்பாணத்தில் மக்கள் கூறுவதைக் கேட்கமுடிகின்றது.

நிலைமை இவ்வாறிருக்க, எழுந்தமானமாக குற்றச்சாட்டுக்களை முன்வைக்க எதிர்ப்பு அரசியல் செய்பவர்களால் மட்டுமே முடிகின்றது.

அதுமட்டுமல்லாமல், தற்போதைய தேர்தல் களத்தில், தமிழ் மக்களிடம் "நீங்கள் தன்மானமுள்ள தமிழ் மக்களாக இருந்தால், தமக்கே வாக்களிக்க வேண்டும், உங்கள் உடம்பில் தமிழ் இரத்தம் ஓடினால், தமக்கே வாக்களிக்க வேண்டும்" என்று கூறுகின்றனர்.

சர்வதேச சமூகத்திற்கு ஒற்றுமையைக் காட்டவேண்டும். மாகாண அதிகாரத்தை செயற்படவிடாமல் உரிமை கிடைக்கும்வரை முடக்கிப்போட வேண்டும். செயற்திறன் மிகுந்தவர்களிடம் மாகாண சபை சென்றுவிட்டால் அவர்கள் உரிமைக்கான கூர்முனையை தமிழ் மக்களிடம் இருந்து மழுங்கடித்து விடுவார்கள். இப்படியும் எதிர்ப்பு அரசியல் செய்வோர் கூறுகின்றனர்.

இணக்க அரசியல் கூறுவது என்ன? இணக்க அரசியல் நடத்துவதாலேயே, தாம்பெற்ற மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களையும் வைத்துக்கொண்டு யாழ்.மாவட்டத்திற்கும், கிளிநொச்சி மாவட்டத்திற்குமாக மாவட்ட அபிவிருத்திக் குழுக்களுக்குத் தலைமைதாங்கி, அபிவிருத்திகளையும், மீள்கட்டுமானங்களையும் துரிதமாகச் செய்யமுடிகின்றது.

இணக்க அரசியல் செய்வதாலேயே தமது நிர்வாகத்துக்குக் கிடைத்த ஊர்காவற்துறை, நெடுந்தீவு, வேலணை, யாழ்ப்பாணம் போன்ற உள்ளூராட்சி மன்றங்களைச் சிறப்பாகச் செய்ய முடிகின்றது. தீவகத்தின் மூன்று பிரதேச சபைகளுக்கும் தலா 100 மில்லியன் ரூபாக்களை அபிவிருத்திக்காக அரசிடம் இருந்து பெற்றுக்கொடுக்க முடிந்தது. எதிர்ப்பு அரசியல் நடத்துவோர் வசமிருக்கும் பிரதேச சபைகளோ உள்முரண்பாடுகள் காரணமாகவும், திறமையற்ற நிர்வாகத்தினாலும் மக்களுக்கான பணிகளைச் சரியாகச் செய்ய முடியாததோடு, ஒதுக்கப்பட்ட நிதிகளையும் திறைசேரிக்குத் திரும்பிச் செல்ல வழிவகுத்துள்ளன என்கின்றனர்.

பதின்மூன்றாவது திருத்தத்தில் சில அதிகாரங்களை நீக்கவேண்டுமென தென்னிலங்கையிலுள்ள இனவாத கடும்போக்கு சக்திகள் வானத்திற்கும், பூமிக்கும் குதித்தீபோது, எதிர்ப்பு அரசியல் நடத்தியோர், "அரசுக்கு பதின்மூன்றாவது திருத்தத்திலுள்ள குறைந்தபட்ச அதிகாரங்களைக்கூட வழங்க விருப்பமில்லை. அரசாங்கமே கடும் போக்கு இனவாதிகளைத் தூண்டிவிட்டு சதி செய்யப் பார்க்கிறது" என்று அறிக்கை விடுவதை எதிர்ப்பு அரசியல் செய்து கொண்டிருந்தபோது, பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் நீக்கங்களையோ, திருத்தங்களையோ மேற்கொள்ளக் கூடாது எனும் கோரிக்கைக்கு ஆதரவாகக் குரல்கொடுக்க சிங்கள முற்போக்கு மற்றும் புத்திஜீவிகளை அணிதிரட்டி குரல்கொடுக்கச் செய்யவும், பதின்மூன்றாவது திருத்த விவகாரத்தைக் கையாள தனியான ஆணைக்குழுவொன்று அமைக்கப்படுவதற்கு ஆரவாரம் இல்லாமல் பணியாற்றி, கொதித்த பிரச்சினையை அடக்கியதும் இணக்க அரசியலால்தான் முடிந்தது.

இணக்க அரசியல் மிகவும் கடினமானது. அது அரசுடன் உறவைப் பாதுகாத்துக்கொண்டு, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை தொடர்ந்தும் வலியுறுத்துவது மாத்திரமல்ல.

தென்னிலங்கை மக்களிடமும், சகோதர முஸ்லிம் மக்களுடனும் நெருங்கிப் பழகுவதும், தமிழ் மக்களின் கோரிக்கைகளும், அபிலாஷைகளும் முஸ்லிம், சிங்கள மக்களின் விருப்பங்களில் இருந்து மாறுபட்டதோ, எதிரானதோ, தாய்நாட்டின் இறைமைக்கு எதிரானதோ இல்லை என்பதை ஏற்றுக் கொள்ளச் செய்வதும்தான்.

இந்த முயற்சிகளின் நியாயத்தை உணர்ந்த காரணத்தினால்தான், மத்திய அரசுடன் இணக்க அரசியல் நடத்தும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வடக்கு மாகாண சபையை ஆட்சியமைக்க தமிழ் மக்கள் ஆணை வழங்கினால் காணி, பொலிஸ் அதிகாரங்கள் மட்டுமல்லாது, அதற்கு மேலதிகமானவற்றையும் வழங்கத் தாம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியிருப்பதாகும்.

எதிர்ப்பு அரசியல் நடத்துவோர் வாக்குகளை அபகரிக்க எதையும் பேசலாம். மீண்டும் ஆயுதம் ஏந்திப் போராடப் போவதாகவும் கூறலாம். அவை தேர்தல் மேடைகளோடு காற்றில் பறந்துவிடும்.

'முயல் பிடிக்கும் நாயை முகத்தில் பார்த்தால் தெரியும்' என்பார்கள். அதுபோல் இவர்கள் கூறுகின்ற மீண்டும் ஆயுதம் ஏந்தத் தயார் என்ற செய்தியையும் பார்க்கலாம்.

ஆனால், இணக்க அரசியல் செய்யும் ஈ.பி.டி.பி.யினர் அவ்வாறு கூறினால், அது தேர்தல் மேடைப்பேச்சாக இருக்காது. ஏனென்றால், ஈ.பி.டி.பி.யின் தலைவர், ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் இராணுவத் தளபதியாக இருந்தவர் என்பதும், பாலஸ்தீனத்தில் பயிற்சிபெற்ற ஆரம்பப் போராளிகளில் ஒருவர் என்பதும் தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் முக்கியமான பதிவுகளாகும். இந்த நிலையில் மீண்டும் ஆயுதம் ஏந்தப் போவதாக ஈ.பி.டி.பி. கூறினால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். அப்படிப் பொறுப்பற்ற விதத்தில் ஈ.பி.டி.பி. கூறப்போவதுமில்லை.

தமிழ் மக்களின் வாக்குகள் தேவை என்பதற்காக வீரப்பேச்சுக்கள் பேசவும், விளைவுகளைச் சிந்திக்காமல் ச்வால்களை விடுக்கவும் ஈ.பி.டி.பி. ஒருபோதும் தயாராகவில்லை. இணக்க அரசியலின் தத்துவமே, சமயோசிதமும், தந்திரோபாய நகர்வுகளுமாகும். கத்திமேல் நடப்பது போல், ஈ.பி.டி.பி. அத்தகைய அரசியலையே செய்து கொண்டிருக்கின்றது.

ஆயுதப் போராட்டங்கள் எழுச்சி பெற்றபோது அதைத் தூரத்தில் இருந்து வேடிக்கை பார்த்தவர்கள், ஆயுதப் போராட்டம் தந்த வலியையும், மீள முடியாத விளைவுகளையும் இரத்தமும், சதையுமாக அனுபவித்தவர்கள் தமிழ் மக்களே அன்றி, இன்று எதிர்ப்பு அரசியல் நடத்துவோர் அல்ல.

ஆயுதப் போராட்டத்தினால் தமிழ் இனம் ஈடுசெய்ய முடியாத உயிர் மற்றும் சொத்து இழப்புக்களை விலையாகக் கொடுத்துள்ளது. ஆனால், அவர்களோ எத்தகைய இழப்புக்களையும் சந்திக்கவில்லை. அவர்களது குடும்பங்களும், உறவுகளும் பாதுகாப்பாக வெளிநாடுகளில் குடியேறியிருக்கின்றார்கள்.

ஏற்கனவே கிடைக்கப்பெற்ற 22 பாராளுமன்ற உறுப்புரிமையையும் பின்னர் கிடைத்த 14 பாராளுமன்ற உறுப்புரிமையையும், உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களையும் எதிர்ப்பு அரசியலின் பெயரால் முடக்கி வைத்திருக்கும் கூட்டமைப்பினர் மாகாண சபை அதிகாரத்தையும் சாகடித்து முடக்கிப்போட தமிழ் மக்களின் தன்மானத்தின்மீது கேள்வியெழுப்புகின்றார்கள்.

அன்று நாம் பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்படாமல் இருந்திருந்தால், யாழ்ப்பாணம் மாநகர சபை எமது வெற்றியாக அமையாது இருந்திருந்தால், அழகிய எங்கள் வாழ்விடங்களும் யாழ். மாநகரமும் அப்போதிருந்த சுடுகாட்டுப் பூமியைப் போலவே இப்போதும் இருந்திருக்கும்.

வடக்கு மாகாண சபை எம்மால் வெற்றி கொள்ளப்படுமாக இருந்தால், நாம் அதனை முடக்கிப்போடப் போவதில்லை. ஏனைய மாகாணங்களுடன் இணக்கமாகவும், மத்திய அரசுடன் தந்திரோபாயமாகவும் முன்னகர்த்தி, எமது பூர்வீக வாழ்விடங்களை அபிவிருத்தியுடன் கட்டியெழுப்புவதோடு, உரிமைக்கான தீர்வுநோக்கி உறுதியாக பயணிப்போம் என்று ஈ.பி.டி.பி. கூறிவருகின்றது.

எதிர்ப்புப் போராட்டத்திற்கும் எதிர்ப்பு அரசியலுக்கும் தேவையான காலம் இருந்தது என்பதை ஈ.பி.டி.பி. ஒருபோதும் மறுக்கவில்லை. ஆனால், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைத் தவறவிட்டபோது, ஒரு பொன்னான வாய்ப்பைத் தவறவிட்டதாகக் கூறிய ஈ.பி.டி.பி.யினர், 2000ஆம் ஆண்டு சந்திரிக்கா அம்மையார் கொண்டுவந்த உயர்ந்த அம்சங்கள் அடங்கிய தீர்வுப்பொதியை தமிழ் மக்கள் அனுபவிக்க அனைவரும் பாடுபட்டிருக்க வேண்டும் என்றும் கூறிவந்தது.

அதுபோலவே, தற்போது கனிந்து வந்திருக்கும் மாகாண சபையையும் தமிழ் மக்கள் அனுபவிக்கின்ற வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என ஈ.பி.டி.பி. கூறுகின்றது. எதிர்ப்பு அரசியலானது நல்ல வாய்ப்புக்களைத் தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதை விடவும், அதை எதிர்த்தும், தடுத்துமே வந்துள்ளது.

அரசியல் பேதங்களோடு ஈ.பி.டி.பி.யின் கோரிக்கைகளை எவர் நிராகரித்திருந்தாலும், நடந்து முடிந்த சம்பவங்கள் ஈ.பி.டி.பி.யின் தீர்க்கதரிசனத்தையும், உண்மையையும் தமிழ் மக்களுக்கு ஐயம்திரிபுற தெளிவுபடுத்தியுள்ளது. இனி சிந்திக்க வேண்டியவர்கள் தமிழ் மக்களே.



**உள்நாட்டுப் போர் ஒன்றுக்குள் அமெரிக்கப் படைகள் ஒருகாலமும் தலையிடாது, ஆனால் கடந்த ஓகஸ்ட் 21ம் திகதி அஸாத் றெஜீம் செய்த வேலைகாரணமாகவே இந்த விடயத்தில் அமெரிக்கா தலையிடவேண்டிய தேவை ஏற்பட்டது. நாம் ஒன்றும் உலகத்திற்கு நீதிசொல்லும் பொலிஸ்காரர் அல்ல, இந்த உலகம் மனிதர்கள் வாழ்வதற்கு ஏற்ற அழகான இடம். அதை நச்சுவாயு அடித்தும், அனு குண்டை உருவாக்கியும் நாசம்செய்யும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க முடியாது அது குற்றச்செயல். விளைவு மாபெரும் விபரீதமாக மாறிவிடும், அத்தகைய அவலம் வருமுன் அதைத்தடுக்கவேண்டும். அப்படியானவர்களுக்கு என்ன நடக்கும் என்ற பாடமும் புகட்டப்படவேண்டும்.**

தொகுப்பு - வேணுகிருஷ்ணா

# வல்லரசுகளின் ஆடுகளத்தில் அழியும் சிரிய மக்கள்

## அமெரிக்கா - ரஷ்யா உடன்பாடு

சிரியாவில் இருக்கும் இரசாயன ஆயுதங்களை அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் முழுமையாக அழிக்கும் வகையிலான ஒரு ஒப்பந்தம் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே ஏற்பட்டுள்ளது.

இதற்காக ஆறு அம்சத் செயற்திட்டம் ஒன்றை அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஜோன் கெர்ரி வெளிப்படுத்தியுள்ளார்.

அதனடிப்படையில், தம்மிடம் இருக்கும் அனைத்து இரசாயன ஆயுதங்கள் குறித்த முழுத் தகவலை சிரியா ஒரு வாரத்துக்குள்(14.09.2013 இலிருந்து) தெரிவிக்கவேண்டும்.

இந்தத் திட்டத்தில் வெளிப்படைத் தன்மை, பொறுப்புக் கூறுதல், காலவரையறை ஆகியவை உள்ளடங்கியுள்ளன என்று ஜோன் கெர்ரி கூறுகிறார்.

இன்னும் ஒரு வாரத்துக்குள் சிரியா அளிக்கும் தகவல்களை வைத்துக்கொண்டு, இரசாயன ஆயுதப் பரிசோதகர்கள் நவம்பர் மாதம் அங்கு செல்ல வழிவகுக்கும் எனவும் கெர்ரி மேலும் கூறினார்.

இந்த உடன்பாடு பிரேரணை என்கிற அடிப்படையிலேயே உள்ளது எனவும், இது இன்னும் சட்டரீதியான ஒரு வடிவத்தை பெறவில்லை எனவும் கூறும் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜேய் லா.:.பராவோ, எனினும் அதன் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிட முடியாது எனவும் சுட்டிக்காட்டுகிறார்.

இந்த உடன்பாடுகளை சிரியா மதித்து நடக்கவில்லை என்றால், அதன்மீது பலத்தை பிரயோகப்படுத்துவது குறித்து எந்தவிதமான கருத்துகளும் இப்பிரேரணைகளில் இல்லை.

ஆனால் உடன்பாட்டிலிருந்து விலகிச் செல்லும் பட்சத்தில், அதை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவுக்கு கொண்டு செல்ல வழி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்கா மற்றும் ரஷ்யா இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தை, சிரியாவின் எதிர்த்தரப்பு இராணுவ கிளர்ச்சி அமைப்பின் ஒரு தலைவர் புறந்தள்ளியுள்ளார். தம்மைப் பொறுத்த வரையில் இந்த உடன்படிக்கையில் ஏதுமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பொழுது அமெரிக்க - ரஷ்ய உடன்பாடு எட்டப்படுவதற்கு இட்டுச்சென்ற சர்வதேச சூழ்நிலைமைகளையும் சிரிய மக்களின் துயரம் தொடர இருக்கும் சூழ்நிலைமைகளையும் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வோம்.

## அமெரிக்காவின் ஆதாரங்கள்

சிரிய சர்வாதிகாரி பஸார் அல் அஸாட்டின் படைகள் நச்சு வாயு பாவித்து பொதுமக்களை கொலை செய்தமைக்கான ஆதாரங்களெனக் கூறி அமெரிக்கா வெளியீடு செய்தது.

மொத்தம் 13 காணொளிகள் எடுக்கப்பட்டுள்ளன, அனைத்தும் டி.வி.டி.க்களாக அடிக்கப்பட்டு காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன.

தமக்கு கைநிறைய ஆதாரம் இல்லாமல் ஒபாமாவின் பிரேரணையை ஆதரிக்க முடியாது என்று கூறிய அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர்கள் கூறியிருந்தனர். அதேநேரம் உலகத்தின் முக்கிய ஊடகங்களில் எல்லாம் இந்தக் காட்சி அப்போதே வெளியாகிக் கொண்டிருந்தது.

சிறுவன் ஒருவன் கண்களைத் திறக்க முடியாமல் போராடுவது, இளைஞன் ஒருவன் நச்சுப்புகையால் தாக்கப்பட்டு துடிதுடிப்பதென பல்வேறு தளங்களில் தனிப்பட்டவர்களால் மொபைலில் படமாக்கப்பட்டுள்ளது.

இதற்குள் கடந்த வாரம் பிரான்சில் வைத்து கருத்துரைத்த அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் யோன் கர்ரி கூறும்போது...

சர்வாதிகாரத்திற்கு எதிராக போராட வேண்டிய ஒரு தருணத்தில் நாங்கள் அமைதியாக இருக்கமுடியாது. நாம் நடவடிக்கை எடுக்காவிட்டால் அனைத்து சர்வாதிகாரிகளும் புத்தெழுச்சி பெறுவார்கள்... அதற்கு இடம்விட்டு நாம் அமைதியாக இருக்கவேண்டிய நேரம் இதுவல்ல...

தாக்குதல்களுக்கு பத்து நாடுகள் ஆதரவுதர முன்வந்துள்ளன நீங்களும் உங்கள் ஆதரவைத்தர வேண்டும் என்று பிரான்சிய அரசிடம் கோரிக்கை விடுத்தார். .

முன்னர் ஆதரவளிப்பதாகக் கூறிய பிரான்சும், டென்மார்க்கும் சில தினங்களுக்கு முன் மீண்டும் பல்டியடித்தால் மறுபடியும் அவர்களை உசுப்பேற்றவேண்டிய வேலையை செய்துவிட்டு உடனடியாக பிரான்சில் வைத்தே அரபுலீக் பிரதிநிதிகளை சந்தித்திருந்தார். தமக்கு ஆதரவு தரவேண்டுமென மீண்டும் வலியுறுத்தியிருந்தார்.

சிரியாமீது 3 நாட்கள் தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமிட்டிருந்ததாக செய்திகள் கூறின.

72 மணிநேரத்தில் அதாவது 3 நாட்களுக்குள் அத்தனை தாக்குதலையும் முடித்து சிரியாவை அதிபர் அஸாத்தின் பிடியிலிருந்து விடுவிக்கும்வகையில் தாக்குதல் இருக்கும் என்று அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் கூறியிருந்தார்.

மறுபுறம் அமெரிக்காவில் இருந்து வெளிவரும் சி.பி.எஸ் தொலைக்காட்சிக்கு டமாஸ்கஸ்சில் வைத்து பேட்டியளித்திருந்தார் அஸாட்.

அமெரிக்க அதிபரால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள காணொளிக்கும் தமக்கும் யாதொரு தொடர்பும் கிடையாது என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியிருந்தார். தனது நாட்டு மக்களுக்கு எதிராக ந்ச்சுவாயு விசிறவேண்டிய தேவை எதுவும் தமக்குக் கிடையாது என்றார்.

மறுபுறம் தற்போது ஈராக்கிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ஈரானின் புதிய வெளிநாட்டு அமைச்சர் முகமட் ஜவாட் ஷெரீப் மீண்டும் அமெரிக்காவிற்கு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

"சிரியாமீது தாக்குதல் நடாத்துவதன் மூலமாக அந்தப் பிராந்தியத்தையே போர் வலயமாக ஆக்க முயல்கிறது அமெரிக்கா. மேலும் அமெரிக்கா என்பது உலகத்திற்கு தீர்ப்பளிக்கும் சர்வதேச நீதிமன்றல்ல.. " என்றும் கூறியிருந்தார்.

## போர்க் குற்றங்கள்

சிரியாவின் நிலைமைகள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆண்ணக்குழு வெளியிட்டுள்ள புதிய அறிக்கை: அங்கு இருதரப்புமே போர்க் குற்றங்களிலும், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களிலும் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டியுள்ளது.

அரசாங்கப் படைகள் கடந்த மே மாதம் முதல் ஜூலை மாதம் வரையிலான காலப்பகுதியில், பெருமளவில் பொதுமக்களை கொலைசெய்து, மருத்துவமனைகள்மீது ஷெல் தாக்குதல் நடத்தி, கொத்தணிக் குண்டுகளையும் பயன்படுத்தியதாக ஆணைக்குழு கண்டுபிடித்துள்ளது.

பொதுமக்களை ஒட்டுமொத்தமாகக் கொலைசெய்யும் நடவடிக்கைகளில் கிளர்ச்சிக்காரர்கள் ஈடுபடுவதாகவும் அந்த அறிக்கை கூறியுள்ளது.

இதுவரை ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்ட சிரியாவின் நெருக்கடியை கண்காணிக்க ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணைக்குழு, இந்த சுயாதீன விசாரணை ஆணைக்குழுவை 2011இல் உருவாக்கியது.

சிரியாவுக்கு செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்ட இந்த விசாரணைக்குழு மே 15 முதல் ஜூலை 15 வரை 258 பேரிடம் பெற்ற சாட்சியங்கள், வீடியோ பதிவுகள் மற்றும் செய்மதிப்படங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த அறிக்கையை தயார் செய்துள்ளது.

பல மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்த, கடுமையான ஷெல் தாக்குதலாலும், முற்றுகைகளாலும் நகரங்களும் கிராமங்களும் பாதிக்கப்பட்ட, தண்டனை குறித்த அச்சமற்ற நிலையில் ஒட்டுமொத்த படுகொலைகள் நடந்த, 'ஒரு போர்க்களமே சிரியா' என்று அந்த அறிக்கை கண்டுபிடித்துள்ளது.

கொலைகள், உரிய முறையற்ற மரண தண்டனைகள், சித்திரவதை, பணயம் வைத்தல் மற்றும் பாதுகாக்கப்பட்ட பொருட்களை தாக்குதல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் மூலம் அரசாங்கத்துக்கு எதிரான ஆயுதக்குழுக்களும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டன. பொதுமக்கள் வாழும் இடங்களில் அவை வகைதொகையற்ற வகையில் ஷெல் தாக்குதலும் நடத்தியுள்ளன.

2011 மார்ச் மாதத்தில் அதிபர் அசாத்துக்கு எதிரான கிளர்ச்சி ஆரம்பித்தது முதல், குறைந்தபட்சம் அரசாங்கப் படைகள் மற்றும் அதன் ஆதரவாளர்களால் 8 ஒட்டுமொத்த மனிதப் படுகொலைகளும், கிளர்ச்சிக்காரர்களால் ஒரு மனிதப் படுகொலையும் செய்யப்பட்டதாக அந்த அறிக்கை குற்றஞ்சாட்டியுள்ளது.

இரசாயனத் தாக்குதல் குறித்து முறைப்பாடுகள் கிடைத்திருந்தாலும், இதுவரை எப்படியான இரசாயனம் அதில் பயன்படுத்தப்பட்டது என்றோ அல்லது அதனை யார் செய்தார்கள் என்றோ தற்போதுள்ள ஆதாரங்களை வைத்து அடையாளம் காண முடியவில்லை என்றும் அது கூறுகிறது.

இருதரப்பிலும் உள்ள இப்படியான போர்க் குற்றங்களைச் செய்தவர்கள் சர்வதேச சட்டங்களை மீறியுள்ளனர் என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

## இரண்டு தோணியில் கால்வைக்கும் ஒபாமா

சிரியாவுக்கு எதிராக அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா முன்னெடுத்த போர்ச்சன்னதம் இப்போது மாதக்கணக்கிற்கு பின்தள்ளிப் போயுள்ளது.

சிரியாவில் இருக்கும் நச்சுவாயு, இரசாயன ஆயுதங்கள் அடங்கிய குதங்கள் அனைத்தையும் சர்வதேச சமுதாயத்திடம் ஒப்படைக்கிறோம். அப்படி மோசமான தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள் இருந்தால் அவற்றை ரஷ்யாவின் தலைமையில் சர்வதேச நாடுகள் நிர்மூலம் செய்யலாம் என்ற அஸாத்தின் யோசனைக்குப் பிறகு ஒபாமா தனது தாக்குதல் திட்டத்தைப் பின்போட்டுள்ளார்.

அதேநேரம் சிரியாவில் என்னமாதிரியான ஆயுதங்கள் உள்ளன. அவை என்ன நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ளன என்ற தெளிவு இல்லாத நிலையிலேயே ரஷ்யாவை நம்பி களமிறங்கியிருக்கிறார்.

இதுகுறித்து தமது தோழமை நாடுகளான பிரான்ஸ், இங்கிலாந்துடன் பேச்சுக்களை நடாத்திய பின்னரே தாக்குதலை தாமதித்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

மேலும் தற்போதய அமெரிக்க மக்கள் ஈராக் போர்க்கால மக்களாக இல்லை, முற்றிலும் மாறியிருக்கிறார்கள், அமெரிக்கக் காங்கிரசும் தன்னை ஆளுமை உள்ள மன்றாக மாற்றியிருக்கிறது.

ஆகவே, ஒபாமா தான் நினைத்த தடத்தில் வாகனத்தை ஓடமுடியாத நிலை இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மாறாக..

ஆபத்தான இரசாயன ஆயுதங்களை எல்லாம் அஸாத் இதுவரை அகற்றியிருப்பார் என்பதால் அங்குபோகும் சர்வதேச குழுவுக்கு கையில் என்ன கிடைக்கப்போகிறது என்பதும் தெரியவில்லை.

மறுபுறம் போராளிகளின் தரப்போ பெரும் கவலையை வெளிப்படுத்தியுள்ளன, அமெரிக்காவின் தாக்குதல் ஒரு வாரமல்ல மாதக்கணக்கில் பிந்திப்போயுள்ளது என்று சோகம் வெளியிட்டுள்ளன.

இரண்டு தோணியில் கால் வைப்போர் இறுதியில் எந்த இலக்கையும் அடையாது கடலில்வீழ்வதே வரலாறாக இருக்கிறது.

ஒபாமா தகுதி குன்றிய அமெரிக்க அதிபர் என்ற கணிப்பீட்டை மிக விரைவாக நெருங்கிக்கொண்டிருக்கிறார்.

## ரஷ்யாவின் அறிக்கை

சிரியா தொடர்பாக ரஷ்யா முன்வைத்த பிரேரணை ஒன்று உலகத்தில் திடீர் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

நச்சுவாயு விசிறியதுதான் குற்றமென்றால் அதுதான் போர் நடப்பதற்கான சிவப்புக் கோட்டைத்தாண்டிய எல்லை என்றால் அந்த இடத்தில் உள்ள பிரச்சினையை முடித்துவிடுவோம்.


சிரியாவின் நச்சுவாயு, இரசாயன ஆயுதங்கள் இருக்கும் அத்தனை களஞ்சியங்களையு சர்வதேச சமுதாயத்திடம் ஒப்படைக்கத் தய என்று அஸாத் கூறியிருப்பதாக ரஷ்யா அறிவி துள்ளது.

ஜேர்மனிய சான்சிலர் அஞ்சலாமேர்க்கலு ரஷ்யாவுக்கு தனது பாராட்டுக்களைத் தெரிவித்து இந்தப் பாதையிலேயே காய்கனை நகர்த்துவது உலகத்திற்கு நல்லதென்று அழுத்தம் திருத்தமாக தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க அதிபரின் உரை

அமெரிக்க மக்களுக்கு September 10, 2013 விடிகாலை 03.00 மணி ஐரோப்பிய நேரம் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா

தொழில்நுட்பம்




# அப்பிளின் புதிய வெளியீடு

அப்பிள் நிறுவனம் தன்னுடைய புதிய தயாரிப்பான ஐபோன் 5எஸ் மற்றும் ஐபோன் 5C யை வெளியிட்டுள்ளது. இவை தங்க நிறம் மற்றும் சில்வர் மற்றும் ஸ்லேட் நிறத்தில் கிடைக்கின்றது.

வேகமாக இயங்கக்கூடிய A7 சிப்பினை கொண்டுள்ளதுடன், இது ஐபோன் 5 இனைவிட இருமடங்கு வேகமாக செயற்படும்.

4 அங்குல ரெட்டினா திரையையும், 8 MP, 3264x2448 pixels கெமரா, 1080p HD வீடியோ ரெக்கோர்டிங், ஐபோன் 5எஸ் கொண்டுள்ளது. அப்பிளின் புதிய இயங்குதளமான ஐ.ஓ.எஸ். 7 மூலம் இது இயங்குகின்றது. இதில் குறிப்பிட்டத்தக்க வகையில் விரல் ரேகையை வைத்து போனிற்குள் நுழையக்கூடிய பிங்கர்பிறிண்ட் ஸ்கானரைக் கொண்டுள்ளது.

ஐபோன் 5C, 4 அங்குல ரெட்டினா திரையைக் கொண்டுள்ளதுடன், A6 புரசசர், 8 மெகா பிக்ஸல் கெமரா, புதிய பேஸ்டைம் எச்.டி. கெமரா போன்ற வசதிகளை இது கொண்டுள்ளது.



# விரைவில் வருகிறது...
## Android KitKat 4.4

உலகளவில் ஒட்டுமொத்த ஸ்மார்ட்போன்களில் கிட்டத்தட்ட 80 சதவிகிதம் அன்ட்ரோய்ட் இயங்குதளங்களால் செயற்படுகிறது. அன்ட்ரோய்ட் நிறுவனத்தை கூகுள் வாங்கியபிறகு பல புதிய வேர்ஷன்களை வெளியிடுகிறது.

சமீபத்தில் அன்ட்ரோய்ட் 4.3 ஜெல்லிபீன் வெளியாகி மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பை பெற்றது. இந்நிலையில் அன்ட்ரோய்ட் 4.4 கிட் காட் என்ற புதிய இயங்குதளத்தை வெளியிட உள்ளது. நெஸ்ட்ளே(nestle) நிறுவனத்துடன் இணைந்து கூகுள் இந்த இயங்குதளத்தை வெளியிடுகிறது.

அன்ட்ரோய்டின் அடுத்த ஓ.எஸ்-க்கு இந்த பெயரை நெஸ்ட்ளே நிறுவனத்துடன் இணைந்து வைத்திருப்பது சிறப்பாக உள்ளது, இந்த பெயர் சூட்டப்பட்டது ஏன் என்ற விளக்கத்தையும் கூகுள் அளித்துள்ளது.


அதாவது, அன்டிரோய்ட் ஓ.எஸ் கொண்ட மொபைல்கள் அல்லது டேப்லெட்கள் போன்ற சாதனங்கள் நமது வாழ்க்கையை இனிப்பாக்குகின்றன. அதனால் தான் இதுவரை அன்டிரோய்ட் ஓ.எஸ்களுக்கு கப்கேக் (Cupcake), டூநட்(Donut), எக்லையர் (Eclair), ப்ரோயோ (Froyo), ஜிஞ்சர்பிரட்(Gingerbread), ஹொனிகோம்ப்(Honeycomb), ஐஸ்கிரீம் சான்ட்விச்(Ice Cream Sandwich) என பெய்ர்கள் வைக்கப்பட்டுள்ளன. இதில் எல்லோருக்கும் பிடித்த சொக்லேட்டின் பெயர் மட்டும் இடம் பெறாமல் இருந்தது அதனால் தான் இப்பொழுது அந்த பெயர் வைக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளது.



# Toshiba புதிய அறிமுகம்

Toshiba நிறுவனமானது 8 அங்குல அளவுடையதும், விண்டோஸ் 8.1 இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டதுமான டேப்லட்டினை அறிமுகம் செய்துள்ளது. இதன் தொடுதிரையானது 1280 x 800 Pixel Resolution உடையதாக காணப்படுகின்றது.

இது தவிர பிரதான நினைவகமாக 2 GB LPDDR3 RAM சேமிப்பு நினைவகமாக 64 GB வரை தரப்பட்டுள்ளது. மேலும் 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா மற்றும் வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்காக 2 மெகாபிக்சல்களை உடைய கமெரா ஆகியவற்றினையும் கொண்டுள்ளது. இதன் விலையானது 329.99 டொலர்களாகும்.



# அதிவேகத்திற்குத் தயாராகும் ஜப்பான்

உலகில் சிறந்த தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைக் கொண்ட நாடாக விளங்கும் ஜப்பான் விரைவில் 220Mbps வேகத்தினைக் கொண்ட தரவுப்பரிமாற்றத்துடன் கூடிய இணைய இணைப்பினை வழங்கவுள்ளது.

KDDI எனும் நிறுவனத்தினால் 2014ஆம் ஆண்டின் கோடை காலப் பகுதியில் அறிமுகப்படுத்தப்படவுள்ள இச்சேவையானது தற்போது உள்ள வேகத்தினைவிடவும் 32 சதவீதம் அதிகமாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பேபாலுக்கு நிகராக பேஸ்புக்கின் சேவை

fakebook

பல மில்லியன் கணக்கான பயனர்களை தன்னகத்தே கட்டிப்போட்டிருக்கும் பேஸ்புக் சமூகவலைத்தளமானது பாரிய விளம்பர சேவைகளையும் வழங்கிவருகின்றது. இதனால் பணக்கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள புதிய சேவை ஒன்றை ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

அதாவது ஒன்லைன் மூலமான பணக் கொடுக்கல் வாங்கல்களுக்கு தற்போது பிரபல்யமாகக் காணப்படும் பேபால் நிறுவனத்தின் சேவைக்கு நிகராக இது அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மொபைல் சாதனங்களிலும் இச்சேவையை பயன்படுத்தக்கூடிய வசதி கிடைக்கப்பெறும்.


தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு நாளிதழ்

ரூ.10/= மட்டுமே

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!



# பாப்பா முரசு

**இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.**

# நல்ல குணம்

கணேஷ் என்றாலே கலகலப்பு என்று கூறுவார்கள் கல்லூரி மாணவர்கள். மற்ற மாணவர்களுடன் சேர்ந்து ஊர்சுற்றுவது, ஜாலியாகப் பொழுது போக்குவது, அரட்டையடிப்பது, பணத்தை வைத்துக் கொண்டு கண்டபடி செலவுசெய்வது எனத் திரிந்துகொண்டிருந்தான்.

அதே வகுப்பில்தான் நரேன் என்ற ஏழை மாணவனும் இருந்தான். எல்லோரிடமும் இனிமையாகப் பழகினாலும் மற்ற எந்த விஷயங்களிலும் அவர்களுடன் இணையாமல் பிரிந்து சென்றுவிடுவான். தான் உண்டு, தன் கடமை உண்டு என்று இருப்பான். அதற்கெல்லாம் அவன் கவலைப்படுவது இல்லை.

கணேஷும் அவனை அடிக்கடி கிண்டல் செய்வான். "பெரிய புத்தர் மாதிரி வந்து நிப்பான் பாருடா... அவங்க வீட்ல சாப்பாட்டுக்கே வழியில்லை... பணம் வேணும்னா என்ன செய்வான்? நம்மள மாதிரி நாலு பணக்காரப் பசங்க தயவு வேணும்ல... ஒரு நாள் ஆளுக்குக் கொஞ்சம் பணம் கொடுங்கடா, கெஞ்சுவான் பாருடா" என்றெல்லாம் கிண்டல் செய்து தன் நண்பர்களுடன் சிரித்து மகிழ்வான்.

இந்நிலையில் ஒரு நாள், கணேஷுக்கு தேர்வுக்கட்டணம் செலுத்த வேண்டிய தொகையை பெற்றோர்கள் அவனிடம் கொடுத்தார்கள்.

வெகுநாட்களாகக் கையில் பணம் இல்லாமல் இருந்த கணேஷுக்கு இந்த பணத்தைக் கண்டதும் செலவு செய்யவேண்டும் எனத் தோன்றியது. உடனே நண்பர்களுடன் சேர்ந்து ஜாலியாக செலவு செய்தான். தேர்வுக்கட்டணம் செலுத்த ஒரு வாரம் உள்ளது... அதற்குள் பணத்தை எப்படியாவது தயார் செய்துவிடலாம் என நினைத்தான்.



ஆனால் அவன் நினைத்தது போல நடக்கவில்லை. "இன்று தேர்வுக்கட்டணம் செலுத்த கடைசி நாள்" என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. வீட்டிலும் கேட்கமுடியாது. கட்டணம் செலுத்தவில்லை என்றால் தேர்வு எழுதமுடியாது. அவன் நண்பர்கள் எல்லோரும் கையில் உள்ள பணம் முழுவதையும் போட்டாலும் பணம் பத்தாது என்ற நிலை ஏற்பட்டது. என்ன செய்வது எனத்தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தான்.

அப்போது அந்தப் பக்கம் நரேன் வந்து கொண்டிருந்தான்.

"அவன் ஏழைடா... பணம் கட்டமுடியாத நிலை ஏற்படுவது சகஜம். நம்ம கணேஷுக்கு என்ன குறைச்சல்? நாமெல்லாம் சேர்ந்து வீணாகச் செலவு செஞ்சிருக்கக் கூடாதுடா" என்றான் விஜய்.

"ஆளாளுக்கு கொஞ்சம் பேசாம இருங்கடா... நானே செம பதற்றத்தில இருக்கேன்" என்றான் கணேஷ்.

அதற்குள் அவர்கள் அருகில் அமைதியாக வந்த நரேன், கணேஷின் கவலையான முகத்தைக் கவனித்தான்.

"என்ன கணேஷ்... ஏன் கவலையா இருக்கே?" என்றான் நரேன்.

"இவர் பெரிய பில்கேட்ஸ் தம்பி... எங்க பணப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கப் போறாரா என்ன?" என்றான் கேலியாக வினோத்.

அவர்களின் கிண்டல் பேச்சுகளை காதில் வாங்கிக்கொள்ளாத நரேன், கணேஷைப் பார்த்து, தன்பேச்சைத் தொடர்ந்தான்.

"கணேஷ்... இன்றுதான் தேர்வுக்கட்டணம் செலுத்த கடைசி நாள். இப்ப உனக்கு பணப் பிரச்சினைனா அது இந்த கட்டணத்துக்குதான்னு நினைக்கிறேன்... சரியா?" என்றான்.

ஆமாம், என்பதுபோலத் தலையசைத்தான் கணேஷ்.

"நீ கவலைப்படாதே கணேஷ்... நான் இப்பதான் எனக்குத் தேர்வுக் கட்டணம்செலுத்தப் போய்கிட்டு இருக்கேன். நீயும் வாடா... இரண்டு பேருக்கும் சேர்த்துக் கட்டிடலாம். என்கிட்ட பணம் இருக்கு" என்றான் நரேன்.

"உன்கிட்ட ஏதுடா இவ்வளவு பணம்?" என்று கேட்டான் கணேஷ்.

"நான் கல்லூரியில் சேர்ந்ததுல இருந்து பகுதி நேர வேலைக்குப் போறேண்டா... நான் வேலைக்கு சேர்ந்ததுல இருந்து உள்ள முழுத் தொகையையும் சேர்த்து, நேத்துதான் சம்பளம் வாங்கினேன்" என்றான் நரேன்.

கணேஷ் அவனை ஆச்சரியமாகப் பார்த்தான்.

நரேன் மேலும் தொடர்ந்தான், "கணேஷ் நீ கவலைப்படாதடா. இரண்டு பேருக்கும் தேர்வுக்கட்டணம் செலுத்தியும் மீதிப் பணம் என்கிட்ட இருக்கும். அதை அப்படியே வங்கியில போடணும்டா" என்றான்.

"எப்படிடா நரேன், உன்னால இப்படி எல்லாம் இருக்க முடியுது? நானும் என் நண்பர்களுடன் சேர்ந்துக்கிட்டு உன்னை எப்படியெல்லாம் கேலி கிண்டல்லாம் செஞ்சிருக்கோம்..." என்றான் கண்கலங்க கணேஷ்.

"அதையெல்லாம் நான் பெரிசா எடுத்துக்கமாட்டேன் கணேஷ். என்னப் பொருத்தவரை யார்கிட்ட போயும் யாசகம் கேட்கக்கூடாது... தன்மானத்தோட வாழணும்" என்றான் நரேன்.

"நானும் இந்த உதவியை மறக்க மாட்டேன் நரேன்... எனக்கும் பகுதிநேர வேலை இருந்தா சொல்லு, உன்கிட்ட வாங்கிய கடனைத் திருப்பித்தரணும்" என்றான் கணேஷ்.

'சரி' எனத் தலையசைத்தான் நரேன்.

இருவரும் தேர்வுக்கட்டணம் செலுத்தச் சென்றார்கள்.

## வாரம் ஒரு திருக்குறள்



**அவை அறிதல்**

**உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்**
**பாத்தியுள் நீர்சொரிந் தற்று.**

தாமே உணர்கின்ற தன்மை உடையவரின் முன் கற்றவர் பேசுதல். தானே வளரும் பயிருள்ள பாத்தியில் நீரைச் சொரிந்தாற் போன்றது.

குறள்:718

# ஆசிரியர் பொன்மொழிகள்

1. நான் உயிரோடு இருப்பதற்கு, என் தந்தைக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், சிறப்பாக வாழ்வதற்கு என் ஆசிரியருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.
   - மாவீரன் அலெக்ஸாண்டர்
2. யாரிடம் கற்கிறோமோ அவரே ஆசிரியர். போதிப்பவர் எல்லாம் ஆசிரியர் ஆகார்.
   - கதே
3. வறட்டுப் பிடிவாதம் கொண்ட மனிதர்களுக்கு அவர்கள் அடையும் நஷ்டங்களே ஆசிரியர்கள்.
   - ஷேக்ஸ்பியர்
4. தாயின் முகம்தான் .குழந்தையின் முதல் பாடப் புத்தகம்.
   - காந்தியடிகள்
5. கல்விக்கூடம் ஒரு தோட்டம். மாணவர்கள் செடிகள். ஆசிரியர்கள் தோட்டக்காரர்கள்.
   - ஜிக்ஜேக்ளர்
6. சராசரி ஆசிரியர் பாடத்தை நடத்துகிறார். சிறந்த ஆசிரியர் நடைமுறை உதாரணங்களோடு கற்பிக்கிறார். உன்னதமான ஆசிரியர் உயிரோட்டத்தை ஏற்படுத்துகிறார்.
   - வில்லியம் அல்பேர்ட்
7. இயற்கைதான் மிகச் சிறந்த ஆசிரியர்.
   - கார்லைல்
8. சிறந்த ஆசிரியருக்குக் கற்பனைத் திறன் உண்டு. அவர்கள் மாணவர்களைத் துல்லியமாக மதிப்பீடு செய்வார்கள். அவர்களுக்கு நகைச்சுவை உணர்வு அதிகம். புதிய சிந்தனைகளையும், வளர்ச்சிகளையும் பின்பற்றுவார்கள்.

# வியப்பூட்டும் சீனா



**புகைப்படங்கள்**

சீனாவைப் பற்றிய தகவல்கள் நம்மை வியக்கவைக்கின்றன. ஆதிகாலத்திலிருந்தே அவர்கள் புதிய கண்டுபிடிப்புகளுக்குச் சொந்தக்காரர்களாக இருந்திருக்கிறார்கள். அவைகளில் சிலவற்றைப் பார்ப்போம்:

**காற்றாடி:** இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் ஹுவான் ஹெங் என்ற அரசன் சீனாவை ஆண்டு வந்தான். அவன் ஒருநாள் சாலையில் சென்றுகொண்டிருக்கும்போது அவன் தலையில் அணிந்திருந்த பட்டுத்தொப்பி காற்றில் பறந்துசென்றது. அப்பொழுது அதன் நுனியில் ஒரு பட்டு நூல் கட்டப்பட்டிருந்தது.


தொப்பியைப் பிடிக்க அந்த நூலை இழுத்தான். தொப்பி காற்றில் அழகாக பறந்தது. அதைப்பார்த்த அவன் அந்த நூலுடன் மேலும் நூல் கட்டிப் பறக்கவிட்டான். அதுவே உலகின் முதல் காற்றாடி. உலகின் முதல் காற்றாடியை அதாவது பட்டத்தைப் பறக்கவிட்டவர்கள் சீனர்கள்தான். பின்னர் மூங்கில், மெல்லிய பட்டுத்துணி, நூலுடன் நல்ல பட்டங்களை உருவாக்கினார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் சீனர்கள் ஒன்பதாவது மாதத்தில், ஒன்பதாவது நாளை பட்டங்கள் தினமாகக் கொண்டாடுகிறார்கள். அந்த நாள் அவர்களுக்கு திருவிழா நாள்.

**காகிதப் பணம்:** காகிதப் பணத்தை உலகில் முதன்முதலாகப் புழக்கத்துக்கு விட்டவர்களும் சீனர்கள்தான். கி.மு.119ஆம் ஆண்டிலேயே சீனர்கள் காகிதப் பணத்தை உருவாக்கிவிட்டனர்.

**சட்டை பொத்தான்கள்:** சீனாவை ஆண்ட டி.ஆங் என்ற மன்னரின் ஆட்சிக்காலத்தில்தான் சீனர்கள் தங்கள் சட்டைகளுக்கு ஐந்து பொத்தான்களை வைத்து அணியும் பழக்கத்தை மேற்கொண்டனர். அப்பழக்கத்திற்கு அடிப்படைக்காரணமாக விளங்கியது, கன்.'.பூஷியஸ் மதத்தின் அன்பு, அறிவு, துணிவு, வாய்மை, நேர்மை ஆகிய ஐந்து கொள்கைகளையும் பின்பற்றவேண்டும் என்பதுதான்.

# சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 01.10.2013

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1010**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 1008

**ஆ.சாமினி, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

பரிசுக்குரியவர்: 1008

பாராட்டுக்குரியவர்கள்

01. கெ.தர்மிலா, பேராதனை, கண்டி.
02. எம்.அபிஷா, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
03. மு.அசின், பூநகரி, கிளிநொச்சி.
04. சி.கம்சாயினி, கச்சாய் றோட், கொடிகாமம்.
05. மா.பானுஜா, எஸ்.எல்.எம். வத்த றம்புக்கனை.
07. க.நவமதி, அல்லின் வீதி, காரைநகர்.
08. யோ.சுபாஷினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

# ஒரு நிமிடத்துக்குள்...

⌘ 6,000 விண்கற்கள் விண்ணில் வீழ்கின்றன.

⌘ 100 பேர் பிறக்கின்றனர். 144 பேர் இறக்கின்றனர்.

⌘ 4,600 செருப்புகள் தைக்கப்படுகின்றன.

⌘ 68 கார்கள் உற்பத்தியாகின்றன.

⌘ சிட்டுக்குருவியின் இதயம் 1,000 முறை துடிக்கும். பசுவின் இதயம் 70 முறை துடிக்கும்.

⌘ யானையின் இதயம் 25 முறையும் ஒட்டகச்சிவிங்கிக்கு 150 முறையும் துடிக்கும்.

# கழிவுகளும் சிதைவடையும் காலமும்...

- ❖ வாழைப்பழத்தோல் - 3 முதல் 4 வாரங்கள்
- ❖ காகித உறை - 1 மாதம்
- ❖ கிழிந்த துணி - 5 மாதங்கள்
- ❖ உல்லன் காலுறை - 1 ஆண்டு
- ❖ மரப்பொருள்கள் - 10 முதல் 15 ஆண்டுகள்.
- ❖ தோல் காலணி - 40 முதல் 50 ஆண்டுகள்.
- ❖ டின் - 50 முதல் 100 ஆண்டுகள்
- ❖ அலுமினிய டப்பா - 200 முதல் 500 ஆண்டுகள்.
- ❖ பிளாஸ்டிக் பொருட்கள் - 1 மில்லியன் ஆண்டுகளுக்கும் அதிகம்.



அற்புதன் எழுதிய

# இடி அமீன்

உண்மைத் தொடர்...

அதிர் இடி 04

"என்னடா பையா சொன்னாய்? மோதும் நோக்கம் இல்லையென்றா சொன்னாய்? என் சுண்டுவிரலுக்குக் கூட தாக்குப் பிடிக்கமாட்டீர்கள்" என்று தன் குண்டான சுண்டுவிரலை அவன் கண்களுக்கு நேராக ஆட்டிக் காண்பித்தான்.

பின்னர் பொத்தென்று அவனைக் கீழே போட்டான். "யாரடா உங்களுக்குத் தலைவன்? என்றான் ஏனையோரைப் பார்த்து.

அவர்கள் நடுக்கத்துடன் அமீனால் தூக்கிப்போடப்பட்டவனை காட்டியதும், அமீனால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

"ஏனடா தலைவன் ஆக ஒரு தகுதி வேண்டாமா?" தன் புஜத்தை மடக்கிக் காட்டியபடி, "தில் வேண்டும் தில்!" என்றான்.

சற்றுநேரம் குறுக்கும்நெடுக்குமாக நடந்த அமீன், அன்று மாலைவரை தன் திறந்த ஜீப்பில் மெய்க்காவலர்களுடன் எல்லைக் கிராமங்களைச் சுற்றிப் பார்வையிட்டான் அமீன்.

எதிர்ப்பட்ட ஆண்களும், பெண்களும் ஒதுங்கிநின்றனர். அவர்கள் யார் என்று தெரியாவிட்டாலும், திறந்த ஜீப்பும், ஆயுதங்களும், சீருடைகளும் இராணுவத்தைச் சேர்ந்த முக்கியமானதாக இருந்தது.

ஒதுங்கி நின்றவர்களில் பெண்களை மட்டுமே அமீன் கண்கள் மேய்ந்து கொண்டு சென்றன.

திடீரென்று சாரியிடம் கூறினான் "நிறுத்து!" சடாரென்று பிரேக் போட்டதில் ஜீப் குலுங்கி கிரீச்சிட்டு நின்றது.

நின்ற இடத்தில் மூன்று பெண்கள் ஒதுங்கி நின்றனர். அவர்களுக்குள் கறுப்பாகவும், வளப்பாகவும் இருந்த பெண்ணை சுட்டுவிரல் ஆட்டி அழைத்தான் அமீன்.

அந்தப் பெண் மிக இளமையாக இருந்தாள். பதினாறு, பதினேழு வயதுதான் இருப்பாள், கண்களில் மிரட்சி தெரிந்தது. ஓடினால் என்று நினைத்தே விரட்டி அடிப்பதாகவும் அவர்கள் அமீனிடம் முறையிட்டனர்.

அவர்கள் சொன்ன பல தகவல்கள் அமீனுக்கு புதுமையாக இருந்தன. "உகண்டாவை என்ன குப்பைத் தொட்டி என்றா நினைத்துவிட்டார்கள்? என்றான். "உங்களுக்கு உதவினால் உகண்டாவுக்கு என்ன இலாபம்? போங்கடா நீங்களே அடிபட்டு செத்துப் போங்கள்" என்று ஒரு கட்டத்தில் அமீன் சலிப்புற்றபோது, அவர்கள் ஆசைவலையை வீசினார்கள்.

"எங்களிடம் போதிய யானைத் தந்தங்கள் இருக்கின்றன. அவற்றையும் தேவையான பணத்தையும் அவ்வப்போது தருவோம். நீங்கள் ஆயுதங்கள் மட்டும் தந்தால்போதும்" என்று அவர்கள் கூறியபோது, அமீனுக்கு பழம் நழுவிப் பாலில் விழுவது போலிருந்தது.

ஆனாலும் "பிகு" பண்ணிக் கொண்டுதான் இறுதியில் சம்மதித்தான்.

ஸயார் கிளர்ச்சியாளர்களுக்கு உதவினால், இராணுவத்தை பலப்படுத்த போதிய நிதி நமக்கு கிடைக்கும். தேவைப்பட்டால் உங்கள் எதிரிகளை ஒடுக்கவும் இவர்கள் உதவியையும் பெறலாம். என்ன நினைக்கிறீர்கள்? உங்கள் உத்தரவுக்காக காத்திருக்கிறேன். ஒழித்துக் கட்டவா? உதவி செய்யவா?" என்று கேட்டிருந்தான் அமீன்.

ஜனாதிபதியை கவிழ்க்கும் சட்டென்று நின்று "உங்களுன்னு என்ன வேண்டும்? உயிர்ப்பிச்சையா? தரமாட்டேன். ஏன் தெரியுமா? எனக்கு உயிர்கள் என்றால் பிரியம். பிரிய மானதை எப்படி பிச்சையிட முடியும்?" என்று கேட்டுவிட்டு தன் இராட்சத உடல் குலுங்கச் சிரித்தான்!

அவர்கள் மிக மெதுவாக, பணிவாக அமீனிடம் சொன்ன பதில், அமீனையும் ஆச்சரியப்பட வைத்தது.

"உங்கள் உதவிதான் தேவை" என்றனர் ஒரே குரலில்.

அமீன் தன் கட்டைவிரலால் தாடையைத் தேய்த்தபடி அவர்களை கூர்ந்து பார்த்தான். "உதவியா? என்ன உதவி என்றான்"

"எங்கள் கிளர்ச்சிக்கு ஆயுத உதவி, ஸயார் அரசை கவிழ்க்க உதவி" என்றனர்.

அமீனுக்கு மூளைக்குள் ஒரு பொறி தட்டியது.

தேடிக்கொண்டிருக்கும் வாய்ப்புக்கான திறவுகோல் கைக்கு கிடைக்கப்போகிறது என்று அவனது மனதுக்குள் இருந்து ஒரு பட்சி சொல்வது போல் இருந்தது.

மேற்கொண்டு பேசாமல், தன் படையினரை நோக்கி கட்டளையிட்டான்.

"இவர்களை தனியாக அடைத்து வையுங்கள், மாலையில் பேசிக்கொள்கின்றேன்"

படையினர் அனைவர் முன்பாகவும் பேச அவன் பிரியப்படவில்லை.



மான்குட்டியின் சாயல் தெரியலாம்.

அமீனையும், ஜீப்பில் இருந்த இராணுவத்தினரையும் பார்த்து அவள் மிரண்டாள். ஓடிவிடலாமா என்று அவள் யோசிப்பதும் கண்களில் தெரிந்தது.

அமீன் ஜீப்பிலிருந்து கீழே குதித்தான். அவளுக்கு அருகில் நின்ற பெண்கள் பயத்தில் பின்னடைந்தனர். அவளும் பின்னடைந்தபோது, தன் இரும்பு போன்ற கரங்களால், அவள் கரத்தை பற்றிக் கொண்டு "பயப்படாதே, உன்னைச் சாப்பிடமாட்டேன்" என்றபடி கண்களால் ஆராய்ந்தான்.

அவள் தேம்பித் தேம்பி பயத்தில் உடல்நடுங்க அழத் தொடங்கிவிட்டாள்.

அவளது மார்பகங்கள் பயத்தில் புறாப் போல துடிப்பதைப் பார்த்தான் அமீன்.

என்ன நினைத்தானோ, சட்டென்று "போடி" என்று கழுத்தில் பிடித்து தள்ளிவிட்டு ஜீப்பில் வந்து ஏறிக்கொண்டான்.

அன்றுமாலையில் ஸயார் கிளர்ச்சியாளர்களை தனியாக சந்தித்தான். "தனிமையில் சந்திக்கிறீர்கள், உங்கள் உதவிக்கு." என்று அமீனின் கீழ் அதிகாரி தயக்கமாக கேட்ட போது, "என் சுண்டுவிரல் போதும்" என்று அவன் சிரித்த சிரிப்புக்கு வாய் மூடிக்கொண்டான் கீழ் அதிகாரி.

ஸயார் ஆட்சியாளர்கள்தான் தங்களை உகண்டாவுக்குள் துரத்துவதாகவும், உகண்டாவுக்கு சுமையாக இருக்கட்டும் திட்டத்தோடு இருந்த பிரதமர் ஒபொடேக்கு அமீனின் யோசனை பிடித்திருந்தது.

"உதவி செய்ய உத்தரவு" என்று பதில் பறந்தது பிரதமர் ஒபொடேவிடம் இருந்து.

ஸயார் கிளர்ச்சியாளர்களுக்கு அமீன் உதவி செய்த விபரம் பிரதமருக்கு மட்டுமே தெரிந்தது.

இராணுவத் தளபதிக்கோ, ஜனாதிபதிக்கோ அதுபற்றி ஒன்றும் தெரியாது.

பிரதமர் ஒபொடேவுக்கு அவ்வப்போது யானைத் தந்தங்களை அனுப்பி வைத்த இடி அமீன், பெரும்பாலான தந்தங்களை விற்று தன் வங்கிக் கணக்கில் போட்டுக்கொண்டான்.

ஒபொடேவுக்கும் அமீனின் கணக்கு வழக்கில் ஒருமுறை சந்தேகம், தன்னையும் அமீன் ஏமாற்றுகிறானோ? என்று உறுத்தல்.

கணக்குகளுடன் வருமாறு அமீனுக்கு தகவல் கொடுத்தார். அமீன் மூளையை உபயோகித்தான்.

ஒபொடேயைச் சந்திக்க முன்பாக, ஒபொடேயின் மகளைச் சந்தித்தான் அமீன்.

"தந்தங்களைவிட வழவழப்பாக இருக்கிறது" என்று அவளது தொடைகளை வருடி வர்ணித்துவிட்டு, "யானைத் தந்தங்களை நான் சாப்பிட்டேன் என்று உன் தந்தை நினைக்கிறாரா? நான் படையை விட்டே விலகலாம் என்றிருக்கிறேன்" என்றான் அவளின் மார்பில் சரிந்துகொண்டு.

அமீனை இழக்க அவள் தயாராக இல்லை. அவனை இறுக அணைத்து, அவன் உடலின் திடத்தை உணர்ந்தபடி கூறினாள், "நான் அவருடன் பேசுகிறேன்"

அமீன் அவளை முரட்டுத்தனமாக ஆக்கிரமித்தான் அந்த முரட்டுத்தனம் அவளை பைத்தியமாக்கியது.

மகளின் அமீன் பைத்தியம் தனது பதவிக்கு ஆபத்தாகப் போகிறது என்பது தந்தைக்கு தெரியவில்லை. அமீனிடம் அவர் கணக்கு கேட்கவில்லை.

(தொடரும்)

---

முரசு

## குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும்
வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன்
பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**வாசகர்களின் கவனத்திற்கு...**

முரசு வாசகர்களின் உரிமையான வேண்டுகோளுக்கு அமைவாக, (முரசு 1021 - கு.எ. போ. - 528) குறுக்கெழுத்துப் போட்டியில் இருந்து வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூபா 1000/= ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை அறியத்தருகின்றோம்.

### குறுக்கெழுத்துப் போட்டி - 539

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | ■ | 12 |
| 13 | 14 | 15 | ■ | 17 | 18 |
| 19 | 20 | ■ | 22 | 23 | 24 |
| 25 | 26 | ■ | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | ■ |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **01.10.2013** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 539
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-169, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப் போட்டி 537 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 சு | 2 ர | 3 தி | 4 ந் | 5 த | 6 ம் |
| 7 வா | 8 ர | 9 ப் | 10 பா | 11 டு | ■ |
| 13 ச | 14 ம் | ■ | 16 ப | ■ | 18 மா |
| 19 கா | 20 வி | 21 ய | 22 ம் | ■ | 24 ரி |
| 25 ச | 26 வா | ■ | 28 த | 29 மா | 30 வ |
| 31 ம் | 32 இ | 33 ர | 34 ச | 35 னி | 36 க |

**இடமிருந்து வலம்**

01. சொல்லத்தகாதது.
07. பருகல்.
13. பிரதி. உத்தரம். (குழம்பியுள்ளது)
17. இகழ்ச்சி. குற்றம். ஆண்டவர்.
19. சேர். (திரும்பியுள்ளது)
22. ஆவல்; ஒரு பாடல். (திரும்பியுள்ளது)
25. கணித பாடத்தில் வரும் குறியீடுகளில் ஒன்று. (திரும்பியுள்ளது)
28. இடைக்கால நடிகைகளில் ஒருவர். (திரும்பியுள்ளது)
31. தம்பித்தல் ; மண்வெட்டி. (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. புசிப்பது.
02. பரிசத்தால் மெல்லிய பொருள் தம் நிலை கெடுதல்.(குழம்பியுள்ளது)
03. ஒரு வெட்டும் ஆயுதம். (குழம்பியுள்ளது)
04. ஒரு அசைச்சொல்; இதில் ஒரு சினிமா பாட்டும் தொடங்கும்.
06. இன்பமும் துன்பமும். (குழம்பியுள்ளது)
17. சுவாசம்விடல்.
22. உப்பளம்; கடற்கரைச்சோலை. (குழம்பியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 537 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**சா.மகிந்தன், கோப்பாய் மேற்கு, கோப்பாய்.**

பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. யூலியஸ் ஆதர் போசன், சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
02. எம்.மாலந்தி, 7ஆம் வட்டாரம், நெடுந்தீவு.
03. எவ்.எம்.தஸ்மியா, மத்திய வீதி, காத்தான் குடி -03.
04. மா.டென்சிலா, தபால்கந்தோர் வீதி, மன்னார்.
05. சா.யசிந்தன், தென்னக்கும்புர, கண்டி.
06. கு.விசிந்தன், விவேகானந்தநகர் கிழக்கு, கிளிநொச்சி.
07. பொ.சயந்தினி, சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.
08. க.கவின், கொக்குவில், யாழ்ப்பாணம்.
09. கெ.பொன்னம்பலம், கைதடி மத்தி, கைதடி.



அம்மா அம்மம்மா



ஜாகி

# ஜில்லாவில் மாற்றம்

ஜில்லா படத்தில் மோன்லால் இடம்பெறும் காட்சிகள் சம்பந்தப்பட்ட படப்பிடிப்பானது ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

ஹைதராபாத்தில் நடைபெற்ற முதற்கட்ட படப்பிடிப்பை தொடர்ந்து அடுத்த கட்டமாக திருநெல்வேலியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் மோகன் லாலும் இப்படத்தின் வில்லன் ரவி மரியா இடம்பெறும் காட்சிகள் எடுக்கப்படுவதாக இருந்தது. ஆனால் திடீரென மோகன் லாலுக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் படப்பிடிப்பு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. தற்போது சென்னையில் உள்ள மோகன் ஸ்டூடியோவில் அக்ஷன் காட்சிகளை எடுக்க முடிவு செய்துள்ளனராம்.

# கவர்ச்சியில் மகிழ்கிறார் தமன்னா

தமிழில் கேடி படத்தின்மூலம் அறிமுக மானவர் தமன்னா. தொடக்கத்தில் குடும்பப் பாங்கான உடையுடன் நடித்த அவர் தற்போது கவர்ச்சி உடைகளுக்கு மாறியுள்ளார். தமிழ் படங்களில் கவர்ச்சிக்கு எல்லை வைத்திருந்த அவர் தெலுங்கில் அதை மீறி அரைகுறை ஆடையில் ஆபாசமாக நடிக்கிறார். இந்தியில் தற்போது இரண்டு படங்களில் ஒப்பந்தமாகியுள்ளார். அங்கும் கவர்ச்சி மழை-யில் நனைகிறார்.

இதுகுறித்து தமன்னாவிடம் கேட்டால், என் உடல்வாகுக்கு கவர்ச்சி உடைகள் பொருத்தமாக இருக்கின்றன. வயிறு, தொடை பகுதிகளை அழகுபடுத்தி காட்டு கின்றன. எனவே கவர்ச்சி ஆடை-களை அணி கிறேன் என்கிறார்.



# வெற்றி நிச்சயம்!

பாஸ் என்ற பாஸ்கரன் படத்தை அடுத்து ஆர்யா- நயன்தாரா ஜோடியாக நடித்திருக்கும் படம் ராஜா ராணி. இவர்களுடன் ஜெய், நஸ்ரியா, சத்யராஜ், சத்யன் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள்.

இப்படத்தை சங்கரிடம் இணை இயக்குனராக இருந்த அட்லீ இயக்கி இருக்கிறார். ஜி.வி. பிரகா' இசையமைத்திருக்கிறார் மற்றும் பிரபல இயக்குனர் ஏ.ஆர். முருகதாஸ் தயாரித்துள்ளார். இப்படத்தின் பாடல் வெளியீடு சமீபத்தில் நடைபெற்றது.

இந்நிலையில் இப்படத்திற்கு யு சான்றிதழ் கிடைத்துள்ளது, மேலும் இப்படம் வருகிற 27ம் திகதி வெளியாகும் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஏ.ஆர்.முருகதாஸ், ராஜா ராணி மனதை வருடும் காதல் கதை, நெஞ்சை மகிழ செய்யும் ஒரு இனிய பயணம் இதில் உண்டு. திறமைகளின் சங்கமமாக இருக்கும் இப்படம் நிச்சயம் பெரும் வெற்றி படமாக இருக்கும் என பாக்ஸ் ஸ்டார் நிறுவனத்தாருடன் நானும் உறுதியாக நம்புகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# குத்தாட்...
# க...

எனக்கு...
ஸ்ரேயா. ...
தற்போது ...
கோதாவில்...
க...
கொண்டிரு...
நா.அழகப்...
பின்னர் அ...
நடிகை எ...
ஏறக்கட்டி...
கன்னட ப...
இ...
என்ற பட...
சில மாத...
படத்துக்கா...
கமும் நம்...
சான்ஸ் கி...
வந்திருக்கி...

# தீர்க்கமாக சிந்திக்கிறார் பிரியாமணி

பருத்திவீரன் மூலம் தமிழ் ரசிர்களின் மத்தியில் பிரபலமான நம்ம முத்தழகு. அடுத்து ஓரிரு படங்களில் நடித்த அவர் படிப்படியாக தமிழ் சினிமாவில் காணாமல்போனார். சமீபத்தில் சென்னை எக்ஸ்பிரஸ் இந்திப் படத்தில் ஒற்றைப் பாடலுக்கு ... மாடினார். தற்போது கன்னடம், தெலுங்கு மற்றும் மலையாள... படங்களில் நடித்துவருகிறார். தமிழில்வரும் வாய்ப்புகள் திருப்தியாக அமையவில்லை என்று தெரிவித்த ப்ரியாம... இப்போது தனது திருமணம் குறித்து சீரியஸாக... சிந்திக்க ஆரம்பித்துள்ளாராம்.

இதுகுறித்து அவரிடம் கேட்டால், இன்னும் இரண்டு ஆனடுகளில் எனக்குத் திருமணம் நடக்கலாம். ஆனால் நிச்சயம் பெற்றோர்களின் சம்மதத்துடன்கூடிய காதல் திருமணமாக இருக்கும். மேலும் முன்பின் தெரியாத ஒருவரைத் திருமணம்செய்து கொள்ள ஒப்புக்கொண்டு பின்னர் வருத்தப்படுவதைவிட அவரைப் பற்றி நன்கு தெரிந்துகொண்டு திருமணத்தைப் பற்றி முடிவு செய்வதே பொருத்தமாக இருக்கும் என்கிறார்.

# கமலின் ஆசை!

ரஜினி- கமல் நடித்து 34 ஆண்டுகளுக்கு முன்பு வெளியான நினைத்தாலே இனிக்கும் படத்தை டிஜிட்டல் வடிவில் மறு வெளியீடு செய்கிறது ராஜ் தொலைக்காட்சி. இதன் டிரைலர் வெளியீட்டு விழாவில் பாலசந்தர், எம்.எஸ். விஸ்வநாதன், கமல்ஹாசன், உட்பட திரையுலகினர் கலந்து கொண்டனர். இந்த விழாவில் பேசிய கமல், என்னை எல்லோரும் சிறந்த இயக்குனராக சொல்கிறார்கள். எனக்கு தெரிந்த சினிமா, தொழில்நுட்பம் எல்லாமே பாலசந்தரிடம் இருந்து தான் கற்றுக்கொண்டேன். இன்னும் சொல்லப்போனால் என்னைவிட சிறந்த நடிகர் பாலசந்தர். பிரமாதமாக நடித்துக் காண்பிப்பார். எனக்கு நீண்டநாளாக ஒரு ஆசை, அது அவரை நடிக்கவைத்து நான் இயக்கவேண்டும் என்பதுதான். அந்த ஆசை விரைவில் நிறைவேறும் என்று நினைக்கிறேன்.

மேலும் அவருடைய அனுமதிகிடைத்த பிறகு முறைப்படி அறிவிக்கலாம் என்று இருக்கிறேன். அவருடன் நானும் சேர்ந்து நடிக்கப்போகிறேன் என்று கூறியுள்ளார் கமல்.

# அரை நிர்வாண...

பூஜா காந்தியின் அரை நிர்வாண ... கன்னட பட உலகில் பிரச்னை எழுந்து... தமிழில் 'திருவண்ணமலை', 'கொக்கி' ... சில படங்களில் நடித்திருப்பவர் பூஜாகா... தற்போது கன்னட பங்களில் நடித்துவ... அரை நிர்வாண தோறத்தில் இவர் இ... போஸ்டர்கள், பெங்களூர் நகரம் முழுவ... ஒட்டப்பட்டதால் பரபர... இ... 'தண்டுபாலயா' ... படதின் ஸ்டில். பட... பல மாதங்கள் கடந்த... இப்போது திடீரென இ... ஒட்டப்பட்டிருப்பது பிர... கிப்பியுள்ளது. இனி ... படுக்கும் பெண்க... இவுபடுத்தும் வகை... போஸ்டர்கள் ஒட்டக்கூ... கர்டக அரசு உத்த... இதற்கு எதிர்ப்பும், ஆ... எந்துள்ளது. பெண்க... உளிட்ட பலர் அரசு ... வேற்றிருக்கின்றனர். ... கனட இயக்குனர் க... லகேஷ் கூறும்போது, ...

# அனுஷ்கா - பாடகர் மோதல்

இயக்குனர் குணசேகர் இயக்கத்தில் தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் தயாராகி வரும படம் ருத்ரம்மா தேவி. இதில் நடிகை அனுஷ்கா ருத்ரம்மா தேவியாகவும், நடிகர் ராணா இளவரசர் சாளுக்கியா வீரபத்திராவாகவும் நடிக்கின்றனர்.

இந்தப் படத்தில் இந்தியாவின் பிரபல ரொப் இசைப் பாடகரான பாபா செகல் அறிமுகமாகிறார்.

இயக்குனர் இப்படத்தில் நடிப்பது குறித்து அவரை அணுகியபோது பாபா தயக்கமின்றி சம்மதம் தெரிவித்துவிட்டாராம். ராணியாகத் தோன்றும் அனுஷ்காவிற்கு இதில் சண்டைக்காட்சிகளும் உண்டு. இவருடன் தானும்சேர்ந்து நடிக்கும் சந்தர்ப்பங்கள் இருப்பதினால் பாபா செகல் இந்த வாய்ப்பு குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

சரித்திரப் பின்னணியில் இப்படி ஒரு திரைப்படம் எடுப்பது குறித்து இயக்குனரிடமும் தனது மகிழ்ச்சியை அவர் தெரிவித்துள்ளார். ருத்ரம்மா தேவி வரலாற்றுப் பின்னணியுடன் வெளிவரும் முதல் 3டி படம் ஆகும். இந்தப் படத்திற்கு இளையராஜா இசையமைக்கிறார்.

# நம்பிக்கையுடன் சல்மான்...

பொலிவூட் நடிகர் ஷாருக்கான் நடிப்பில் சமீபத்தில் வெளி யான சென்னை எக்ஸ்பிரஸ் திரைப்படம் 225.5 கோடி வசூலை எட்டியுள்ளது.

இதுகுறித்து பிக் பாஸ் சீசன்-7 பத்திரிகையாளர் கூட்டத்தில் நடிகர் சல்மான் கான் கூறுகையில், ரமலான் போது ஷாருக்கானை கட்டியணைத்து நான் வாழ்த்து தெரிவித்துகொண்டேன். அது ஒவ்வொரு மனிதனும் செய்யக் கூடியது. அவருடன் எனக்கு தனிப்பட்ட எந்த விரோதமும் இல்லை. அவரது சமீபத்திய வெளியீடு என் சாதனைகளை முறியடித்தது தெரியும். எனது அடுத்த படம் அனைத்து சாதனைகளுக்கும் பதில் அளிக்கும்வகையில் இருக்கும். மேலும் வர இருக்கும் அமீர்கானின் தூம்-3, ரன்பீரின் அடுத்த படம் என அனைத்தையும் எனது படம் முறியடிக்கும் என்று கூறியுள்ளார்.





தாவணி காற்று



வெண்ணிலா வீடு

# ...சயம்!

...யா- நயன்தாரா
...ர்களுடன் ஜெய்,
...த்திருக்கிறார்கள்.
... இருந்த அட்லீ
...நக்கிறார் மற்றும்
...ளார். இப்படத்தின்
...
...கிடைத்துள்ளது,
...என
...
... மனதை வருடும்
... பயணம் இதில்
...டம் நிச்சயம் பெரும்
...றுவனத்தாருடன்
...துள்ளார்.

# குத்தாட்டத்துக்குத் தயாராகிறார் கனவுக் கன்னி

எனக்கு 20 உனக்கு பதினெட்டு படத்தின்மூலம் அறிமுகமானவர் ஸ்ரேயா. தமிழில் பல முன்னணி நடிகர்களுடன் ஜோடி போட்டிருந்தாலும் தற்போது அவர் கைவசம் படங்கள் எதுவும் இல்லை. இதனால் குத்துப்பாட்டு கோதாவில் குதிக்கப்போகிறாராம்.

கந்தசாமி உள்ளிட்ட சில படங்களில் நடித்துக் கொண்டிருந்தபோதே, வடிவேலுடன் இந்திரலோகத்தில் நா.அழகப்பன் என்ற படத்தில் குத்தாட்டம் ஆடினார். ஆனால் பின்னர் அதையே காரணம்காட்டி, கொமடியனுடன் ஆடிய நடிகை என்று சொல்லி அவரை கொலிவூட் நாயகர்கள் ஏறக்கட்டினர். அதனால் சுத்தமாக படவாய்ப்பிழந்து இந்தி, கன்னட படங்களில் நடிக்க சென்றுவிட்டார் ஸ்ரேயா.

இருப்பினும் அவர் அதிகமாக எதிர்பார்த்த 'சந்திரா' என்ற படம் இன்னமும் திரைக்கு வரவில்லை. இதனால் சில மாதங்களாக பொறுத்திருந்து பார்த்த ஸ்ரேயா அந்த படத்துக்காக காத்திருந்தால், தனக்கும் வயதாகிவிடும், திரையுலகமும் நம்மை மறந்துவிடும் என்று இப்போது குத்துப்பாட்டுக்கு ஆட சான்ஸ் கிடைத்தாலும் இன்னொரு ரவுண்டு வரலாம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறாராம்.

# ...ந்திக்கிறார் ...மணி

...ழ் ரசிர்களின் மத்தியில் பிரபலமானார்
...சிரு படங்களில் நடித்த அவர்
...ல் காணாமல்போனார். சமீபத்தில்
...திப் படத்தில் ஒற்றைப் பாடலுக்கு நடன
...னடம், தெலுங்கு மற்றும் மலையாளப்
...கிறார். தமிழில்வரும் வாய்ப்புகள்
...வில்லை என்று தெரிவித்த ப்ரியாமணி,
...னது திருமணம் குறித்து சீரியஸாக
... ஆரம்பித்துள்ளாராம்.

இதுகுறித்து அவரிடம் கேட்டால்,
...ம் இரண்டு ஆண்டுகளில் எனக்குத்
...ம் நடக்கலாம். ஆனால் நிச்சயம்
...ர்களின் சம்மதத்துடன்கூடிய காதல்
...மாக இருக்கும். மேலும் முன்பின்
...த ஒருவரைத் திருமணம்செய்து
... கொள்ள ஒப்புக்கொண்டு பின்னர்
வருத்தப்படுவதைவிட அவரைப் பற்றி நன்கு தெரிந்துகொண்டு திருமணத்தைப் பற்றி முடிவு செய்வதே பொருத்தமாக இருக்கும் என்கிறார்.

# விக்ரம் உஷார்!

புது நாயகர்களின் வரவால் சீனியர் நாயகர்கள் கொஞ்சம் கவனமாகவே உள்ளனராம். புது இயக்குனர், புது நடிகர், புதுவிதமான கதை என்றாலே ரசிகர்கள் நம்பிக்கையுடன் திரையரங்கிற்கு போக ஆரம்பித்துவிட்டார்கள். இதனால் பெரிய நாயகர்களின் படங்களைப் பற்றி மற்றவர்களிடம் விசாரித்து நல்ல பதில் கிடைத்தால்தான் திரையரங்கு பக்கமே வருகிறார்கள்.

ராஜபாட்டை, தாண்டவம் என தொடர் ஏமாற்றத்தில் இருக்கும் விக்ரம் தற்போது நடித்துக்கொண்டிருக்கும் ஷங்கரின் 'ஐ' திரைப்படத்தைத்தான் பெரிதும் நம்பியிருக்கிறார். ஷங்கரின் திரைப்படத்திற்கே இரண்டு வருடங்கள் செலவழித்துவிட்டதால் இனி 3 மாதத்திற்கு ஒரு படம் என வரிசையாக நடிக்கப்போகிறாராம்.

விக்ரமின் வாழ்க்கையில் திருப்புமுனையை ஏற்படுத்திக்கொடுத்த இயக்குனர் பாலா கால்ஷீட் கேட்டபோது கூட நான் மூணு மாசத்துக்கு ஒரு படம் என்ற ஐடியாவில் இருக்கேன். அதுல எல்லாமே கமர்ஷியல் படம்தான். இந்த நிலைமைல நம்ம கூட்டணி சரிப்பட்டு வருமா? எனக் கேட்டதாக பேசப்படுகிறது.

# கை மாறினாலும் தரம் மாறவில்லை

சினிமா பின்னணி இல்லாமல் முன்னணி நடிகராக உயர்ந்தவர் அஜித். காதல் படங்களில் நடிதது வந்தவருக்கு ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் வெளிவந்த தீனா படம் திருப்புமுனையாக அமைந்தது. தற்போது ரசிகர்களின் மத்தியில் 'தல' என்ற பெயரோடு தலைக்கனம் இல்லாமல் வலம்வருகிறார்.

கஜினி, காக்க காக்க மற்றும் நந்தா போன்ற படங்களில் இவர் நடிப்பதாக இருந்தது. ஆனால் சில காரணங்களால் சூர்யா நடித்தார். அதேபோல் நான் கடவுள் படத்திலும் அஜித்துக்குப் பதிலாக ஆர்யா நடித்தார். இப்படி அஜித் நடிக்க இருந்து மாற்று நடிகர்கள் நடித்த படங்கள் மிகப்பெரிய வெற்றி பெற்று அப்படத்தின் நாயகர்களை உச்சத்திற்கும் கொண்டுசென்றது. இதேபோல் தற்போது அஜித் நடிக்க இருந்த படம் வேறு நடிகர் நடித்து மிகப்பெரிய வெற்றி பெற்றுள்ளது தெரியவந்துள்ளது.

அந்தப்படம்தான் 'கோ.' ஒளிப்பதிவாளராக இருந்த கே.வி. ஆனந்த் இயக்கிய படம். அவர் இந்த கதையை அஜீத்துக்காக உருவாக்கினாராம். அதன்பின் சூர்யாவிடம் சென்றதாம். அதன்பின் சிம்புவிடம் கைமாறி கடைசியாக ஜீவா நடித்தாராம்.



# ...ரை நிர்வாணத்தால் திடீர் பரபரப்பு


...ஜா காந்தியின் அரை நிர்வாண போஸ்டரால் ...ட பட உலகில் பிரச்னை எழுந்துள்ளது. ...ல் 'திருவண்ணாமலை', 'கொக்கி' உள்ளிட்ட ... படங்களில் நடித்திருப்பவர் பூஜாகாந்தி. இவர் ...போது கன்னட படங்களில் நடித்துவருகிறார். ...ர நிர்வாண தோற்றத்தில் இவர் இருப்பதுபோன்ற ...ஸ்டர்கள், பெங்களூர் நகரம் முழுவதும் ஒட்டப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. இது, 'தண்டுபாலயா' என்ற படத்தின் ஸ்டில். படம் வெளியாகி பல மாதங்கள் கடந்த நிலையில் இப்போது திடீரென இந்த போஸ்டர் ஒட்டப்பட்டிருப்பது பிரச்சினையை கிளப்பியுள்ளது. இனி எந்த படத்துக்கும் பெண்களை இழிவுபடுத்தும் வகையில் ஆபாச போஸ்டர்கள் ஒட்டக்கூடாது என்று கர்நாடக அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்கு எதிர்ப்பும், ஆதரவும் எழுந்துள்ளது. பெண்கள் அமைப்பு உள்ளிட்ட பலர் அரசு உத்தரவை வரவேற்றிருக்கின்றனர். இதுபற்றி கன்னட இயக்குனர் கவிதா லங்கேஷ் கூறும்போது, "கர்நாடக பிலிம் சேம்பரின் அங்கீகாரம் பெற்றுதான் பட போஸ்டர்கள் ஒட்டப்படுகின்றன. அதற்கு ஆட்சேபம் தெரிவிப்பது சரியல்ல. இதுகுறித்து அரசும், பிலிம்சேம்பரும் கலந்துபேசி இப்பிரச்சினை குறித்து சரியான தீர்வு காண வேண்டும்" என்றார்.

'தண்டுபாலயா' பட தயாரிப்பாளர் சீனிவாச ராஜா கூறும்போது, "பெண்களை மையமாக வைத்து இயக்கும் படங்களில் அந்தந்த கேரக்டருக்கு ஏற்பத்தான் போஸ்டரும் வெளியிடப்படுகிறது. தாசி பற்றிய கதையில் முழுமையாக உடலை மறைத்துக்கொண்டு நடிக்க முடியாது. அப்படி காட்சி அமைத்தால் பெண்களுக்கு எதிராக நடக்கும் அவதூறுகளை சுட்டிக்காட்ட முடியாது" என்றார்.

# ...ன்...

...ல்
...5 கோடி
...
...ாளர்
...ான்
...து
...ம்
...ட்ட எந்த
...வெளியீடு
... எனது
...ம் பதில்
...
...டுத்த
...தும்

# தேன் கிண்ணம்



## கனவு!

கடைத் தெருவில் தொங்கும்
அழகான புடைவைகள்
அனைத்தையும்
உனக்கு கட்டி
அழகு பார்க்கின்றேன்
கற்பனையில்!

என் இனியவளே!
என் முதற் சம்பளத்தில்
உனக்கு புடைவை வாங்கித்
தருவதாய்கூட
கனா கண்டேன்.

ஆனால் நீதான் அதற்கு முன்பே!
என்னை சம்பளம் இல்லா வேலை
ஒன்றிற்கு அனுப்பி வைத்தாயே!
வீட்டோட மாப்பிள்ளை
என்ற பதவிக்கு...!

சிந்து - வேலணை



## பெற்ற தாய்க்குச் செத்த மகன்!

கருவில் - உயிர்
சுமந்து உருவைத் தந்த
உத்தமியை மறந்துவிட்டுப்
போன மகன்!
முந்தானை - கனி
புசிக்க தந்தாளை
பசிக்க விட்டுப்போன மகன்!
மூடா - விழி
சோரா (து) முழுநாளும்
பணி செய்த அத்தாயை
அறுத்துவிட்டுப் போன மகன்!
"முத்தே! முழு நிலவே" எனக்
கட்டி வளர்த்தவளை
கைவிட்டுப் போன மகன்!
பெற்றாள் - பேர்
இறைக்குச் சம (மான்)
அன்னவளின்
அடி தொழ மறந்து
பழுதுபட்டுப் போன மகன்
பணிவுந் - திருப்பணியும்
அற்றுப் போனமையோ?
இறை எரிச்சல்
நெருப்பாகி இகமழிய
இடமளித்துப் போன மகன்!
பாசம் - விசு வாசமிங்கே
பகிர்ந்து கொள்ளப்படாது
அன்பீர(ம்) இரக்கங்கள்
வற்றிச் சுற்றுகின்ற
பூமித்தாயையும் புறக்கணித்துப்
போன மகன்! ஈவு - இரக்க
இரத்த பாசமற்று
தான் பிறந்து இருந்த
இடமும் மறந்து ஈன்ற தாய்
நோயுற்றுப்
பாயில்... கண்டு வந்து
தொண்டு புரியாமல்
தூரத்தே தொலைந்து போய்ச்
செத்த மகன்!

பொன்.நவநீதன். பாண்டிருப்பு



## அழகிய பண்டமானாள்

சேற்றில் மலர்ந்த
செந்தாமரை
சிவப்புக் குளத்தில்
சிதறி கிடக்கிறது!


வற்றாத வறுமை,
வரையறையற்ற
பொருளாதாரச் சுமை,
காசுக்கு கடைவைத்தபோது,
வாடிக்கையாளரை
வாசல்தேடி வரவைத்தது!

கட்டியவன்
கடமையை மறந்து
கட்டிலையும் காட்டி கட்டையும்
அவிழ்த்துவிட்டபோது,
கற்பனையோடு
கற்பும் பறிபோய்விட்டது!

குடும்ப விளக்காக
கோயிலில் எரிய வேண்டியவள்,
சமுதாயச் சந்தையில்
அழகிய பண்டமானாள்!

நா.ஜெயபாலன், பிபிலை.

## ஈழத்துக் கவிஞர்



## கல்லடி வேலுப்பிள்ளை

கல்லடி வேலுப்பிள்ளை (மார்ச் 7, 1860 - 1944, வசாவிளான், யாழ்ப்பாணம்) 'ஆசுகவி' என ஈழத்தமிழர்களால் அன்புடன் போற்றப் பெற்ற ஈழத்துக் கவிஞர்.

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்குப் பகுதியில் ஒரு சிற்றூரான 'வசாவிளான்' என்னும் ஊரில் கந்தப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிக்கு, 1860 ஆம் ஆண்டு வேலுப்பிள்ளை பிறந்தார். வசாவிளான் கிராமத்தில் வேலுப்பிள்ளை பிறந்த வீட்டினருகே ஒரு பெரிய கல் மலை இருந்தது. கல் மலைக்கு அருகேயிருந்த வீட்டில் தோன்றிய வேலுப்பிள்ளை, இளமைக் காலத்திலிருந்தே கல்லடி வேலுப்பிள்ளை எனக் குறிப்பிடப் பெற்றார்.

தமிழ்ச் சான்றோர்களிடம் தமிழ்மொழியை முறையாகக் கற்றுப் புலமைபெற்றார். வடமொழி ஆர்வத்தால், அம்மொழியைப் பண்டிதர் ஒருவரிடம் கற்றுக்கொண்டார்.

இளமைக் காலம் முதலாகவே, ஓர் இதழினைத் தொடங்கி நடத்த வேண்டுமென்ற அவரது கனவு நாற்பது வயதிற்குப் பின்னரே நனவானது. ஒரு சில அன்பர்களின் உதவியுடன் தமிழ்நாட்டுக்கு சென்றுபுரிந்து, சென்னையில், ஓர் அச்சு இயந்திரத்தை வாங்கிவந்து, யாழ்ப்பாணத்தில் சுதேச நாட்டியம் இதழைத் தோற்றம் பெறச் செய்தார் வேலுப்பிள்ளை.

தமிழ்மொழியில் வசனநடையை வளம்கொழிக்கச் செய்த சான்றோர்களில் ஆசுகவியும் ஒருவரென்பதை 'சுதேச நாட்டிய'த்தில் அவர் எழுதிய கட்டுரைகளிலிருந்து தெளிவாக அறிய முடிகிறது. சுதேச நாட்டியம் பன்னெடுங்காலம், ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளையின் உள்ளக் கருத்துகளை வெளிப்படுத்தும் அரியதோர் இதழாகத் திகழ்ந்து, அவரது பன்முகத் தமிழ்த் திருப்பணிகளைத் தமிழுலகம் உணர்ந்து போற்றுமாறு செய்வித்தது.

நினைக்கின்ற நேரமெல்லாம், அருவியாய்க் கவிதையைக் கொட்டும் ஆற்றலை இளமைக் காலத்திலிருந்தே பெற்றிருந்த வேலுப்பிள்ளையை, மக்கள் ஆசுகவி என அழைத்து மகிழ்ந்தனர். பல்லாயிரக்கணக்கான பாடல்களை, ஆசுகவி வேலுப்பிள்ளை பாடி வழங்கியிருப்பினும், அவரது கவிதை நூல்களுள் கதிரமலைப் பேரின்பக் காதல், மேலைத்தேய மதுபான வேடிக்கைக் கும்மி, உரும்பிராய் கருணாகர விநாயகர் தோத்திரப் பாமாலை ஆகியன பெரும் பெயர் பெற்றன.

கவியாற்றலில் வல்லமை கொண்டிருந்த வேலுப்பிள்ளை, உரைநடை எழுதுவதில், இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னரே, திறமும் உரமும் பெற்றுத் திகழ்ந்தார். ஈழத்தில் ஆறுமுக நாவலருடைய காலத்திற்குப் பின்னர், அப்பெருமானின் வழிநடந்து, தமிழ் வசனநடைக்குச் செழுமையூட்டச் செழிக்கச் செய்தவர் கல்லடி வேலுப்பிள்ளை ஆவார்.

ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை கண்டன நூல்கள் சில எழுதினார். கடவுள் துதி நூல்கள் சில உருவாக்கினார். வரலாற்று ஆய்வு நூல்களும் படைத்தளித்தார். ஏறத்தாழ இருபது நூல்கள் படைத்த அப்பெருந்தகை, தமது நூல்களில் கையாண்டுள்ள வசன நடை, தமிழின் உரைநடைச் செல்வத்தை ஒளிபெறச் செய்தது. அவரது திறமிக்க ஆய்வுப் புலமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது யாழ்ப்பாண வைபவ கௌமுதி.

## இவளின்றி வாழ்வில்லை

நெஞ்சறைகளில் சுவாசமின்றி மூச்சு முட்டி
இரத்தம் உடைந்து நினைவுகளெல்லாம்
சம்மட்டியாக மாறி உணர்வுகளை
தாக்கும் தகனம் கண்களின் கரு மொழியைச் சுற்றி
சிவந்து கொள்கிறது... கண்ணீரும் சுடுகிறது...

துலங்குமிந்த தூரம் துரத்தி துரத்தி
வெட்டுகிறது குத்துகிறது
மனது முடியாமல் மன்றாடி மண்டியிட்டு
கத்துகிறது கதறுகிறது
அவள் எண்ணங்களில் ஏக்கங்கள் ஏமாறி
சிதறுகிறது பதறுகிறது.

இதயவறைகளை மாளிகையாக்கி நாடி நரம்புகளால்
காவலமைத்து இரத்தத்தால் வண்ணம் தீட்டி
தசையாலும் எலும்பாலும் வேலியமைத்து
என்னுயிரில் உயிர் கொடுத்து - அங்கே
உண்மையுள்ள அவள் அன்புள்ளத்தை சிகரமேற்றி
காத்திருக்கிறேன்
சிற்றிதழ் சிவக்க சிரிக்கும் என்
செந்தாமரைக்கன்னி அவளுக்காக

பூ முகத்தில் பிரசவிக்கும் புன்னகையில்
புதிய யுகம் காண்கிறது
விழிகளும் வியந்துவிட்டன அவளை அணைப்பதற்கு
இமைகள் கூட மறந்துவிட்டன இமைப்பதற்கு

இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் இன்னலை
மட்டுமே உணர்கிறேன் இம்சையாக
என்னருகில் அவள் இல்லாத இடைவெளியால்

சிந்தை உருகும் பிரிவு அது உள்ளத்தின்
சிறை வைப்பு
சரிந்து கிடக்கும் எண்ண ஒளியில்
குறைந்துவிடா அழ வைப்பு
புரிந்துவிடா வேதனையால் வெளிப்படும்
புண்பட்ட நெஞ்சமுணரும்
ஆதரவான அவளின் ஒலி அழைப்பு

என்னைத் தண்டிப்பது விதிதானா இல்லை
அவளை எதிர்பார்க்கும் என் மனதின்
சதிதானா?
விடையின்றி கேள்விகேட்டு என்னுள்ளேயே
இடிந்து வீழ்ந்து தவிக்கின்றேனே
இவளின்றி வாழ்வில்லை எனத் துடிக்கிறேனே...



எஸ்.சிபானி முஹம்மட்,
ஒலுவில்




பிரசவம் ஒரு இயற்கை நிகழ்வு. உலகில் 3 விநாடிக்குள் ஒரு குழந்தை பிறக்கின்றது. ஆனால் ஒவ்வொரு தாய்க்கும் இது வாழ்வில் ஓர் முக்கியமான காலம். மகிழ்ச்சி, பயம், கடின உழைப்பு கலந்த ஓர் புதிய அனுபவம்.

கர்ப்ப காலத்தில் தாய்மாருக்கு மனதில் எழும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்திலும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மாற்றம், பிரச்சினைகள் என்பவற்றை விளக்கவும் எடுத்த முயற்சி இது. சற்று ஆழமாக காலை வைத்திருப்பதாக தோற்றலாம். ஆனால் இந்த கணினி யுகத்தில் கண்ணாடித் தன்மை (Transparency) அவசியமென நான் கருதுகின்றேன். மருத்துவம் மூடுமந்திரமாய் இருந்த காலம் விண்ணேறிவிட்டது. நோயாளிகள் தங்கள் பிரச்சினைகளை நன்கு விளக்கமாக அறிய விளைகின்றனர்.

Dr. சி.நவநீதன்

# ஆரம்ப கர்ப்ப காலம்

**தவீர்க்கப்பட வேண்டிய உணவுகள் எவை?**

01. அதிக கொழுப்பு உள்ள உணவுகள்.
02. அதிக தேநீர் கோப்பி.
03. நன்கு அறியப்படாத மூலிகை மருந்துகள்.
04. ஒவ்வாமை உணவுகள்.
05. நன்கு சமைக்காத உணவுகள்.

(உ+ம்: பால், சலாட் வகைகள்)

**குங்குமப்பூ சாப்பிடலாமா?**

உங்கள் குழந்தையின் உடல் நிறம் தாய், தந்தையின் மரபணுக்களால் மட்டுமே தீர்மானிக்கப்படுகிறது. எனவே நீங்கள் உட்கொள்ளும் உணவு உங்கள் குழந்தையின் நிறத்தை மாற்றும் என எண்ணுவது வீணாகும். ஆனால் நீங்கள் உட்கொள்ளும் சத்துள்ள உணவுகள் உங்கள் குழந்தையை ஆரோக்கியமானதாக்கும்.

**ஏனைய தவீர்க்க வேண்டிய விடயங்கள்**

01. X கதிர் பரிசோதனை.
02. மதுசாரம் உள்ள பானங்கள்.
03. நச்சு வாயுக்கள்.
04. தவறான மருந்துப் பாவனை.
05. அதிகளவு புகை, உங்கள் கணவரின் புகைத்தல் உங்களையும் குழந்தையையும் பாதிக்கும். நுளம்புத்திரி புகையும் ஆபத்தானது.

**கர்ப்பகாலத்தில் கவனிக்க வேண்டிய உணவு பாதுகாப்பு முறைகள்**

சில கிருமிகளும் பக்ரீரியாக்களும் உணவு மூலம் உடலினுள் சென்று தாயின் கருப்பையிலுள்ள குழந்தையையும் பாதிக்கலாம்.

01. லிஸ்ரீரியா:
இது கருச்சிதைவை ஏற்படுத்தக்கூடியது. பால் உற்பத்திப் பொருட்கள், சமைக்காத சலாட் வகைகள்மூலம் பரவும்.

02. ரொக்சோ பிளாஸ்மா:
இந்நோய் கருச்சிதைவையும், அங்கவீனமான குழந்தையையும் உண்டாக்கும். இது பூனைகளின் மலம்மூலம் பரவுகிறது.



எனவே பின்வரும் விசேட கவனங்கள் அவசியம்.

01. கையை கழுவி சுத்தமாக இருத்தல்
02. மரக்கறி, இலைவகைகளை பாவிக்க முன் நன்கு கழுவுதல்.
03. முட்டை, பால் என்பன நன்கு சமைத்த பின்னரே உட்கொள்ளவேண்டும்.
04. நன்கு சமைக்காத இறைச்சி, கடலுணவுகளை தவிர்த்தல்.
05. காலாவதியான உணவுகளை தவிர்த்தல்
06. சமையலறையை தூய்மையாக வைத்திருத்தல்.
07. பூனை மற்றும் மிருக எச்சங்களுடன் தொடர்பு ஏற்படுவதை தவிர்த்தல்.
08. பொக்குளிப்பான், சின்னமுத்து போன்ற நோய்கள் தொற்றிக்கொள்ளாமல் விலகி இருத்தல்.

**கர்ப்ப காலத்தில் உடலுறவு கொள்ளலாமா?**

கர்ப்பமுற்றிருக்கும் பொழுது உடலுறவில் ஈடுபடுவதில் பிரச்சினைகள் ஏதுமில்லை. எனினும் கீழ்வரும் சந்தர்ப்பங்களில் உடலுறவு தவிர்க்கப்படுதல் வேண்டும்

01. நஞ்சுக்கொடி கீழிருத்தல்.
02. முந்திய குறை மாத பிரசவங்கள்.

**கர்ப்பமுற்றிருக்கும் பொழுது வேலை செய்யலாமா?**

சாதாரணமாக வீட்டுவேலைகள், மற்றும் அலுவலக வேலைகள் கர்ப்பத்தை பாதிப்பதில்லை. மாறாக கூடியளவு ஓய்வும் அதிகளவு நித்திரையும் உடற்பருமனை அதிகரிக்கச் செய்து பிரசவ காலத்தை சிக்கலுக்குள்ளாக்கும், தினமும் சராசரி 20 நிமிட நேர நடை உடலுக்கு நன்று.

(தொடரும்)

## தொப்பை குறைய உதவும் பயிற்சி


இன்றைய இளைஞர்களை அனைவரையும் பாடாய்ப்படுத்தும் பிரச்சினை எதுவென்றால் அது தொப்பை. இந்த தொப்பையை குறைக்க அவர்கள் எந்தவிதமான முயற்சியும் எடுக்கநேரம் கிடைப்பதில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு வீட்டில் இருந்தபடியே செய்யக்கூடிய எளிய பயிற்சியை தெரிந்துகொள்ளுங்கள். இந்த பயிற்சியை தொடர்ந்து தினமும் செய்துவந்தால் 3 மாதத்தில் தொப்பை படிப்படியாக குறைவதைக் காணலாம்.

**செய்முறை:**

முதலில் விரிப்பில் கால்களை நேராக நீட்டி படுத்துக் கொள்ளவும். கைகளை உடலோடு ஒட்டிவைக்கவும். பின்னர் கால்கள் இரண்டையும் முட்டிவரை மடக்கவும். இயல்பான சுவாசத்தில் இருந்தபடி மெதுவாக முன்னோக்கிவந்து கைகளால் கால்முட்டியை தொடவும். இவ்வாறு எழும்போது முதுகு வளையக் கூடாது. படத்தில் உள்ளபடி தான் செய்ய வேண்டும். அப்போது தான் முழுபலனையும் பெற முடியும்.

இவ்வாறு இந்த பயிற்சியை தினமும் 30 முறை செய்ய வேண்டும். பார்க்க எளிமையாக தெரிந்தாலும் செய்யும்போது இந்த பயிற்சி சற்றுக்கடினமாகத்தான் இருக்கும்.

ஆரம்பத்தில் இந்த பயிற்சியை குறைந்த எண்ணிக்கையில் உங்களால் முடிந்த அளவு செய்தால் போதுமானது. பின்னர் படிப்படியாக எண்ணிக்கையின் அளவை அதிகரித்து 50 முறை கூட செய்யலாம். செய்யும் எண்ணிக்கையின் அளவை பொறுத்து விரைவில் பலன் கிடைக்கும்.



## முடி உதிர்தல், இளநரை சரிசெய்ய..!



முட்டை வெள்ளைக் கருவை நன்கு அடித்து தலையில் தேய்த்து, ஊறவைத்து மாதம் இரண்டு முறை குளித்துவந்தால் பளபளக்கும் உங்கள் கூந்தல். முடி உதிரவதை தடுக்க அதிகம் அயர்ன், விற்றமின் நிறைந்த உணவு வகைகளை சாப்பிட்டு வரவேண்டும். தற்போது ஏகப்பட்ட பெண்கள் தலைக்கு எண்ணெயே தடவுவது கிடையாது. அது முற்றிலும் தவறு. தலைக்கு தவறாமல் தேங்காய் எண்ணெய் தடவவேண்டும். அதிகம் எண்ணெய் பசை உள்ளவர்கள் வாரம் ஒரு முறை தடவினால்போதும். எண்ணெய் குளியல் மிகவும் அவசியம். சிறிது நல்ல எண்ணெயில் இரண்டு மிளகு, பூண்டு இவை இரண்டையும் போட்டு சிறிதுநேரம் குறைந்த தீயில் காயவைத்து தலையில் தடவி சீயக்காய் தேய்த்து குளித்து வந்தால் உடல் சூடு தணியும். முடி உதிரவதையும் தடுக்கலாம். கறிவேப்பிலை மற்றும் மருதாணி இரண்டையும் அரைத்து தலையில் தேய்த்து மாதம் இரண்டு முறை குளித்துவந்தால் இளநரையை தடுக்கலாம்.

## உடல் துர்நாற்றத்தை நீக்க...

"பூவெல்லாம் உன் வாசம்" என்றும் "பூக்களுக்கு நீயே வாசமடி" என்றும் பாடல்களில் ரசிக்க ரம்மியமாகத்தான் இருக்கிறது. நிஜமோ அப்படியிருப்பதில்லை... பத்தில் 8 பேருக்கு உடல் துர்நாற்றம் என்பது தூக்கம் தொலைக்கச் செய்கிற அளவுக்குப் பெரிய பிரச்சினை. மற்ற நாட்களைவிட கோடையில் இதன் தீவிரம் சற்றே அதிகமாகத்தான் இருக்கும்.

உடல் துர்நாற்றம் ஏன் வருகிறது. அதை எப்படிக் கட்டுப்படுத்தி இயற்கையான மணத்துடன் உலாவர என்ன செய்யலாம் என்பதை பார்ப்போம்.

நம் உடலில் சுரக்கும் வியர்வையில் புரதம் உண்டு. அத்துடன் பக்ரீரியா சேரும்போது அந்தப் புரதங்கள் உடைக்கப்பட்டு Propionic என்ற அமில மாக மாறுகிறது. உடல்நாற்றத்துக்கு அதுதான் காரணம். அதீதமான வியர்வை மற்றும் அதன்காரணமாக உண்டாகும் நாற்றத்துக்கு Acid bromidrosis மற்றும் osmidrosis என்று பெயர்.

பெண்களுக்கு 14 - 16 வயதிலும், ஆண்களுக்கு 15 - 17 வயதிலும் இந்த வியர்வை நாற்றப் பிரச்சினை தீவிரமாக இருக்கும். நமது உடலில் கிட்டத்தட்ட 30 - 40 இலட்சம் வியர்வைச் சுரப்பிகள் உள்ளன.

'எக்ரைன்' என்கிற வியர்வைச் சுரப்பிகள் நம் உடலில் எல்லா இடங்களிலும் சருமத்தின் அடியில் இருக்கும். வெளிப்புறத் தட்பவெப்பநிலை அதிகரிக்கும்போது, அதிலிருந்து உடலைக் காப்பாற்றிக் குளிர்ச்சியாக்கும் பொருட்டு இந்த சுரப்பிகள் தூண்டப்படுவதால்தான் வியர்வை வெளியே வருகிறது. அதனால்தான் நமக்கு முகத்திலோ, கைகளிலோ வியர்க்கும்போது, அது அதிக வாசனையை ஏற்படுத்துவதில்லை.


அப்போக்ரைன் என்கிற சுரப்பிகள் அக்குள், காதுகளின் பின்புறம், அந்தரங்க உறுப்புகளில் அதிகம் காணப்படும். இவை வியர்வையை வெளிப்படுத்தும்போது, அத்துடன் எண்ணெய் பசையான திரவமும் சேர்ந்து வெளியேறுவதால், அந்த இடத்தில் எல்லாம் வியர்க்கும்போது வாசனை அதிகமாக இருக்கிறது.

இந்தப் பிரச்சினையை தவிர்ப்பதற்கு, அதிக சூடாகவோ, அதிகக் குளிர்ச்சியாகவோ இல்லாத வெதுவெதுப்பான தண்ணீரில், தினம் இரு வேளைகள் கட்டாயம் குளிக்கவேண்டும். கொஞ்சம் வேப்பிலையைக் கசக்கிச் சேர்த்து, தண்ணீரில் சிறிதுநேரம் ஊறவைத்துக் குளிக்கலாம். தினம் இருமுறை டியோடரண்ட் உபயோகிக்கலாம். குளித்து முடித்ததும், உடலைத் துடைத்துவிட்டு, வியர்க்க ஆரம்பிக்கும் முன்பே இதை உபயோகிக்க வேண்டும்.

உடைகளை வைக்கும் பீரோ மற்றும் அலுமாரிகளையும் சுத்தமாகப் பராமரிக்க வேண்டும். ஒருமுறை உபயோகித்த உடையை, பின்னர் துவைத்துக் கொள்ளலாம் என்று மற்ற துணிகளோடு சேர்த்து வைக்கக் கூடாது. அதிலுள்ள கிருமிகளும் நாற்றமும் மற்ற உடைகளுக்கும் பரவும்.

உணவுப்பழக்கம்கூட ஒருவரின் உடல் நாற்றத்துக்குக் காரணமாகலாம். பூண்டு, சில வகை அசைவ உணவுகள், அதிக மசாலா சேர்த்த உணவுகள் உதாரணம். காலங்காலமாக உடலில் தேங்கிய அந்த நாற்றத்தைப் போக்க, பச்சைக் காய்கறிகள், கீரைகள் சாப்பிடவேண்டும். வெட்டிவேரை குளிக்கும் தண்ணீரில் சிறிதுநேரம் ஊற வைத்துக் குளித்தாலும் உடல் மணக்கும்.






**எச்சரிக்கை!**

**மொபைல் தொலைபேசியை தலையணைக்கு அருகில் வைத்தவாறு தூங்குவதால் மூளைப் புற்றுநோய் (BRAIN CANCER) ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது!**



பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

**லேடிஸ் ஸ்பெஷல்**



# பெண்களுக்கெதிரான தேசம்!

**நம்** ஆணாதிக்கத்துக்கு இதோ, இன்னொரு பலி. காதல் என்ற வன்முறையால், அமிலத்தில் அழுத்தப்பட்டு, தனது சிறகுகள் கருகி, உயிரை விட்டிருக்கிறது இந்த வண்ணத்துப் □ச்சி. புன்னகை தொலைத்துவிட்ட தேசமோ, தேவதைகளை காக்க வழி அறியாது தலைகுனிந்து மௌனமாக நிற்கிறது.

பெண் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற வரைமுறையை ஏற்படுத்திக் கொண்டுள்ள ஆணாதிக்க தேசத்தில், பெண்களுக்கெதிரான வன்முறையை ஊடகங்களிலும், சினிமாவிலும் மட்டுமல்ல நமது ஒவ்வொரு அசைவிலும் நையாண்டி செய்துகொண்டு அவர்களை அவமதித்து வாழுகிறோம்.

பெண்களுக்கெதிரான பாலியல் பலாத்காரம், அவளது எதிர்கால நலன் கருது எழுபது விழுக்காடுகள் வெளியே வருவதே இல்லை.

பெண்கள் இப்படித்தான் உடை அணியவேண்டும் இல்லையேல் . பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று சொல்லிக் கொடுக்கும் பெரியோர்கள், தங்கள் வீடு ஆண்கள், பெண்களை எவ்வாறு நடத்தவேண்டும் என்பதை சொல்லிக் கொடுப்பதில்லை.

தனக்கு கிடைக்காத பெண், வேறு எவனுக்கும் கிடைக்கக் கூடாது எனத் தனது கதாநாயகனைவிட்டே உலகத்துக்கு பாடம் சொல்லித் தருகிறது. காதல் மட்டுமே உலகின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு என்றும் காதல் இல்லாவிட்டால் செத்து ஒழி என்றும் பாடம் புகட்டுவது திரைப்படங்கள்தான்.

நினைத்தால் அடைந்துவிட கூடிய வெறியை ஒருவனுக்கு ஊட்டுவதற்கு அவனது பெற்றோர்தான் மிகப்பெரிய காரணமாக இருக்கிறார்கள். குடும்பத்துக்கு சொத்துச் சேர்ப்பதற்காக ஓடி ஓடி வேலைசெய்யும் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளை கவனிக்க மறந்துபோக, அவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதே அறியாமல்போக, குழந்தைகளோ, வளரும் பிராயத்தில் தங்களுக்குள் நடக்கும் இரசாயன உணர்வு மாற்றங்களை அறியாமல் குழம்பிப்போய் தங்களை இழந்து கொண்டிருக்கிறார்கள்.

கற்பு கற்பு என்று பிதற்றிக்கொண்டு, அதனை பெண்களுக்கு மட்டுமே பொதுவானதாக வைத்துவிட்டு அவர்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டால், யாரிடமும் சொல்லாதே மானம் போய்விடும், என அவர்களை மிரட்டி, அவர்களது உணர்வுகளை உள்ளுக்குள்ளேயே அமிழ்த்தி புழுங்க வைத்து உயிரோடு ஒவ்வொரு நாளும் சாகடிக்கும் கொடுமை, பாலியல் பலாத்காரத்தைவிட கொடுமை.

பாலியல் கல்வி, பள்ளிக்கூடங்களில் இருந்து தொடங்கட்டும். பெண்களை மதிக்க ஆண்களுக்கு, வீடுகள் கற்றுக் கொடுக்கட்டும்.

பெற்றோர்களின் நேரம் தினமும் கொஞ்சம் தங்கள் குழந்தைகளுக்காகவும் இருக்கட்டும். இந்த தேசத்தை நம் குழந்தைகள்தான் காப்பாற்றவேண்டும்.

# அழகில் சிறந்தது எது?



இன்றைய கால கட்டத்தில் அழகை பாதுகாக்க பெண்கள் படாதபாடுபடுகிறார்கள். அழகை பாதுகாக்க, மேம்படுத்த பெண்கள் என்னவெல்லாமோ செய்கிறார்கள். கறுப்பும் ஓர் அழகுதான் என்பதை மறந்துவிட்டு சிவப்பாக கிரீம்களை பயன்படுத்துகின்றனர்.

இயற்கை முறையில் அழகை பாதுகாப்பது எப்படி என்று பார்ப்போம். பெண்கள் என்று பீட்சா, பர்கர், பாஸ்தா என்று சாப்பிட்டு குண்டாக ஆகவேண்டாம். ஸ்லிம்மாகுகிறேன் என்ற பெயரில் பட்டினியும் கிடக்கவேண்டாம். மாறாக சத்தான உணவுகளை சரியான நேரத்தில் சாப்பிட்டாலே நீங்கள் ஸ்லிம்மாகவும், பிட்டாகவும் இருக்கலாம்.

தினமும் குறைந்தது 30 நிமிடமாவது உடற்பயிற்சி செய்யுங்கள். அது உங்கள் உடல்நலத்திற்கு மிகவும் நல்லது. தினமும் குறைந்தது 8 முதல் 10 டம்ளர் வரை தண்ணீர் குடியுங்கள். இரவில் நன்றாக தூங்குவது உங்கள் அழகை பாதுகாக்க மிகவும் முக்கியம்.

சரியான தூக்கம் இல்லை என்றால் முகம்வாடி, கண்களைச் சுற்றி கருவளையம் வந்துவிடும். அதன்பிறகு அதுக்கு வேறு தனியாக கிரீம்கள் போடுவீர்கள். வெளியே சென்றுவிட்டு வந்தால் முகத்தை ஹெர்பல் பேஸ்வோ' அல்லது கடலை மாவால் கழுவவும்.

கடலை மாவை நீரில் குழைத்து முகத்தில் தடவி ஊற வைத்தும் கழுவலாம் அல்லது வெறுமனே முகத்தில் தடவியும் கழுவலாம். வீட்டுவேலைகளை செய்வது நம் உடல்நலத்திற்குத்தான் நல்லது.

முகம் பளப்பளப்பாக தேன் அல்லது பாலாடையை முகத்தில் அரை மணிநேரம் கழித்து கழுவலாம் தினமும் 10 பாதாம் பருப்பு சாப்பிடுவது சருமத்திற்கு மிகவும் நல்லது.

## கண்ணுக்குக் கீழுள்ள கறுப்பு வளையம் மறைய...

* சில பெண்களுக்கு கண்களைச் சுற்றிக் கறுப்பு வளையம் இருக்கும். இந்த பிரச்சினைதான் பெண்களை வயதானவர்போல் காட்டும். இதை எளிதாக நீக்கிவிடலாம். வெள்ளரிக்காய், உருளைக்கிழங்கு இரண்டையும் சம அளவு எடுத்து அதை நன்றாக அரைத்துக் கொள்ளவும்.

* ஒரு மெல்லிய வெள்ளை துணியை பன்னீரில் நனைத்து கண்களின்மீது வைத்து, அதன்மேல் அரைத்த கலவையை வைத்து படுக்கவேண்டும். இப்படி முப்பது நிமிடம் இருக்கவேண்டும். இவ்வாறு 5 நாட்கள் செய்தாலே போதுமானது.

* கருவளையம் இருந்த இடம்தெரியாமல் போய்விடும். சரியான தூக்கம் இல்லாமல் போனாலும் கண்களில் கருவளையம் தோன்றும். தினமும் குறைந்தது எட்டு மணி நேரமாவது தூங்கவேண்டும்.

* வெள்ளரிக்காய்ச்சாறை முகத்தில்தேய்த்து, ஒரு மணி நேரத்திற்குப் பின் கழுவிவிட வேண்டும். தொடர்ந்து இதுே-பால் செய்துவந்தால், கண் அழகை பாழாக்கும் கருவளையம் படிப்படியாக மறைய ஆரம்பித்துவிடும்.

## மெஹந்தி! எப்படிப் போட வேண்டும்?

**த**ரமான மருதாணி இலைகளைப் பறித்துக் காயவைக்கவும். காயும் அதிகமுள்ள பெண் மரத்து இலைகளில் அதிக கலர் வராது. காய் இல்லாத ஆண் மரத்து இலை என்றால் நல்ல நிறம்பிடிக்கும். இதைப் பார்த்துத் தேர்ந்தெடுக்கவும். காய்ந்த இலைகளை அரைத்து பத்திரப்படுத்தவும். தேவையான போது, தேவையான அளவு பொடியை எடுத்து, மெல்லிய துணியில் கொட்டி, சலித்தெடுக்கவும்.

தேயிலைச் சாயத்தை வடிகட்டி, ஆறவைத்து எடுத்து, சலித்த பொடியில், தேவையான அளவுசேர்த்து, பெரிய நெல்லிக்காய் அளவு எலுமிச்சைப் பழத்தின் சாறு, 2 துளிகள் !கலிப்டஸ் ஒயில், 5 துளிகள் கிராம்பு தைலம் சேர்த்துக் குழைத்து, இரவு முழுக்க ஊறவிடவும். மறுநாள், பொலித்தீன் கவரில் செய்த கோனில் இந்த மருதாணியை நிரப்பவும். கைகளில் முதலில் மெஹந்தி ஓயிலை (அப்படியே கடைகளில் கிடைக்கும்) தடவிவிட்டு பிறகு மெஹந்தி போட்டால் கலர் நன்றாகப் பிடிக்கும்.



மெஹந்தி போட்டு முடித்ததும், அதை அப்படியே காயவிடக்கூடாது. சீனி கலந்த எலுமிச்சைப் பழச் சாற்றில் பஞ்சை நனைத்து, டிசைனின் மேல் தொட்டு, ஈரப்படுத்திக்கொண்டே இருக்க வேண்டும். 8 மணிநேரம் மெஹந்தியை காயவிட்டு, பிறகு சுரண்டி எடுக்கவேண்டும். கையையோ, காலையோ கழுவக் கூடாது. பிறகு ஒரு கடாயில் ஏழெட்டு கிராம்பை போட்டு சூடுபடுத்தவும். அதிலிருந்து கிளம்பும்புகையில் கைகளைக் காட்டவும். அடுத்து டிசைனின் மேல் கிராம்பு தைலம் அல்லது கடுகெண்ணெய் தடவி, 4 மணி நேரத்துக்கு தண்ணீர் படாமல் வைத்திருக்கவேண்டும்.

## பெண்களுக்கு மட்டும்...



* பெண்களுக்கு அதிக சதைபோடுவதே இடுப்பில்தான். அவர்கள் கட்டாயம் இடுப்புக்கு பயிற்சி கொடுக்கவேண்டும்.

* நல்ல நடைபயிற்சி மிக முக்கியம்.

* நல்லா டான்ஸ் ஆடுங்கள். (ஆட தெரியவில்லை என்றாலும் இடுப்பை வளைத்து கால் கைகளை மடக்கி டான்ஸ் என்ற பெயரில் ஆடவும்.)

* நேராக நின்றுகொண்டு 2 கைகளையும் மேலே தூக்கி அப்படியே ஒரு கைகளை மட்டும் கீழே கொண்டு வரும்பொழுது இடுப்புடன் உடலையும் வளைக்கவும். இதைப்போல் 2 பக்கமும் 10 முறை செய்யவும். இதன்மூலம் இடுப்பின் மடிப்பு மற்றும் சதை குறையும்.

* எந்த வேலை செய்யும்பொழுதும் வயிற்றை நல்லா உள் இழுத்து விடவும். இப்படி அடிக்கடி செய்தால் வயிற்று பகுதியின் சதை குறையும்.

* தரையில் படுத்துக்கொண்டு கால்களை, முட்டியினை மடக்காமல் தூக்கி இறக்கவும். 2 கால்களையும் 10 முறை செய்யவும்.

இடுப்பு மற்றும் தொடைக்கு:

* சிலருக்கு பின் பகுதி மட்டும் அழகில்லாமல் இருக்கும். தினமும் குறைந்தது 10 முறையாவது மாடிப்படி ஏறி இறங்கவும்.

### வாசகர்களின் கவனத்திற்கு...

முரசு வாசகர்களின் உரிமையான வேண்டுகோளுக்கு அமைவாக,
(முரசு 1021 - வாரமொரு அதிர்ஷ்டசாலி - 375)
இப்போட்டியிலிருந்து வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூபா 250/= என்பதை அறியத்தருகின்றோம்.

250/= ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-386

**கேள்வி : கையில் மெஹந்தியை எவ்வளவு நேரம் காயவிட வேண்டும்?**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 01.10.2013

விடையைப் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 386
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :-384 இற்கான விடை :- தலசீமியா.
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- சி.கணேசமூர்த்தி, வட்டுவாகல், முல்லைத்தீவு.

386

பெயர் : ..................
முகவரி : ..................
..................
தே.அ. அட்டை இல : ..................
விடை : ..................
..................
கையொப்பம் : ..................

ரையாற்றினார்.

சுமார் 15 நிமிடங்கள் கொண்ட இந்த ரையின் முக்கிய பகுதிகள் இங்கே பிழிந்து ப்படுகின்றன.

"இந்த உரையைக் கேட்டுக்கொண்டிருக்கும் னைவருக்கும் வணக்கம்.

கடந்த இரண்டு வருடங்களாக நடைபெறும் ய உள்நாட்டுப் போரில் அஸாத் பயணிக் பாதை தவறாது, தப்பானது, தவிர்த்துக் ாள்ளுங்கள் என்று எத்தனையோ தடவை- எச்சரித்தோம். அஸாத் தனது பாதையை றிக் கொள்ளவில்லை.

உள்நாட்டுப் போர் ஒன்றுக்குள் அமெரிக்கப் டைகள் ஒருகாலமும் தலையிடாது, ஆனால் ந்த ஒகஸ்ட் 21ம் திகதி அஸாத் றெஜீம் ய்த வேலைகாரணமாகவே இந்த விடயத் அமெரிக்கா தலையிடவேண்டிய தேவை பட்டது.

சர்வதேச சட்டங்களைப் பொருட்படுத்தாது ன் எனப்படும் நச்சு வாயுவை பாவித்து ந்தைகள், சிறுவர்கள் என்று ஆயிரத்திற்கு ற்பட்டவர்களை கொன்றுள்ளார்.

நச்சுவாயு பாவிக்கப்பட்டபோது அஸாத் டைகள் முகமூடி அணிந்திருந்ததை நாம் வதானித்துள்ளோம், அந்த இடத்தில் சுவாயு தாக்குதல் நடந்து மக்கள் துடிதுடித் கொண்டிருக்க றொக்கட் தாக்குதல்களும் வர்கள் மேல் நடாத்தப்பட்டது.

இதையெல்லாம் செய்தது சிரிய அதிபர் ஸாத்தும் அவர் படைகளும்தான், அது க்குத் தெரியும். இது சர்வதேச போர்க் றமாகும்.

1997ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அமெரிக்கச் டமும் இதை அனுமதிக்க முடியாது று சொல்கிறது, சர்வதேச போர்க்குற்ற டவரையிலும் இதை போர்க்குற்றமாக ஏற்று நாடுகள் கையொப்பமிட்டுள்ளன.

நாம் ஒன்றும் உலகத்திற்கு நீதிசொல்லும் ாலிஸ்காரர் அல்ல, இந்த உலகம் ிதர்கள் வாழ்வதற்கு ஏற்ற அழகான இடம். தை நச்சுவாயு அடித்தும், அணு குண்டை ருவாக்கியும் நாசம்செய்யும் முயற்சிகளுக்கு தரவளிக்க முடியாது அது குற்றச்செயல்.

சிரியாவில் அஸாத் செய்துள்ள தவறை ம் கண்டும் காணாததுபோல இருந்தால், ளைக்கு எல்லா சர்வாதிகாரிகளும் இது ான்ற தவறைச் செய்வார்கள், சிரியாவை றியுள்ள பல பயங்கரவாத அமைப்புக்கள் தைப் பாவிப்பார்கள்.

விளைவு மாபெரும் விபரீதமாக மாறிவிடும், த்தகைய அவலம் வருமுன் அதைத் தடுக்க ண்டும். அப்படியானவர்களுக்கு என்ன க்கும் என்ற பாடமும் புகட்டப்படவேண்டும்.

இப்பொழுது சிரிய அதிபர் அஸாத்துக்கு தரவாக அவருடைய நெருங்கிய உறவு ான ரஷ்யாவும் சர்வதேச சமுதாயத்துடன் ணைந்து இந்த விவகாரத்திற்கு ஒரு தீர்வு ண முன்வந்துள்ளது.

ரஷ்யா, சீனா, பிரான்ஸ் உள்ளிட்ட உலக முதாயத்துடனும், ஐ.நாவுடனும் இணைந்து ந்த விவகாரத்திற்கு தீர்வுகாண முடியும் று கூறுகிறார்கள்.

அவர்களுடன் தொடர்ந்து பேச்சுக்களை ாத்தும்படி நமது வெளியுறவுத்துறை செயலர் ான் கர்ரி அவர்களை பணித்துள்ளேன், வர் பேச்சுக்களை முன்னெடுப்பார்.

ஆகவே அமெரிக்கக் காங்கிரசில் ாண்டுவரப்படும் பிரேரணை வாக்கெடுப்பிற்கு ாண்டு செல்லப்படுவதை சில காலம் மதித்து வைக்கிறேன், சிரியா மீதான க்குதலும் பின்போடப்படுகிறது.

அதேவேளை அமெரிக்காவின் இராணுவ யற்சிகளும், கண்காணிப்புக்களும் நிறுத்தப் வதாக பொருள் கொள்ளக்கூடாது, அவை ாடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்க ண்டும் என்றும் பணித்துள்ளேன்.

சிரியா தொடர்பான சர்வதேச பேச்சுக்கள் ரம்பிக்கின்றன.

இயலாதபட்சத்தில் இராணுவத் தீர்வே வைப்பட்டால் அதற்கும் தயாரகிறோம்.

அனைவரையும் இறைவன் ஆசீர்வதிக் டும், அமெரிக்க மக்களையும் இறைவன் சீர்வதிக்கட்டும்!

அது சுமார் 15 நிமிடங்கள் நீடித்த, அமெ க அதிபரின் உரையின் முக்கிய பிழிவு.


## விழிப்படைந்துள்ளார் ரஷ்ய அதிபர் புடின்

போர் இல்லாமலே மேலை நாடுகள் ஸாத்தை சுற்றிவளைத்து, போர்க்குற்ற மன்றுக்கு கொண்டுவர திட்டம் தீட்டி ள்ளதை உணர்ந்து விழிப்படைந்துள்ளார் ஷ்ய அதிபர் புடின்.

கடந்த வாரம் அவர் வெளியிட்டுள்ள றிக்கையில் "சிரியாவில் நச்சுவாயு பாவிக் பட்டிருப்பது உண்மை. ஆனால் அதை அஸாத் அரசாங்கம் பாவிக்கவில்லை. போராளிகளே பாவித்துள்ளார்கள். வெளி நாடு ஒன்றின் ஆதரவோடு நச்சுவாயுவை வெடிக்கச் செய்துள்ளார்கள்" என்று அவர் கூறியுள்ளார். ஆக அமெரிக்க அதிபரின் போர் முயற்சியை தடுக்க, வழங்கப்பட்ட அவசர வாக்குறுதிகள் இனி மெல்லமெல்ல நொதித்துக்கெட இருக்கிறது.

ஐ.நா நிபுணர்களின் அறிக்கை சிரியாவில் நச்சுவாயு பாவிக்கப்பட்தை ஊர்ஜிதம் செய்யப்போகிறது என்பதால்தான் நச்சுவாயு பாவிக்கப்பட்டதை தானும் ஒப்புக்கொள்வதாக நாடகமாடியுள்ளார், இல்லாவிட்டால் இந்த இடத்திற்கு அவர் வந்திருக்கமாட்டார்.

மறுபுறம் அமெரிக்கா போரை நிறுத்தி யதால் சோர்வடைந்துள்ள போராளிகளை உஷார்ப்படுத்துவதற்காக அமெரிக்காவின் பெருந்தொகை ஆயுதங்கள் போராளிகளுக்கு கடந்த ஒரு வாரகாலமாக வழங்கப்பட்டுக்



கொண்டிருக்கிறது.

சரமாரியான துப்பாக்கிப் பிரயோகங் களை வாதவருத்தமில்லாமல் செய்து கொண்டிருக்கிறார்கள்.

பதிலடியாக அலிப்போ நகரத்தில் உள்ள வைத்தியசாலை ஒன்றின்மீது சிரிய விமானங்கள் குண்டுவீசியதில் ஒரு வைத்தியர் உட்பட 11 பேர் மரணமடைந்துள்ளனர்.

மறுபுறம் செஞ்சிலுவைச் சங்கம் அகதி கள் பிரச்சினை தமக்கு .பாரிய பிரச்சினை யாக மாறியுள்ளதாக தெரிவித்துள்ளது.

நாட்டுக்குள் 4.25 மில்லியன் மக்களும், நாட்டுக்கு வெளியே 2 மில்லியன் மக்களும் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

அகதிகளுக்கு உதவிசெய்வதற்கும் அஸாத் தடைபோடுவதாகவும் தமது பணி யாளர்களை சிறையில்போடுவதாகவும் இதுவரை 22 செஞ்சிலுவைச் சங்க ஊழியர் களை கொலைசெய்துள்ளதாகவும் முறைப்பாடு செய்துள்ளது.

விவகாரம் இத்துடன் முடிந்துவிட்டதா.. இல்லை..

## கள நிலவரம்

சிரிய அதிபர் இரவோடு இரவாக இடம் மாற்றிவிட்டார்.

சிரியாவில் உள்ள நச்சுவாயு அடைத்த கொள்கலன்களை சிரிய அதிபர் அஸாத் இரவோடு இரவாக லெபனான், ஈராக் நாடுகளுக்கு இடம்மாற்றிவிட்டார் என்று பயர் போராளிகள் தரப்பு பேச்சாளர் சலீம் இல்றீஸ் தெரிவித்தார்.

அசமந்தப் போக்குடைய ஐ.நா இரசாயன ஆயுதங்கள் கிடைக்கும் என்ற நோக்கத்துடன் சிரிய மண்ணில் வந்திறங் கும்போது அவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியிருக்கும் என்றும் சி.என்.என்னுக்கு தெரிவித்தார்.

சம்பவம் நடைபெற்று ஏறத்தாழ ஒரு மாதகாலம் ஓடப்போகிறது, இதுவரை காலமும் ஐ.நா.வுக்காக இரசாயன ஆயுதங்களை பாதுகாத்து வைத்துக் கொண்டுவாருங்கள், பொறுப்பேருங்கள், தீயிட்டுக் கொழுத்துங்கள், என்னை கைது செய்து இழுத்துச்சென்று போர்க்குற்ற நீதிமன்றில் நிறுத்துங்கள், தூக்கில் போடுங்கள் என்று அஸாத் காத்திருப்பார் என்று மனப்பால் குடிக்க வேண்டாமென அவர் சர்வதேச சமுதாயத்திற்கு எச்சரித்துள்ளார்.

அதேநேரம் தமது நாட்டுக்குள் சிரியா வின் இரசாயன ஆயுதங்கள் வந்து சேரவில்லை என்று ஈராக் மறுப்பறிக்கை வெளியிட்டுள்ளது.

மறுபக்கம் ரஷ்யாவில் இருந்து வெளி வரும் 24 மணிநேர செய்திச் சேவையான ரோசியாவுக்கு பேட்டியளித்த அஸாத் தமது இரசாயன ஆயுதக்களஞ்சியத்தை ஒப்படைக்க முன்வந்திருப்பது அமெரிக்கா வுக்குப் பயந்தல்ல, ரஷ்யாவின் நட்புக்காக என்று அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் மிரட்டல் தொடர்ந்து கொண்டிருந்தால் சர்வதேச சமுதாயத்துடன் சேர்ந்து பணியாற்றுவது மிகவும் கடினமான காரியமாகும், தாம் படியிறங்கி பேச வந்திருப்பது ரஷ்யாவுக்காக அல்லாமல் அமெரிக்காவின் மிரட்டலுக்காக அல்ல என்றார்.

இன்னொருபுறம் ஜெனீவாவில் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் சேர்ஜி லாரோவுடன் அமெரிக்காவின் வெளியுறவு செயலர் ஜோன் கர்ரி நடாத்தும் பேச்சுக்கள் தப்பான தடத்தில் சுழன்றுகொண்டிருப்பதாக அங்கிருக்கும் நிருபர் ஸ்ரெபன் கிரான்ற் தெரிவிக்கிறார்.

மிகவும் அதிருப்தியும், விரக்தியுமடைந்த நிலையில் யோன் கர்ரி காணப்படுவதாகவும், அவருடைய முகத்தின் அகன்ற தாடை மேலும் இறங்கி வீக்கமடைந்திருப்பதாகவும், அவரது உடல் அசையும் வேகத்திற்கேற்ப வார்த்தைகள் வராமல் ஒன்று இரண்டாக விழுவதை சுமார் ஐந்து மீற்றர் தொலைவில் இருந்து தாம் அவதானித்தாகக் கூறுகிறார்.

ஜோன் கர்ரியின் உடல் மொழி ஏறத்தாழ ரஷ்யா அமெரிக்காவுக்கு அல்வா கொடுத்துவிட்டதையே உணர்த்துகிறது.

இதற்கிடையில் சிரிய விவகார பேச்சுக் களின் ஓரங்கமாக ஐ.நா.வின் சர்வதேச நச்சு ஆயுத பிரயோக தடைச்சட்டத்தில் சிரியாவும் இணையவேண்டும் என்று அழுத்தம் கொடுக்கப்பட்டிருந்தது.

இப்போது அதில் இணைவதற்கான படிவங்களை சிரியா வழங்கியிருக்கிறது இணைக்கப்பட்ட ஆவணங்கள் எல்லாம் மொழிபெயர்க்கப்பட்டு தற்போதுதான் தமது கைக்கு வந்திருப்பதாக ஒல்லாந்து ஹேக் நகரில் உள்ள போர்க்குற்ற நீதிமன்று தெரிவிக்கிறது.

நச்சு ஆயுதபாவனைத் தடைச்சட்டத்தில் கையெழுத்து வைக்காத ஐந்து நாடுகளில் சிரியாவும் ஒன்றாகும்.

இதுபோல இலங்கையும் இன்னமும் போர்க்குற்ற நீதிமன்றில் பதிவுசெய்யாமல் இருக்கிறது, அவர்களையும் பதிவுசெய்யும் படி வலியுறுத்த ஐ.நா முன்னர் முயற்சித்தது. மேலும் எதிர்காலத்தில் அரசியல் அதிகாரத்தை கைக்குள் வைத்துக் கொண்டு கட்டப்பஞ்சாயத்து செய்வதும் கொலைகளை நாடுகளுக்குள்ளேயே பூசி மெழுகுவதும் தொடர்ந்துசெய்யப்பட முடியாத குற்றச்செயலாகும், உதாரணமாக வழக்கொன்றில் சோனியா காந்திக்கு எதிராக தற்போது அமெரிக்காவில் உள்ள அமெரிக்க நீதிமன்றொன்று கட்டளை வழங்கியுள்ளது இந்த விடயத்தில் ஒரு முன்னேற்றமாகும்.

இதுபோல பல தலைவர்கள் நாட்டு எல்லை தாண்டியவுடன் சிக்கலை சந்திக்க வாய்ப்புள்ளது,

## வல்லரசுகளின் ஆடுகளம்

முதலில் பிரிட்டன் மக்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும் பான்மையோர் சிரியாவுக்கெதிரான அமெரிக்கா தலைமையிலான போரில் தமது நாடு பங்காற்றக்கூடாது என வாக்க ளித்தனர். பின்னர் வெள்ளை மாளிகை, அமெரிக்க காங்கிரஸில் விடயத்தை வாக்கெடுப்புக்குவிட விரும்பியது. ஆனால் போருக்கெதிரான உணர்வலை அமெரிக்காவின் சாமானிய மக்கள் மத்தியில் அதிகரிப்பதை அவதானித்த அதிபர் ஒபாமா, வாக்கெடுப்புக்குவிடுவதை ஒத்திவைத்தார். வெள்ளை மாளிகை விரும் பிய தாக்குதல் தீர்மானம் அமெரிக்கக் காங்கிரஸிலும் தோற்கடிக்கப்படுவதை ஒபாமா தவிர்த்துக்கொண்டார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியன சேர்ந்து, வெள்ளை மாளிகை விரும்பிய தாக்குதல் தீர்மானத்திற்கு ஆதரவுபெற முடியாத நிலை. ரஷ்யாவும் சீனாவும் வெட்டி விடும். அமெரிக்க அதிபருக்கு தன் மக்க ளின் ஆதரவும் இல்லை. ஐ.நா. பாதுகாப்புச் சபையிலும் ஆதரவு இல்லை.

இதனால் ரஷ்ய அதிபர் புடின் சிரியா வின் விருப்புடன் முன்வைத்த 'சிரியாவின் இரசாயன ஆயுதங்களை சிரியாவின் ஒத்துழைப்புடன் இனங்கண்டு சர்வதேசத்தின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவந்து, பின்னர் படிப்படியாக அவற்றை சர்வதேசத்தின் மேற்பார்வையின் கீழ் அழித்தல்' எனும் திட்டத்தை ஒபாமா ஏற்றுக்கொண்டார். 'யானுனைத் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்' எனப் பற்றிக் கொண்டார் ஒபாமா! இதன்மூலம் சிரியப் போர்ப் பொறிக்குள் அமெரிக்கா சிக்கிக் கொள்வதை ஒபாமா தற்காலிகமாகவேனும் தவிர்த்துக்கொண்டார்.

தனது உயிர்காக்கும் நண்பனான ரஷ்யாவின் திட்டத்தை சிரிய அதிபர் அசாத் உடனே ஏற்றுக்கொண்டு அமெ ரிக்க ஏவுகணைகள் தனது படைக் கட்டமைப்புக்களை அழிக்காமல் காத்துக்கொண்டார்.

எனினும் சிரிய அதிபர், போராளிகளின் பிடியில் இருக்கும் நிலங்களை மீளக் கைப்பற்றும் இராணுவத்தாக்குதல்களை இந்த இடைவெளியில் துரிதப்படுத்தி சில வெற்றிகளை ஈட்டியுள்ளதாகத் தெரிகிறது.

ஆனால், இங்கே ஏமாற்றப்பட்டது யார் தெரியுமா? "இதோ! உடனே அமெரிக்க அதிபர் ஏவுகணைகளை அடித்து சிரியப்படைகளை அழித்து சிரிய ஆட்சியை மீட்டு எங்களிடம் ஒப்படைப்பார்" எனக் கனவுகண்ட போராட்டக் குழுக்களும் அவர்களின் கட்டுப்பாட்டில் அகப்பட்டிருக்கும் சிரிய மக்களுமே. அமெரிக்கக் கப்பல்கள் முல்லைத்தீவுக்கரைவரை வந்து தம்மையும் தமது தளபதிகளையும் அகப்பட்ட தமிழ் மக்களையும் மீட்கும் என முள்ளிவாய்க்கால்வரை கனவுகண்ட 'பிரபாகரன் கனவு' போல் இல்லையா இது?

அமெரிக்க அதிபர் ஏவுகணைகளை அடித்து சிரியப்படைகளை அழிக்கத் தொடங்கியிருந்தால் அசாத் அரசாங்கப் பகுதியில் அவரால் மனிதக்கவசமாகப் பயன்படுத்தப்படத் தயாராக்கப்பட்டிருந்த அப்பாவிச் சிரியக் குடும்பங்கள் கொத்துக் கொத்தாக அழிந்திருக்கும்.

ஆனால் சிரியாவில் நச்சு வாயுத் தாக்குதலால் கொல்லப்பட்ட மூவாயிரம் அப்பாவிச் சிரியர்களின் கொடுந்துயரங்கள், அங்கு தொடரும் சிவில் யுத்தத்தால் கொல்லப்பட்ட ஒரு இலட்சம் அப்பாவிச் சிரியர்களின் கொடுந்துயரங்கள் ஆகியன வல்லரசுகளின் ஆடுகளத்தில் சிறிய விடயங் களாகிவிட்டன. போர் தொடர்கிறது. அப்பாவி கள் தொடர்ந்தும் கொல்லப்படுறார்கள்.

சிரியாவின் அசாத் அரசாங்கத்திற்கு நவீன ஆயுதங்களையும் அரசியல்-இராஜதந்திர ஆதரவையும் முழுமையாக வழங்கும் ரஷ்யாவும் சிரியாவின் அசாத் அரசாங்கத்தை எதிர்த்துப்போராடும் 'ஜன நாயகக்கோரிகளான' போராளிகளுக்கு நவீன ஆயுதங்களையும் அரசியல்-இராஜதந்திர ஆதரவையும் முழுமையாக வழங்கும் அமெரிக்காவும் சிரிய மண்ணில் முழு அளவிலான போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதைப்பற்றி எவ்வித அக்கறையும் காட்டாமல் 'விச வாயுப் பேச்சு வார்த்தையை' மட்டுமே முன்னெடுக்கின்றன.

ஏற்கனவே 65 இலட்சம் சிரியர்கள் அகதிகளாகிவிட்டனர். கொலைகளும் பாலியல் வன்முறைகளும் கொள்ளை களும் அங்கு கோரத்தாண்டவமாடுகின்றன. அசாத் அரசாங்கப்படைகளும் போராட்டக் குழுக்களும் இவற்றைச் செய்வதாக செய்திகள் கூறுகின்றன.

அமெரிக்கவும் ரஷ்யாவும் சிரியாவை வெறும் சதுரங்கப்பலகையாக்கிவிட்டன. அமெரிக்கர்களும் ரஷ்யர்களும் செங்கம்பளங்களின் மீது நடந்து, குளிரூட்டிய அறைகளில் தங்கி, மதுரசங்களை அருந்தி தமது சர்வதேச நலன்களை முன்னிறுத்தி, காய்களை நகர்த்திக் கொண்டிருக்க அப்பாவிச் சிரியர்கள் தொடரும் போரில் செத்து மடிகின்றனர்.



# பார்வை புதிது


இம்மாதம் இந்தியாவில் ஆரம்பமாகவுள்ளது சம்பியன்ஸ் லீக் இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டிகள். இந்தப் போட்டியில் இந்தியாவில் இருந்து மும்பை இந்தியன்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகளும், ஆஸ்திரேலியாவின் பேர்த்ஸ்கோச்சர்ஸ், பிரிஸ்பேன் ஹீட், மேற்கிந்தியத் தீவுகளில் இருந்து டிரினிடாட்டுபாகோ உள்ளிட்ட எட்டு அணிகள் களம் இறங்க உள்ளன. அதோடு தகுதிச்சுற்றின் மூலம் ஐதராபாத் (இந்தியா), ஓர்டோகாவோல்ட்ஸ்(நியூசிலாந்து), கந்துரட்ட மரூன்ஸ்(இலங்கை), பைசலாபாத் ஷல்வ்ஸ்(பாகிஸ்தான்) அணிகளில் இருந்து இரண்டு அணிகள் உள்வாங்கப்பட உள்ளன.

இதில் பைசலாபாத் ஷல்வ்ஸ் அணி பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தது. ஆனால் இந்த அணிக்கு இந்தியா வர விசா அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் பாகிஸ்தான் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சொயெப் அக்தார் காட்டமாகச் சில கருத்துக்களை முன்வைத்துள்ளார். இரண்டு அரசாங்கமும் நட்டிப் பாராட்டாத நிலையில் பாகிஸ்தான் சார்ந்த அணிகளுக்கு விசா கிடைக்கப்போவதில்லை. அப்படியாயின் அதற்காக ஏன் இந்தியக் கிரிக்கெட் சபையிடம் கெஞ்சிக் கொண்டிருக்கவேண்டும்.

எடுத்ததெற்கெல்லாம் - உதாரணமாக பரஸ்பர தேசிய கிரிக்கெட் விளையாடும் விடயமாகட்டும், ஐ.பி.எல். இருபதுக்கு இருபது போட்டிகளில் பாகிஸ்தான் வீரர்கள் விளையாடும் விடயமாக இருக்கட்டும், சம்பியன் லீக் போட்டிகளில் விளையாடும் விடயமாக இருக்கட்டும். நாங்கள் இந்தியக் கிரிக்கெட் சபைக்குப் பின்னால் சென்று கெஞ்சிக்கொண்டிருக்கத் தேவையில்லை. ஏனெனில் இவர்கள் எங்களுக்குச் சாதகமாகப் பேசப் போவதில்லை. ஏனெனில் பாகிஸ்தான் தொடர்புபட்ட விடயமென்றதும் அரசு கொள்கைக்குச் சார்பாகவே பீ.சி.சி.ஐ. செயற்படும். இதை முளையிலேயே கிள்ளி எறிந்திருக்கவேண்டும். ஆரம்ப காலத்திலேயே இவர்கள் எங்களை அழைத்தபோதே அழைப்புக்கு நன்றி என்றுகூறி அத்தியாயத்தை முடித்திருக்கவேண்டும். இப்படிச் செய்திருந்தால் எங்கள் கௌரவமும், மதிப்பும் இந்திய கிரிக்கெட் சபைக்குப் புரிந்திருக்கும் என்று குமுறியுள்ளார். மேலும் இந்திய கிரிக்கெட் சபையை கெஞ்சிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு எங்கள் அணியை மிகப்பலம் வாய்ந்த அணியாக வளர்த்தெடுக்கும். காரியங்களை நாங்கள் பார்க்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர், இம்ரான்கான் போன்றதொரு அணித்தலைவர் பாகிஸ்தானுக்கு நீண்ட காலமாக இல்லாதிருப்பது, வளர்ச்சிக்குப் பெரிய தடையாக உள்ளதாகவும் எடுத்துக்காட்டுகிறார். இந்திய அணித்தலைவர் எம்.எஸ்.டோனி, இம்ரான்கான் போலவே சிறந்ததொரு அணித்தலைவர். அவர் இந்தியக் கிரிக்கெட்டை அடுத்த கட்டத்துக்கு உயர்த்திச்சென்றார் என்றும் புகழ்ந்துள்ளார்.

ஐ.சி.சி.யை நோக்கி சுட்டுவிரல் நீட்டும் இவர், உண்மையான கிரிக்கெட் என்பது டெஸ்ட் கிரிக்கெட்டும், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளும்தான். ஆனால் ஐ.சி.சி. இவற்றில் பெரும் முதலீடுகளைச் சரிவரச் செய்வதில்லை என்றும், அப்படிச் செய்தால் இவ்விரண்டு வகை கிரிக்கெட் மூலம் வீரர்கள் நிறையப் பணம் சம்பாதிக்கமுடியும் என்றும், மாறாக இருபதுக்கு இருபது போட்டிகளை போற்றுவதால் ஐ.பி.எல். போன்றவைதான் வளர்ந்திருக்கின்றன என்றும் கூறியுள்ளார்.




ஜோசெப் கிருஷ்ணா

**2013**இன் யூ.எஸ். கிராண்ட்ஸ்லாம் சம்பியன் ஸ்பானிய நாட்டின் ரபேல் நடால் இறுதிப் போட்டியில் தரவரிசை ஒன்றைக்கொண்ட சேர்வியாவின் நொவாக் ஜோகோவிச்சை வீழ்த்தி சம்பியன் பட்டம்வென்றார் இவர்.

கடந்த வருடம் கடுமையான முழங்கால் உபாதையால் பாதிக்கப்பட்ட இவர் மீண்டும் ரென்னிஸ் போட்டிகளில் விளையாடும்

# இன்னொரு அதிசயம்



அளவிற்கு உடற்தகுதி பெறுவாரா என்ற சந்தேகம் பலருக்கும் இருந்தது. ஆனால் இவ்வருடத்தில் இரண்டு கிராண்ட்ஸ்லாம்களை வென்று அசத்தினார் நடால் என்று யூ.எஸ். கிராண்ட்லாம், அடுத்தது இதே வருடம் நடைபெற்ற பிரென்ஞ் ஓப்பன் கிராண்ட்ஸ்லாம்.

2005 பிரென்ஞ் ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் வெற்றியுடன் ஆரம்பித்தது. இவரின் ரென்னிஸ் பயணம் இதுவரையில் எட்டு பிரென்ஞ் ஓப்பன் இறுதிப்போட்டிகள், 5 விம்பிள்டன் இறுதிப்போட்டிகள், 2 அவுஸ்ரேலிய கிராண்ட்ஸ்லாம் இறுதிப்போட்டிகள், 3 யூ.எஸ். இறுதிப்போட்டிகள் என்று இறுதிப் பதிவுவரை முன்னேறியவர். இந்த மொத்த எண்ணிக்கையான இறுதிப்போட்டிகள் 18இல் இரண்டாம் இடம்பெற்றது. 5முறை மட்டுமே, 13 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றிருக்கிறார். அதிலும் எட்டு முறை றொஜர் பெடரரைச் சந்தித்து ஆறு முறை கிண்ணத்தை வென்றுள்ளார். அதோடு நோவாக் ஜோக்கோவிச்சை ஆறுமுறை இறுதிப்போட்டியில் சந்தித்து மூன்று முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ளார்.

இவர் பற்றிச் சிறப்பாக கூறுவதாயின் இவர் களிமண் தரையில் அசைக்கமுடியாத வீரர். பிரென்ஞ் ஓப்பன் இறுதிப்போட்டியில் சலித்துக்கொண்ட எட்டு முறையும் இவரே வென்றுள்ளமை இதற்கு நல்ல உதாரணம்.

# இனி என்ன வேண்டும்



சுப்பர் ஸ்ரார் செரினா வில்லியம்ஸ் மீண்டும் சாதித்துள்ளார். முடிவடைந்த யூ.எஸ். ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் கிண்ணத்தை அட்டகாசமாக வென்றுள்ளார். 2012இல் இறுதிப் போட்டியில் விக்ரோரியா அஸரென்காவை வீழ்த்திக் கிண்ணம் வென்றது போல, அதே அஸரென்காவை மீண்டும் 2013 இறுதிப் போட்டியிலும் மண்கவ்வச் செய்துள்ளார். இவ்வருட இறுதியில் 32 வயதைத்தொடும் செரினா, வயதில் மூத்த யூ.எஸ். கிண்ணம் வென்றவர் என்ற பெருமையையும் பெற்றுக்கொள்கின்றார். முன்னதாக, மூத்த வீராங்கனையாக இருந்தவர் 1973இல் கிண்ணம் வென்ற அவுஸ்ரேலியாவின் மார்கிரட்கோர்ட். இவர் கிண்ணம் வெல்லும்போது வயது 31 நாட்கள் 55. செரினாவின் கிராண்ட் ஸ்லாம் பட்டியல் நீண்டது. யூ.எஸ். ஓப்பன் இறுதிப்போட்டியில் 6 தடவைகள், அவுஸ்ரேலிய ஓப்பன் இறுதியில் 2 தடவைகள், விம்பிள்டன் கிண்ணம் இறுதிப் போட்டியில் 7 தடவைகள் பிரென்ஞ் ஓப்பன் கிராண்ட் ஸ்லாம் இறுதிப்போட்டியில் 5 தடவைகள் என்று களம் கண்டவர் செரினா.

2001இல் யூ.எஸ். ஓப்பன் இறுதிப்போட்டியில் தமக்கையின் வீனஸ் வில்லியத்திடம் தோல்விகண்டு இரண்டாம் இடம்பெறுகிறார். பின்னர் ஆச்சரியமாக 2002 பிரென்ஞ் ஓப்பன், விம்பிள்டன், யூ.எஸ். ஓப்பன் 2003, அவுஸ்ரேலிய ஓப்பன் 2003, விம்பிள்டன் கிண்ணம் என்று அதே வீனசை வீழ்த்தி வரிசையாக கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வெல்கிறார். 2001இல் இருந்து 2013வரை 2006ஆம் ஆண்டைவிட்டால் ஒவ்வொரு ஆண்டிலும் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றவராகியிருக்கிறார் செரினா. இந்தக் காலப்பகுதியில் இவர் எதிர்கொண்ட கிராண்ட்ஸ்லாம் இறுதிப்போட்டிகள் 20. இதில் கிராண்ட்ஸ்லாம் வெற்றிகண்டது. 17 இரண்டாம் இடம் பெற்றது, 3 போட்டிகளில் மட்டுமே இரண்டாம் இடம்பெற்றார். அதோடு பதினேழு கிராண்ட்ஸ்லாம்கள் பதின்மூன்று இரட்டையர் கிண்ணங்கள், இரண்டு கலப்பு இரட்டையர் கிண்ணங்கள் நான்கு ஒலிம்பிக் தங்கங்கள் வென்றவர் இவர்.

இனி செரினா என்ன செய்யப்போகிறார் உபாதைகளால் தாக்கப்பட்டு ஓய்ந்துபோவார் என்று எதிர்பார்க்கப்பட்டவர் இவர். ஆனால் விஸ்பரூபம் எடுத்து ரென்னிஸ் உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கியவர். அடுத்த வருடம் கிராண்ட்ஸ்லாம் போட்டிகள் ஆரம்பிக்கும்போது செரினாவின் சிந்தனை ஓட்டங்கள் எவ்வாறு இருக்கும். உண்மையில் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறுவதாக இந்த மகத்தான வீராங்கனை அறிக்கைவிடுவதை யாரும் ஏற்றுக்கொள்ளத் தயாராகவே இல்லை.

**2012** - 2013ஆம் ஆண்டுக்கான 'டயலொக் கிரிக்கெட் விருகள்' வழங்கும் நிகழ்வு கடந்த பத்தாம் திகதி பத்தரமுல்ல நகரில் நடைபெற்றது. இந்த நிகழ்வு சிறிலங்கா கிரிக்கெட் சபையின் வர்த்தக அனுசரணையாளர்களான டயலொக் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் குமார் சங்கக்கார இரண்டு விருதுகளைப் பெற்றுக்கொண்டார். இவர் சிறந்த டெஸ்ட் போட்டித் துடுப்பாட்ட வீரராகவும் வருடத்தின் மக்கள்விரும்பும் வீரராகவும் விருதுகள் பெற்றுக்கொண்டார்.

இதேவேளை ரங்கன ஹேரத் சிறந்த டெஸ்ட் போட்டிப் பந்துவீச்சாளராகவும், வருடத்தின் சிறந்த டயலொக் கிரிக்கெட் வீரர் என இரண்டு விருதுகளைத் தனதாக்கிக்கொண்டார்.

மேலும் ஒரு நாள் போட்டிகள் என்ற பிரிவில் சிறந்த துடுப்பாட்ட வீரராக திலகரட்ண டில்ஷானும், சிறந்த பந்து வீச்சாளராக லசித் மலிங்காவும் தெரிவாகி விருதுகளைப் பெற்றனர். மிகச்சிறந்த சகல துறை கிரிக்கெட் வீரருக்கான விருது இலங்கை அணியின் தலைவர் ஏஞ்சலோ மத்தியூசுக்கு வழங்கப்பட்டது. வளர்ந்துவரும் இளம் வீரர் விருதுபெற்றவர் தினேஷ் சந்திமால்.

இதேவேளை மகளிருக்கான விருதுகளும் வழங்கப்பட்டிருந்தன. சிறந்த கிரிக்கெட் வீராங்கனையாக தீபிகா ரஸாங்கிகாவும், சிறந்த பந்துவீச்சாளராக சாமனி செனவிரட்ணவும், சிறந்த சகலதுறை வீராங்கனையாக ஸஸிகலா சிறிவர்தனவும் விருதுகளைப் பெற்றனர். 2012இன் சிறந்த டயலொக் வீராங்கனையாக தெரிவானவர் சகலதுறை வீராங்கனையாகத் தெரிவுசெய்யப்பட்ட ஸஸிகலா சிறிவர்தன ஆவார்.

இந்த விருது நிகழ்வு சங்கக்காரவுக்கு மறக்கமுடியாத விழாவாக இருக்கும். இலங்கை கிரிக்கெட் சபையுடன் சில விரிசல்கள் இருந்தாலும் அவரின் திறமைக்கேற்ப அவர் கௌரவிக்கப்பட்டுள்ளார். கடந்த வருட விருது வழங்கும் நிகழ்வில் மஹேலவை பின்தள்ளி சங்கக்கார இரண்டு விருதுகள் பெற்றது குறிப்பிடத்தக்கது. அதேவேளை கடந்த வருடம் இடம்பெற்ற ஐ.சி.சி. விருது வழங்கும் விழாவில், அவ்வருடத்தின் சிறந்த கிரிக்கெட் வீரர், சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரர், மற்றும் சிறந்த மக்கள் விரும்பும் வீரர் என்ற மூன்று விருதுகளையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# விருதுகள் விழா





# இந்திய வீட்டுத்திட்ட நடவடிக்கை ஆராய்வு விஜயம்




பிரகஸ்பதி

இந்திய வீட்டுத்திட்டம் யாருக்கு? எப்போது கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புக்கள் ஏற்கனவே இருந்துகொண்டிருந்தது போன்று இப்போதும் இருக்கத்தான் செய்கிறது. எந்த ஒரு திட்டத்திலும் முறைகேடுகள் இல்லாமல் இருப்பதில்லை என்பதுபோல் இதிலும்நடை பெறுகிறதா என்ற சந்தேகம் பலரிடமும் இருக்கிறது.

இவ்வாறான நிலையில் இந்திய வீட்டுத் திட்டத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்துப் பார்வையிடுவதற்கு . ஒரு குழு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திற்கு வருகை தந்திருந்தது. இந்தக் குழுவின் செயற்பாடுகள் குறித்தே இந்த வாரம் ஆராய்வோம்.

வடக்கிற்கு மாத்திரம் 50ஆயிரம் வீடுகள் இந்தியா வழங்கும் என்பது போன்று ஆரம்பத்தில் இருந்தபோதும், கடந்த மார்ச் மாதத்தில் ஒரு தொகை வீடுகள் ஒதுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அந்தவகையில், இந்திய வீட்டுத்திட்டத்தின் கிழக்கு மாகாணத்துக்கென ஒதுக்கப்பட்ட வீடுகளின் முதல் தொகுதி நிர்மாணப்பணிகள் மே மாதம் அளவில் மட்டக்களப்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த மே 22ஆம் திகதி நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ரோகண ராஜபக்ஷ, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், உற்பத்தித் மற்றும் உற்பத்தித்திறன் விருத்தி அமைச்சர் பஷீர் சேகுதாவூத், மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், ஆளுநர் மொஹான் விஜேவிக்ரம, முன்னாள் முதல்வர் சி.சந்திரகாந்தன், பிரதித் தவிசாளர் எம்.எஸ்.எம். சுபைர், ஏறாவூர் நகரபிதா அலிஸாஹிர் மௌலானா உள்ளிட்ட பலரும் அரசாங்க அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை, ஏறாவூர் பற்று, மண்முனை மேற்கு, கோரளைப் பற்று தெற்கு, மண்முனை தென்மேற்கு, வெல்லாவெளி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள் தெரிவுசெய்யப்பட்டன. அதில் முதலாவதாக ஏறாவூர் பற்றில் இந்த வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு முதல்கட்ட வேலைகள் நிறைவடைந்துள்ளன.

கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விளக்கப்பட்டதன் அடிப்படையில் இந்திய வீட்டுத்திட்டத்தில் கிழக்கிற்கு 4000 வீடுகள் ஒதுக்கப்பட்டன. குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்டுவரும் வீட்டுத்திட்டத்தின் மூலம் வீடுகளை கூடுதலாக பெறவேண்டும் என்பது கிழக்கின் அமைச்சர்களது நோக்கமாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு, செங்கலடி, கிரான், வாகரை ஆகிய யுத்தத்தினால் கடுமையாக பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் தொடர்பில் இந்திய துணைத்தூதுவரின் கவனத்துக்கு அமைச்சர்கள் கொண்டு வந்ததன் அடிப்படையில், முதல் கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 2000 வீடுகளை தருவதற்கு இணக்கம் தெரிவித்திருந்தார். அதேநேரம், அம்பாறை மாவட்டத்துக்கு 1000 வீடுகளையும் மற்றும் திருகோணமலை மாவட்டத்துக்கு 1000 வீடுகளையும் இந்தியத் தூதரகம் ஒதுக்கியிருந்தது.

இதனடிப்படையில் முதல் கட்டமாக ஏறாவூர் பற்றில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், வாகரை, வெல்லாவெளி, வவுணதீவு, கிராண் பிரதேச செயலாளர் பிரிவுகளில் வீடமைப்பு பணிகள் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

இதேநேரம், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கு கட்டம்கட்டமாக நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பதும் கோரிக்கையாக இருந்துவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியாவினால் வழங்கப்பட்டுவரும் வீட்டத்திட்டத்தில் ஏற்பட்டுள்ள முறைகேடுகள் நடைபெறுவதாகவும் தகவல்கள் வெளிவராமலில்லை.

இந்திய வீட்டுத்திட்டத்தினை இலங்கை வீடமைப்பு அதிகார சபை, ஹபிராட் உட்பட 3 நிறுவனங்கள் இங்கு மாவட்ட செயலகங்களுடன் இணைந்து நடைமுறைப்படுத்துகின்றன. கட்டம்கட்டமாக நிதிகள் வழங்கப்பட்டு வீட்டுத்திட்ட நிர்மாண வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்த வேலைகளைப் பார்வையிடவென கடந்த வாரத்தில். இந்திய வெளியுறவு அமைச்சிலிருந்தும், இந்தியத் தூதரகத்திலிருந்தும் 6 பேரடங்கிய குழு ஒன்று கிழக்கின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வருகை தந்திருந்தனர்.

மட்டக்களப்புக்கு விஜயம் செய்த இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகளான அபிவிருத்திப் பங்களிப்பு நிர்வாகத்துக்கான விசேட செயலாளர் பி.எஸ்.ராகவன், மேலதிக செயலாளரும் நிதி ஆலோசகருமான ஏ.ஆர். சிங்கா, மேலதிக செயலாளர் திருமதி சுஜாதா மேத்தா, கட்டடக்கலை நிபுணர் கீர்த்தி சிங்கா, நிதிப்பணிப்பாளர் அனுர சிறிவஸ்தவா ஆகியோரை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான திருமதி பி.எஸ். எம்.சார்ள்ஸ் மட்டக்களப்பு விமான நிலையத்தில் வரவேற்று சந்தித்தார்.

அதன்போது, மட்டக்களப்பின் அபிவிருத்திச் செயற்பாடுகள் குறித்தும் தேவைகள் குறித்தும் கலந்துரையாடியதுடன், நினைவுச் சின்னத்தையும் திட்டங்களையும் கையளித்திருந்தார்.

அதன்பின்னர், மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவின் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் உறுகாமம் கிராமத்திற்கு விஜயம் செய்து அவ் மக்களிடம் வீட்டுத்திட்டம் எவ்வாறு நடைபெறுகிறது. உங்களுக்குத் திருப்தியா, பணம் சரியான முறையில் கிடைக்கிறதா. உள்ளிட்ட கேள்விகளைக் கேட்டு பதில்களைப் பெற்றுக்கொண்டதுடன், வீட்டினை சரியான முறையிலும் முழுமையாகவும் அமைத்துக் கொள்ளவேண்டும். சந்தோசமாக வாழவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

இந்திய - இலங்கை நட்புறவின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் இந்திய வீடமைப்புத் திட்டங்களை பார்வையிடுவதற்காக புதிய இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் வருகை தரவுள்ளார் என்ற வதந்திகளுக்கு மத்தியில் இக்குழுவினரின் விஜயம் சிறப்பாக அமைந்திருந்ததாக அவர்கள் தெரிவித்திருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்றில், சிங்களக் கிராமமான மங்களகம, தமிழ்க் கிராமமான பெரியபுல்லுமலை தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் உறுகாமம் ஆகிய 3 கிராமங்களிலும் இந்திய வீட்டுத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்திய வீட்டுத்திட்டத்தினை மட்டக்களப்பு விஜயத்தின்போது பார்வையிட்டு மக்களுடன் கலந்துரையாடிய பின்னர் கருத்துத் தெரிவித்த இந்திய வெளியுறவு அமைச்சின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பிற்குமான விஷேட செயலாளர் பி.எஸ்.ராகவன் தற்போது கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டம், திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் இந்த வீட்டுத் திட்டம் தக்க தருணத்தில் அமுல்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

இந்திய உதவி வீடமைப்புத் திட்டம் மிகச் சிறப்பாக திருப்திகரமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. வீட்டுத் திட்டத்துக்கான முதலாம்கட்டக் கொடுப்பனவு முடிவடைந்து இரண்டாவது கட்டக் கொடுப்பனவைப் பெறுவதற்கு பயனாளிகள் தகுதிபெற்றிருக்கின்றார்கள். வீடமைப்பு வேலைகள்பற்றி பயனாளிகள் திருப்பியடைகிறார்கள். அதற்குமேல் எதுவுமில்லை. பயனாளிகளின் திருப்தியே இந்திய அரசின் திருப்தியாகும்.

வீட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், வடபகுதியிலிருந்து இப்பொழுது கிழக்குக்கு வந்திருக்கின்றோம். கிழக்கின் அடுத்த மாவட்டங்கள் இரண்டிலும் எப்போது இந்திய உதவி வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கும் என்பதை துல்லியமாகக் கூறிவிட முடியாது. என்றாலும் ஆவணங்கள் மற்றும் ஒழுங்குகளின் அடிப்படையில் வேலைகள் ஆரம்பிக்கப்படும். வீடமைப்புக்கென்று உள்ள பயனாளிகளைத் தெரிவுசெய்வது தொடங்கும்படி முறைகளின் அப்படையில் நடைபெறும். இந்த வீடமைப்புத் திட்டத்தின் வடிவமைப்பு இந்திய அரசினுடையது அல்ல. இலங்கை அரசு தீர்மானித்ததன் பிரகாரம் இந்த வீடமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இருந்தாலும் குடியிருப்பாளரின் விருப்பத் தெரிவுக்கும் இதில் முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. சிலவேளை நாம் அளிக்கும் பணத்திற்கும் மேலதிகமாக குடியிருப்பாளரும் மேலதிக பணத்தை முதலீடுசெய்து தமது வீட்டை பெருப்பித்து அலங்காரப்படுத்திக் கொள்ளலாம். அதற்கு எதுவித கட்டுப்பாடும் கிடையாது. வீடமைப்புக்கான பணத்தை ஒரே தடவையில் ஒருபோதும் வழங்கமுடியாது. அது சாத்தியமானதுமல்ல. ஒரு திட்டத்திற்கென்று உலக நடைமுறைகளும் பிராந்திய நடைமுறைகளும் உள்ளன. ஒரு திட்டத்திற்கு ஒரேயடியாக பணத்தைக் கொடுப்பது உலகில் எங்குமே நடைமுறையில் இல்லை என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு மட்டக்களப்புக்கான விஜயம் நிறைவுக்குவர வருகைதந்த பிரதிநிதிகளை மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டுச் சென்றனர். கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி பிரதேசத்திலுள்ள உறுகாமம், புல்லுமலை மற்றும் மங்களகம ஆகிய கிராமங்களில் முதற்கட்டமாக இந்த வீடமைப்புப் பணிகள் கடந்த மே மாதம் தொடக்கம் இடம்பெற்றுவருகின்றன. அடுத்ததாக வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில் இவ்வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்படலாம் எனத்தெரிகிறது. இருப்பினும் எந்த எந்தப்பிரதேச செயலாளர் பிரிவுகள் உடனடியாக வீட்டுத்திட்டத்தினை ஆரம்பிக்கும் என்பது இதுவரையில் உறுதியாகவில்லை. இந்தியக் குழுவின் கருத்துப்படி ஆவணங்கள், படிமுறைகள் நிறைவடையும் இடங்களில் திட்டத் ஆரம்பிக்கப்படும் என்பது மாத்திரம் உறுதியாக இருக்கிறது.

வீடமைப்புக்கான பணத்தைத் தவணை முறையில் கட்டம்கட்டமாக கொடுப்பதனை விடவும், நல்ல முறைகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. பணக்காரர்கள்கூட கட்டம் கட்டமாகவே ஒரு திட்டத்தினை நடத்துவர். வறிய மக்களிம் வீட்டுத்திட்டப் பணத்தினை முழுமையாகக் கொடுப்பதனால் பெரும் வீணடிப்புகள் ஏற்படும் என்பதனை விளங்கிக் கொள்ளாத சில தரப்புகள் இவ்வாறான கேள்விகளைக் கேட்கலாம். இருந்தாலும் நீண்ட காலத்தில் கிடைக்கப் பெற்றுள்ள அனுபவங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் திட்டத்தினை நடைமுறைகளை மாற்றாது கடைப்பிடிப்பது ஒருபோதும் பிரச்சினை ஏற்படுத்தாது என்பது மாத்திரமே உண்மையாகும்.

வீட்டுத்திட்ட தெரிவில் இந்தியா பக்கச்சார்பற்ற முறையில் சுயாதீனமாக செயற்பட வேண்டும் என்ற அடிப்படையில், பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர்கள் மற்றும் கிராம மக்களின் பிரதிநிதிகளின் தகவல்களின், தெரிவுகளின் அடிப்படையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

வடமாகாணத்தைப் பொறுத்தவரையில், கடந்த மாதம் வரையில், முதற்கட்ட வீட்டுத் திட்டத்தில் 8036 வீடுகள் இதுவரையில் முழுமையடைந்துள்ளன. எஞ்சிய வீட்டுத் திட்டங்கள் அமைக்கப்படும் என்பது உயர்ஸ்தானிகராலயத்தின் கருத்து.

கிழக்கு மாகாணத்தில் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் அமைக்கப்படவுள்ள வீட்டுத் திட்டத்தினை அரச சார்பற்ற தொண்டு நிறுவனமான ஹியூமனிற்றி ஹபிடாட் கட்டி முடிப்பதற்கு உதவுவதுடன், மக்களின் முழுப் பங்களிப்புடன் ஐந்து இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா செலவில் இந்த வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளன. இந்த வீடமைப்புத் திட்டம் 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்துடன் நிறைவுபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 46 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்கும் இந்திய அரசின் உதவித் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட 4000 வீடுகளில் முறையே மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 2 ஆயிரம் வீடுகளும் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டத்திற்கு தலா ஆயிரம் வீடுகளும் நிர்மாணிக்கப்பட இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த இந்திய வீட்டுத்திட்டங்களால் யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்கி வறுமையிலும் பொருளாதாரச் சீரழிவிலும் மிகவும் கொடுமையான வாழ்வினை அனுபவித்த மக்கள் பயன் பெற்றால் சிறப்பே. இந்த விடயத்திலும் பங்கும், வீதாசாரமும், பறித்தெடுத்தலும் இல்லாமல் இருந்தால் நல்லதே.

சோ.திலகராஜ்
கண்டாவளை






# மாற்றங்கள்

இந்தப் பிள்ளையோட வாற அண்ணைக்கு சீற் கொடுங்கோ எனக் கூறினார்.

பேரூந்தின் முன் சீற்றில் அமர்ந்திருந்த ஆர்த்தி எழுந்து சீற் கொடுக்கும்போது அரவிந்த் தோளில் பிள்ளையைப் போட்டுக்கொண்டு ஒரு கையில் பிள்ளையின் பை, பால் போத்தல் என்பவற்றுடன் ஏறி இருக்கையில் அமர்ந்ததைப் பார்த்த ஆர்த்திக்கு வீறிட்டு அழவேண்டும் போல் இருந்தது.

எவ்வளவோ கஷ்ரப்பட்டு அடக்கிக் கொண்டாள். அழுவதைக் கடைசி இருக்கையில் இருக்கும் தனது தந்தை பார்த்துவிட்டால் முழு உண்மையும் தெரிந்து தன்னையும், தாயையும் கொன்றேவிடுவாரென நினைத்தாள்.

கை, கால்கள் அரவிந்தைப் போன்று நீளமாக இருந்தாலும் தன்னை உரித்து வைத்தாற் போல் இருந்த பிள்ளையின் முகத்தை ஒரு முறை முத்தமிடவும் ஆர்த்திக்குத் தோன்றியது. ஒரு அடி தூரத்திலிருந்தாலும் 100 அடி தூரம் விலகியவளாகவே அவள் இருக்க வேண்டியாயிற்று.

பக்கத்திலிருந்தவர் என்ன தம்பி பிள்ளைக்கு காய்ச்சலோ இப்பிடிச் சுடுகுது. ஓம் அம்மா... மருந்திற்குத்தான் போறம் என அரவிந்த் கூற ஒருவாறு தயக்கத்துடன் பிள்ளையின்ர அம்மா அவவால ஏலாது, அவ வீட்டில இருக்கிறா எனக்கூற பக்கத்திலிருந்த ஆர்த்தி இதைக் கேட்டதும் தன்னால் கஷ்ரப்பட்டுக் கொண்டிருக்கும் அரவிந்தையும், பிள்ளையையும் பார்க்கும்போது அவள் மனம் எல்லாவற்றிலும் பொறுமை இழக்கச் செய்துவிட்டது.

அரவிந்தின் தோள்மீது தூக்கத்திலிருந்த பிள்ளை கண்விழித்து அழ ஆரம்பித்தபோது பால் போத்தலை எடுத்து பிள்ளைக்கு கொடுக்க முற்பட்டபோது கீழே விழுந்துவிட்டது.

அதைக் கீழே குனிந்து எடுத்து பிள்ளைக்குப் பால் கொடுக்கும்போது பால் போத்தல் விழுந்த இடத்திற்கு அருகில் நின்றவரின் கால் ஆர்த்தியைப் போலவே சின்னி விரலுக்கு பக்கத்து விரல் ஏனைய விரல்களை விட மேலே இருந்தது.

இவளும் ஆர்த்தியைப் போல இரக்கமில்லாதவளா? பரிதாபம் உள்ளவளாக அன்பைக் காட்டி பின்னால் கத்தியால் குத்துபவளா? அவள் முகம் அப்படி, இவள் முகம் எப்படியிருக்குமென சிந்தித்தவாறு இந்தக் காலுக்குரியவரின் முகத்தைப் பார்த்த அரவிந்த் அதிர்ந்துபோனான்.

பிள்ளையின் நிழலைக்கூட பார்க்கத் தகுதியில்லாத இவளுக்கு இவ்வளவு நேரமும் பிள்ளையைப் பார்க்கும்படி செய்துவிட்டேனே! பேரூந்திலிருந்து இறங்கி வேறு பேரூந்தில் செல்லலாமென நினைத்து பேரூந்தை நிறுத்தி அரவிந்த் இறங்கமுற்பட்டான். அப்போது அரவிந்த் தோள்மீது தூக்கத்திலிருந்த பிள்ளை பக்கத்தில் நின்ற ஆர்த்தியின் முடியை இறுகப் பிடித்தபடியே இருந்தது.

எதுவும் அறியாத இப்பிள்ளை அரவிந்த் இறங்கும்போதும் முடியை விடவில்லை.

(தொடரும்)

# “பெறுங்கை... வெறுங்கை... தருங்கை... பெருங்கை!”




**கொ**ழும்பு வடக்கு கலைமகள் தமிழ் வித்தியாலயத்தில் கடந்த ஐந்து வருடங்களாகத் தொழில்செய்து கொண்டிருந்த என்னைத் தீராத மன அழுத்தத்திற்குள்ளாக்கியது அந்தத் தொலைபேசி அழைப்பு. “இந்தத் தொழில நான் எடுத்துத் தரல்லேன்னா நீங்க நடுத் தெருவுலதான் நிக்கணும்” தொழில் எடுத்துத் தந்தவரின் ஏளன வார்த்தைகள் தந்த வலி... விம்மலாய் வெடித்து விரக்தியில் முடிந்தது. அடுத்தகணம் தொழிலும் கிழிலும், பென்ஷனும் கின்ஷனும்... ஒதுங்கிக்கொண்டேன். உத்தியோகம் புருஷலட்சணம். ஒன்று இல்லாவிட்டால் இன்னொன்று. இதுவும் இல்லாவிட்டால் வேறொன்று. ஆனால் நான் அவலட்சணனாக அலையவில்லை. நான் தற்போது “ரியாட் பிரிண்டர்ஸ்” அச்சகத்தில் ‘புருவ்’ பார்த்துக் கொண்டிருக்கின்றேன். “இருபதாம் திகதி என்றால், இதயம் சுக்குநூறு... வருவதோ பத்து நூறு... வரல்ல செலவு பாரு” என்று “உள்ளமழ” வாழவில்லை: ஏதோ... எழுத்துப் பிழைகள் இல்லாமல் ஒரு வழியாக... ஓடிக் கொண்டிருக்கிறது வாழ்க்கை.

அச்சகத்திற்குச் செல்வதற்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன். “வாப்பா எனக்குத் தயிரவேணும்!” என் கன்னத்தில் முத்தமிட்டுக் கெ(ா)ஞ்சினான் அப்துல் அஸீஸ். எங்களுடைய மூன்றாவது மகன் மாபோலை அல்-அஷ்ர.்.ப் ம.வி.யில் இரண்டாம் வகுப்பில் படிக்கின்றான். ‘டெங்கு’ வந்து தப்பினான். மூட்டு(வீக்கம்) வலியால் மூச்சுத்திணறி மீண்டுவந்தான். தொண்டைக் கட்டிகள் புற்றுநோய்க்கான ஆரம்ப அறிகுறியென அறியப்பட்டு அதிர்ச்சி தந்தான். இவனால் ராகமை வைத்திய சாலை வளாகம் எங்களுக்கு மனப்பாடம் ஆகிவிட்டது.

**** ***** *****

ஒரு ஏழு நிமிஷ நடை
இதோ தயிர்க்கடை.
“தம்பீ...!”
திரும்பினேன்.
வயதுபோன ஒரு தாய்!
எனக்கு, என் உம்மாவின் நினைவுவந்தது.

இப்பொழுது... எனக்கருகில் வந்து நிற்கும் இந்தத் தாய், ஓர் இந்துத் தாய்! எந்தத் தாயாக இருந்தால்தான் என்ன...? தாய்! தாய்தான்! “குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்...” உம்மா சொல்லித்தந்த ‘பாரதி’யின் பாடல் ஞாபகம் வந்தது.

காற்சட்டைப் பைக்குள் கையைவிட்டேன். “புருப்” பார்த்ததற்குக் கிடைத்த முற்பணம் “ஆயிரம் ரூபாய்” நோட்டு வெளியே வந்தது.

அதை அந்தத் தாயிடம் கொடுத்தேன். (நம்பலாம்...) நீரகோர்த்த விழிகளுக்குள் நூறாயிரம் பிரார்த்தனைகள் அணிவகுக்க... என் நெற்றியில் முத்தமிட்டு அழுதாள் அந்த ஏழைத் தாய்! “மகராசி பெத்த மகராசா நீ நல்லா இருப்பே!” மனம்நிறைவாக இருந்தது.

“கொடுத்தால்... கிடைக்கும் மகன்...! என் காதோரம் வந்துசொன்னாள் உம்மா.

கண்ணைத் துடைத்துக்கொண்டே... நடந்தேன். அதுசரி அப்துல் அஸீஸுக்குத் தயிருக்கு என்ன வழி? “அல்லாஹ் தருவான்!”

*** *** ***

கிண்ணியா மக்களின் தலைகளைக் காக்கவும், தக்க சமயத்தில் உயிர்களைக் காக்கவும்... சிலவேளை இவர்செய்த தர்மங்களும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்... அவர் வேறு யாருமல்ல, எங்கள் “வெடில் மாமா”

பிச்சை எடுத்துப் பிச்சை கொடுப்பார்.

பேசாமல்... இவரைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பியிருக்கலாம்... கிடைப்பதையெல்லாம் ஊருக்கே கொடுத்திருப்பார்!

“பெறுங்கை... வெறுங்கை.
தருங்கை... பெருங்கை.”

இந்தத் தத்துவத்தை எனக்கு உணர்த்தியவரே வெடில் மாமாதான்!

எனது பிரார்த்தனைகளும் அவரைப் பின்தொடர... வீடு வந்துசேர்ந்தேன்.

வாசலில்... நிற்பது யாரது?
கூர்ந்து பார்த்தேன்
“...ஹாய்... சித்தி...!”

*** *** ***

யார் இந்தச் சித்தி...?
தனேஸ்வரி!

2010இல்... எனக்கொரு “மிஸ்கோல்” வந்தது. “...நான், யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு பல்ல சுட்டியிலிருந்து ஜீவன் பேசுறன் அண்ணே!” என்றான் அவன்.

“... நான் வத்தளையிலிருந்து அமீர அலி பேசுறன்... தம்பீ...!” என்றேன் நான். இப்படித்தான் எனக்கும், ஜீவனுக்கும் இடையில் தொலைபேசி நட்புத் தொடங்கியது.

அன்புக்காக ஏங்கிய ஒரு ஜீவன்... அந்த ஜீவன் காதோரம் வந்தவன் ஒரு நாள் எங்கள் வீட்டுக் கதவோரம் நின்றான் எங்கள் எல்லோரையும் பார்க்கவேண்டும் என்ற ஆவலில் - கொழும்புக்குப் போகாதே தம்பி... உன்னைக் கொன்று போடுவாங்கள்” என்று ஒப்பாரி வைத்த “ஆச்சி”யின் பேச்சையும் மீறி ஓடோடி வந்தான்.

பாசத்திற்கு ஜாதியில்லை... மதமுமில்லையே! ஜீவன் எங்களுடன் இரண்டு நாட்கள் தங்கி இருந்தான். எங்கள் குழந்தைகளுக்குத் “தாய்மாமன்கள்” யாருமே கிடையாது. ஜீவன் தாய் மாமனை விடவும் அன்பாக இருந்தான். குழந்தைகளும், “ஜீவன் அங்கிள்.. ஜீவன் அங்கிள்..” என்று அவனையே சுற்றிச்சுற்றி வலம்வந்தன. “தெஹிவளை சூ, கோல்பேஸ்... என்று அவன் பார்க்க ஆசைப்பட்ட எல்லா இடங்களையும் சுற்றிக் காண்பித்தோம். மறக்கமுடியாத நாட்கள் அவை. யாழ்ப்பாண பஸ்ஸில்... அவனை ஏற்றி... வழியனுப்ப வந்தபோது என்னைக் கட்டியணைத்து... “அண்ணா” என்றழுதான். நானும் அழுதேன். எங்கள் ஞாபகமாய் அவனுடைய மாமாவின் குழந்தைக்கு எங்கள் மகள் “நஸ்லியா”வின் பெயரைச் சூட்டி மகிழ்ந்தான் ஜீவன்.

விதி, யாரைத்தான் விடுகிறது...?

இதை எழுதும்போது விழிகள் கலங்கி விழுகிற நீரத்துளிகளால்... இதயம் சுடுகிறது.

ஜீவன்... ஜெயானந்தன் கஜஜீவன்... என் தம்பி! 2011.10.01 அன்று மின்கம்பம் சரிந்து விழுந்து.... மார்புபிளந்து அகாலமரணம் அடைந்தான்... ஜீவன்!

... அவன் கொண்டு வந்த ஒடியல், பனாட்டு, பலகாரம், இனிப்புக்கள், பழங்கள்... எல்லாம்... இன்றும் இனிக்கிறது... அவனது நினைவுகளைப் போலவே!

*** *** ***

ஜீவன் மரணித்து ஒரு வருடம் கழித்து - அவனுடைய அம்மம்மா, அம்மா, சித்தி, தம்பி மயூரன், தங்கச்சி கௌரி, எல்லோரும் எங்கள் வீட்டுக்கு வந்தார்கள்.

அம்மம்மாவுக்கு இதய சத்திரசிகிச்சை கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். நானும், “பானு”வும் அம்மம்மாவை எங்கள் சொந்தத் தாயைப் போலக் கவனித்தோம்.

“கவலையில்லாமப் போங்க சித்தி... அம்மம்மாவ நானும், பானுவும் பார்த்துக் கொள்ளுவம்..” என்றேன் சித்தி, இடைக்கிடையே.. யாழ்ப்பாணம் போய் வருவா, பானு சமைத்துத் தருவா. சாப்பாட்டை எடுத்துக்கொண்டு, அவசர அவசரமாக நான் அம்மம்மாவைப் பார்ப்பதற்காக ஆஸ்பத்திரிக்கு ஓடுவேன்.

தூரத்திலிருப்பவர்கள்தான் இதயத்தின் ஓரத்தில் இருப்பார்களோ...?

*** **** ***

“வாங்க சித்தி... எங்க கௌரி... மயூரன்...?

“அவையள் ஆரும் வரல்ல... அண்ணே... நானும் பிள்ளைகளும்தான் வந்தனாங்கள்...”

வீட்டுக்குள் போனேன். வாப்பா, அஸருக்குத் தயிர் வந்துவிட்டுது... சித்தி நெறயக் கொணாந்து...” கூவிக்கொண்டோடி வந்தான் அப்துல் அஸீஸ். “உம்முண்ட மாவோலக் கடயில தானுங்கோ... எல்லாம் வாங்கினனான்..” “இதெல்லாம் எதுக்குச் சித்தி...?” என்றேன். விழிகலங்கி. “பிறகு என்னத்துக்கண்ணே சித்தி... பானு அக்கா சொல்லுங்கோவன்” என்றாள் சித்தி, பானுவின் தோளில் செல்லமாய்த் தலைசாய்த்து.

இரத்த உறவுகளால் ‘வலி’ பிறக்கிறது...
இரக்க உறவுகளால் ‘வழி’ பிறக்கிறது....

அறைக்குள் ஓடிப்போய்த் திரும்பிவந்த சித்தி, “அண்ணே... இந்தாங்கண்ணே... இதுகும்” என்றாள், என் கைகளுக்குள் பொத்தி விரித்தேன்.

பத்தாயிரம் ரூபாய்...!

“சி..த்..தி..!”

“பிறகு தாங்கண்ணே எப்பண்டாலும்...”

என் விழிகளின் விளிம்பினில் விழுந்த கண்ணீர்த்துளிகளில்... அந்தத் தாயின் முகம் வந்து நிழலாடியது..

“மகராசி பெத்த மகராசா நீ நல்லா இருப்பே!...”




(4ஆம் பக்கத்தொடர்ச்சி)

முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் நீதியமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நியமிக்கப்பட்டமை, கூட்டமைப்பின் பலமாக பார்க்கப்படுகின்ற மேல்தட்டு வாக்காளர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கின்றது. எப்போதும் யாழ்ப்பாண மேலாதிக்கத்தை நேசிக்கும் இந்தத் தரப்பினரால் கிழக்கைச் சேர்ந்த இரா.சம்பந்தனின் இந்தத் தீர்மானம் உள்நோக்கம் கொண்ட திட்டமிட்ட செயற்பாடாகவே பார்க்கப்படுகின்றது.

இதனை தமிழரசுக் கட்சியின் உபதலைவர்களுள் ஒருவரான பேராசிரியர் சிற்றம்பலம் போன்றவர்கள் வெளிப்படையாகவே விமர்சித்துவருவதுடன், தேர்தல் செயற்பாடுகளில் இருந்து விலகியிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பெற்றுக்கொண்ட வெற்றியே கூட்டமைப்புக்கு தற்போது தலைவலியை கொடுக்க ஆரம்பித்திருக்கின்றது. படித்தவர்கள், சாணக்கியர்கள் என்ற முகவரிகளுடன் உலா வந்தவர்களின் செயற்திறனை உணர்ந்துகொள்கின்ற - சீர்தூக்கிப் பார்க்கின்ற இடங்களாக பிரதேச சபைகள் மாறியிருக்கின்றன. “பிரதேச சபைகளையே இயக்க முடியாதவர்கள் என்னத்தை ........... போகிறார்கள்.” என்று ஆதரவாளர்கள் மத்தியில் ஏமாற்றங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

கூட்டமைப்பின் தலைமையினால் தூசுதட்டப்படுகின்ற சாதியப் பாகுபாடுகள், பாதிக்கப்படுகின்ற மக்கள் மத்தியில் மட்டுமல்லாமல், கூட்டமைப்புக்குள்ளேயே புகைச்சலையும், எரிச்சலையும் ஏற்படுத்தி இருக்கின்றது. வேட்பாளர் தெரிவில் சாதிப்பாகுபாடுகள் காட்டப்படுவதாகக் குற்றம் சுமத்திய முன்னாள் யாழ்.மேஜர் செல்லன் கந்தையா உட்பட மூவர் உண்ணாவிரதத்தில் குதித்திருந்தனர். வலிமேற்கு பிரதேச சபை உறுப்பினர் செல்வகுமார் போன்ற பல பிரதேச சபை உறுப்பினர்கள் இதே குற்றச்சாட்டுடன் ஆளும் தரப்பிற்கு மாறியுள்ளனர்.

ஆக, கடந்த தேர்தல்களில் கூட்டமைப்புக்கு வாக்களித்த பலர் அதிருப்தியடைந்த நிலையில் ஊசலாடும் வாக்காளர்களாக இருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

உணர்வுரீதியான எண்ணக்கருத்திலிருந்து விடுபட மூடியாதவர்களாகவும், அதேவேளை கூட்டமைப்பின் செயற்பாடுகளில் அதிருப்தியுற்றுமிருக்கின்ற இந்தப் பிரிவினர் இரண்டு வகையான முடிவுகளை எடுப்பதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றது.

01. உணர்வுகளுக்கு முன்னுரிமை கொடுத்து “என்ன இருந்தாலும் தேசியம் பேசுகிறவர்களுக்குத்தான் போடவேணும்” என்று முடிவெடுப்பார்கள்.

02. உணர்வுகளைப் பிரதிபலிக்கும் மாற்றுத் தெரிவில்லாத ஏமாற்றத்தில் வாக்களிப்பதையே புறக்கணித்துவிடுவார்கள். இதில், இரண்டாவது தெரிவிற்கே அதிகளவு வாய்ப்பிருப்பதாக கிடைக்கப்பெறுகின்ற தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

அதேநேரம், ஊசலாடும் வாக்காளர்களைக் குறிவைத்து ஐ.ம.சு.மு. தேர்தல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி.க்கு இருக்கின்ற நிரந்தர வாக்கு வங்கியையும் அதனுடைய ஆதரவுத் தளத்தையும் அத்திவாரமாகப் பயன்படுத்துகின்ற அதேவேளை சமூகமட்டத்தில் தாக்கம் செலுத்தக்கூடிய சிலரையும் களத்தில் இறக்கியிருக்கின்றது.

ஆக, வட மாகாணத்தில் கூட்டமைப்புக்கு இருப்பதாக கூறப்படுகின்ற மக்கள் ஆதரவுத் தளம் பல்வேறு காரணங்களில் ஆட்டம்காண ஆரம்பித்துள்ள நிலையில், வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தி ஆட்சியை கைப்பற்றிக் கொள்வதற்கு ஐ.ம.சு.மு முழுத்திறனையும் பயன்படுத்துகின்றது. இந்தப் பலப்பரீட்சையில் யார் வெற்றி பெறுவார்கள்? என்பதை தீர்மானிக்கும் சக்தியாக ஊசலாடும் வாக்காளர்களே இருக்கப் போகின்றார்கள்.

எதுஎப்படியிருப்பினும் இறுதிநேர திருப்பங்கள் எதுவும் ஏற்படாத பட்சத்தில், வெற்றி - தோல்வி இரண்டுக்குமிடையிலான இடைவெளி அதிகமாக இருக்காது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

(1030இல் வெளியான துன்பியலின் தொடர்ச்சி...)

# வடபகுதி முஸ்லிம்களின் துன்பியல் வரலாற்றுக் கதை

**(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)**

அவர் கூறியவை வெறும் வார்த்தைகள் அல்ல, அதுவிரட்டப்பட்ட வடபகுதி முஸ்லிம்களின் வாழ்வோடு விளையாடிய கவிதை. எழுதப்படாத அந்தக் கவிதைக்கு மனித நேயம்கொண்ட எவரும் தலைவணங்கியே ஆகவேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் இன்று வடக்கிலிருந்து விரட்டப்பட்டு புத்தளத்தில் வாழ்ந்துவரும் சபருல்லாஹ் எனும் சகோதரன் வடக்கிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம்களுக்கு தக்கதருணத்தில் ஓடோடிவந்து உதவிக்கரம் நீட்டிய ஈ.பி.டி.பி பற்றி இவ்வாறு விவரிக்கிறார்.

புலிகளால் விரட்டப்பட்டு நாம் புத்தளத்துக்கு வந்தபொழுது ஈ.பி.டி.பி.யும் அதன் செயலாளரும் அமைச்சருமான டக்ளஸின் சேவைகளை நாம் என்றுமே மறக்கமுடியாது. “நீர் விநியோகம், மலசலகூடங்கள், பாடசாலைகள், பாலர் பாடசாலைகள், கிணறுகள், மத்ரசாக்கள், ஏன் பள்ளிவாசல்களைக்கூட கட்டுவதற்கு அவர் உதவிபுரிந்தார். தங்குமிடம், நிவாரணப் பொருட்கள், பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு கொடுப்பனவுகள், முதற்கட்டமாகக் 138 குடும்பங்களுக்கு காணியும் பெற்றுத்தந்தார். அன்று உயர்தரம் படித்துக்கொண்டிருந்த மாணவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவு பெற்றுத்தந்தார்.

இடம்பெயர்ந்த முஸ்லிம் சிறுவர்களுக்கு கத்னாச் செய்ய உதவினார்” இப்படி ஈ.பி.டி.பி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சேவைகளை அடுக்கிக்கொண்டே போனார் சபருல்லாஹ்.! உறவுகளே நாங்கள் எல்லோரும் இணைந்தே நிலைத்து வாழ உழைப்போம்! யாருக்கும் நாங்கள் எதிரிகளல்ல. யாரையும் நாங்கள் வெறுப்பதுமல்ல, நேருக்கு நேர் நின்று மக்களுக்கு நல்லதைச் செய்யாமல் மறைந்தே போருக்கு வா எனக் கூறி மக்களின் வாழ்க்கையுடன் விளையாடாமல் வரி, கப்பம் எனக் கூறியே தினமும் வாய்க்கரிசி பெற்ற ஒரு கூட்டம் வாழவேண்டும். தாங்கள் மட்டும் என பிறரையெல்லாம் கொன்றொழித்ததும் ஆளவேண்டும் ஒரு துண்டு நிலத்தை அதுவே ஆசை எனக்கொண்டும் ஈழமென்றும் இடைக்காலமென்றும் இடைக்கிடையே உரிமை என்றும் ஓலமிட்டுக்கொண்டிருந்ததே இதனை என்னவென்று கூறுவது?

5 இல் வளையாதது இனி ஒருபோதும் 50 இல் வளையாது என்பதால் என்ன விடுதலையும் இனி புலிக்குக் கிடைக்கப் போவதில்லை. ஆம், நாமெல்லோரும் இணைந்து எழுந்து வரும்வரை நீதி கிடைக்கப்போவதுமில்லை. விழுந்துவிழுந்து எழுந்தாலும் வீரர்களாய் முன்வாருங்கள்.

நாங்கள் இருக்கின்றோம், இங்கே நம் பகைமையுடன் கைகொடுக்க, உங்களது உரிமைகளை வென்றெடுக்க உறவுகளாய் எழுந்திங்கே எம்முடன் கைகோர்க்க வாருங்கள்,

நீங்கள் நினைக்கின்றவற்றை நாளையே நடத்திக்காட்ட உங்கள் நடுநாயகமாய், இதயவீணையாய் ஒலிக்கின்றோம். கண்டுகொள்ளுங்கள் இன்னும் சந்தர்ப்பங்களுண்டு எமக்கு. மானுடநேயம்கொண்டே நாங்கள் மக்கள் சேவைசெய்து நாளை வானுயரப் போகும் உங்கள் வாழ்க்கைக்காய் எப்போதும் மானிடராய் நின்றுரைப்போம் என மனதில் கொள்ளுங்கள்.

வாருங்கள் எமது வார்த்தைகளுடன் கலந்தே தாருங்கள் உங்களது பலத்தை அரணாகத் தேடிவரும் உங்கள் சீரமிகுந்த வாழ்க்கை நாளை சிறந்தே விளங்கும். பார் முழுதும் பொங்கியெழும் உங்கள் பரவசத்தின் உச்சம்!

உங்களை உங்கள் தலைவர்கள் என்று சொல்கின்றவர்கள் அரசியல் வியாபாரத்திற்காக மட்டுமே பாவிக்கின்றார்கள் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். எனவே நீங்கள் துவண்டுபோனபோது உங்களுக்குத் தோள் கொடுத்தவர்கள் பக்கமே உங்கள் கையைக் காட்டுங்கள். **(முற்றும்)**







**வட மாகாண சபைத் தேர்தலில் வெற்றி யாருக்கு..? சிந்தியாவின் ஆரூடம் எப்படியிருக்கின்றது?**

**எம்.சிந்துஜன், சாவகச்சேரி.**

யார் வெற்றிபெறுவார்கள் என்பதைத் தெரிந்துகொள்வதற்கு உங்களைப் போல் பலருக்கு ஆர்வம் இருக்கின்றது. ஆனால், இவர்கள்தான் வெல்வார்கள் என்று குறிப்பிட்டுக் கூறினால், தேர்தல் ஆணையாளர் அதை தேர்தல் விதிமுறைகளுக்கு மாறானது என்று கூறக்கூடும். கடந்த காலத்தில் தமிழ் மக்கள் கேட்டுப் புளித்துப் போன வாக்குறுதிகளையிட்டு, மனம் நொந்துபோய் இருக்கின்றார்கள். அந்த மாற்றம் இந்தத் தேர்தலில் எதிரொலிக்கும் என்று எதிர்பார்ப்போம்.

**சிந்தியா! ரயில் சேவை 90ஆம் ஆண்டுக்குப்பின் மீண்டும் ஆரம்பித்தமை பெரும் வரப்பிரசாதமல்லவா?**

**து.செல்வா, கிளிநொச்சி.**

நிச்சயமாக. தமிழர்களாகிய நமக்கு கௌரவமான அரசியல் உரிமை தேவை என்பதை எவரும் மறுக்கமுடியாது. உரிமை கிடைக்கும்வரை எமக்கு வீதிகளும் வேண்டாம், மின்சாரமும் வேண்டாம், புகையிரதமும் வேண்டாம், அபிவிருத்தியும் வேண்டாம் என்று கூறுவது புத்திசாலித்தனமாகாது. என்னைக் கேட்டால், கிளிநொச்சி வரை வருகின்ற புகையிரதம் எவ்வளவு விரைவில் யாழ்ப்பாணம் வந்துசேரும் என்ற எதிர்பார்ப்பே நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. நடக்கின்ற வீதி விபத்துக்களும், சில பஸ் நடத்துனர்களின் அடாவடித்தனங்களையும் பார்க்கும்போது புகையிரதப் பயணத்துக்காக உங்களைப் போல் ஏங்கிக் கிடக்கின்றேன்.

**சிந்தியா! உண்மையில் சமூகத்தின் மீது அக்கறை கொண்டவர்களாக அரசியல்வாதிகள் இருக்கின்றார்களா?**

**ஆர்.தஷ்மா, நுவரெலியா.**

தர்மசங்கடமான கேள்வி இது. ஒட்டுமொத்தமாக எல்லோர் மீதும் குற்றஞ்சுமத்திவிட முடியாது. அரிதாக ஒருசிலர் இருக்கக் கூடும். பெரும்பாலும் அரசியலுக்கு வருவோர் அதிகாரத்தை பயன்படுத்திக் கொள்ளவும், தமது பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளவும், த்டை ஏதுமில்லாத அந்தஸ்துக்காகவுமே அரசியலுக்கு வருகின்றார்கள். அதில், மக்கள் சேவை எதிர்பார்ப்பற்ற அர்ப்பணிப்பு என்பதற்கு எல்லாம் இடமே இல்லை.

**சிந்தியா! சிலரது இதயம் இரும்பாக இருக்கின்றதே...?**

**கு.மருதன், முல்லைத்தீவு.**

இதயங்கள் இரும்பாவதில்லை. கடினமான எண்ணங்களும், விட்டுக்கொடுக்காத பிடிவாதங்களும், பழிதீர்க்கும் வஞ்சனைகளும் நிரப்பப்படுகின்றபோது இதயம் இரும்புக்கு நிகராய் கனத்துவிடுகின்றது. இதயச் சுவர்களுக்குள் காதலையும், அன்பையும், கருணையையும், சகமனித நேசிப்பையும் எவ்வளவு நிரப்பினாலும், இதயம் பாரம் உணர்வதேயில்லை. முயற்சி செய்யுங்கள்.

**சிந்தியா! எப்போதும் பிறரை குறை சொல்லிக்கொண்டே இருப்பவர்களை என்ன செய்யலாம்?**

**இ.ஆரபி, வவுனியா.**

அவருக்கு அவரைப் புரிந்துகொள்ளச் செய்ய நாமே உதவவேண்டும். அவர் பிரயோகிக்கும் வார்த்தைப் பிரயோகங்களை நாமும் பிரயோகிக்காமல், வேறொரு வடிவில் அவர் பார்ப்பவற்றை அவருக்கு உணர்த்த வேண்டும். ஒரு விரல் உன் எதிரே இருப்பவரையும், எஞ்சிய நான்கு விரல்கள் உன்னையும் சுட்டிக்காட்டுவதை அவருக்குப் புரியவைத்தால், அவரில் நீங்கள் காணும் குறை மெல்ல நீங்கிவிடும்.

**சிந்தியா! நம்ம சீமான் அண்ணனுக்கு கல்யாணம் முடிந்துவிட்டதே...?**

**ச.பபிதா, மன்னார்.**

அதில் உங்களுக்கு என்ன வருத்தம்?

**சிந்தியா! அரசியல் கடி ஜோக் ஒன்று எடுத்து விடுங்களேன்?**

**கா.சர்வா, வெள்ளவத்தை.**

**ஒருவர்:** என்ன விக்னேஸ்வரன் ஆயுதம் தூக்கப் போறாராமே?

**மற்றவர்:** அட அதவிடப்பா, அவர் அரசியல் பேசிப் பழகுறாராம்.

**சிந்தியா! கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு அரசிடம் சரியான மருந்து இருக்கிறதாமே?**

**தா.வைகுந்தன், அச்சுவேலி.**

அந்த மருந்து மிகவும் கசப்பானது. வழங்குபவருக்கும் நஞ்சு, குடிப்பவருக்கும் நஞ்சு. அந்த மருந்தை மக்களுக்கு வழங்காமல் அவர்களும், இவர்களுமாக பூட்டிய அறைக்குள் இருந்து குடித்துச் சுகப்படட்டும்.

**சிந்தியா! அமெரிக்காவை உலகப் பொலிஸ்காரன் என வர்ணிக்கப் படுகிறதே..?**

**கோ.தாமினி, மாத்தளை.**

பூமிப்பந்திலுள்ள எந்த நாட்டிலும், எந்த வேளையிலும் நடப்பவற்றைக் கண்காணிக்கவும், நினைப்பவற்றை நடத்தவும் வெறுப்பவற்றைத் தகர்க்கவும் முடியுமான வளர்ச்சியோடு எல்லா வழிகளிலும் வளர்ந்து நிற்கிறது அமெரிக்கா. பூமியில் இருந்து எவரும் தமக்கு நிகரான எதிரிகள் உருவாக முடியாது என்ற நம்பிக்கை கொண்டு வேற்றுக்கிரகங்களை நோக்கி அவதானத்தைச் செலுத்துகின்ற அளவில் அமெரிக்காவின் வளர்ச்சி பிரமிப்பூட்டுகின்றது. இந்த நிலையிலும், சிரியா மீது தாக்குதல் நடத்தப் போவதாக துள்ளிக் குதித்த அமெரிக்காவை ஆதாரங்களைச் சமர்ப்பித்துவிட்டு அடுத்த கட்டத்தை எடுக்காவிட்டால், தாமும் களத்தில் இறங்கவேண்டியிருக்கும் என்று மிரட்டிய ரஷ்யாவின் விஸ்வரூபம் மீண்டும் ஒரு வல்லரசுப் போட்டியை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சத்தைக் கொடுத்துள்ளது.



ஸ்ரீ ராம ஜெயம்



ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

## மலையாள மாந்திரிக சக்தி

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்ட தெளிவான ஜாதக குறிப்புகளுக்கு....

MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM
23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
Tel : 011 2342463/4, 011 2470615 Fax : 011 2344831
E-mail : drpksamy@sltnet.lk
நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508




# காதிலை பூ கந்தசாமி

## அழைப்பிதழ்

அன்பார்ந்த வாக்காளர் பக்த கோடிகளே!

நிகழும் விஜய வருடம் புரட்டாதித் திங்கள் 21ஆம் நாள் நடைபெறவுள்ள தேர்தல் திருவிழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

**பி.கு:-** வாக்காளப் பக்தகோடிகளின் ஆசிவேண்டி வீதியுலாவரும் நூற்றுக் கணக்கானவர்களுள் கேடிகளும், கொள்ளையடித்துக் கோடிகளைப் பார்த்தவர்களும் இருக்கக்கூடும் என்பதால் மிகவும் அவதானமாக உங்கள் காணிக்கைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

# கொள்கை வீரர்கள்

**வட மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற கூட்டு அமைப்பின் பிரசாரக் கூட்டம் சூடுபறக்க நடந்துகொண்டிருக்கின்றது. அவ்வழியால் சென்ற கா.பூ.க கூட்டு அமைப்பின் தலைவர்களைச் சந்திக்கிறார்.**

**கா.பூ.க:-** இத்தேர்தலில் தாங்கள் போட்டியிடக் காரணம் என்னவோ?

**கூ.ஆ.01:-** தேர்தல் நடப்பதால் போட்டியிடத் தீர்மானித்துள்ளோம்.

**கூ.ஆ.02:-** இத்தேர்தல் நடந்திருக்காவிட்டாலும் போட்டியிடும் அளவிற்கு பதவி ஆசைகொண்டவர்கள் அல்ல நாங்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெளி-வாகச் சொல்லுகின்றோம்.

**கூ.ஆ.03:-** தேர்தல் நடக்கப்போவதாக அறிவித்த உடனேயே எங்கள் பொதுக் குழுவைக் கூட்டினோம். தேர்தல் திட்டவட்டமாக நடைபெறுமென உறுதியாகும்வரை பொதுக்குழுக் கூடிக்கொண்டே இருந்தது. தேர்தலை நடத்த என்று அரசாங்கம் தீர்மானித்ததும் நாங்களும் போட்டியிடத் தீர்மானித்துவிட்டோம். ஒருவேளை அரசு தேர்தலை ஒத்திப் போட்டிருந்தால் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்ற வரலாற்றுப் பெருமைமிக்க தீர்மானத்தை எடுத்திருப்போம்.

**கூ.ஆ.01:-** இந்தத் தேர்தல் நடக்கக்கூடிய சூழ்நிலை இப்போதில்லை. எனினும் அரசுநடத்தும் சூழலில் இருப்பால் நாம் போட்டியிடுகிறோம். இல்லாவிட்டால் இந்த மாகாண சபை அரைகுறையானது. நடத்திய மொடல்தான் எமக்குப் பிடித்தமானது என்றெல்லாம் எமது கொள்கை விருப்பங்களைச் சொல்லிக்கொண்டிருந்திருப்போம்.

(கா.பூ.க) தாங்க முடியாமல் தலைதெறிக்க ஓடுகிறார்.

**யாவும் கலப்படமற்ற பொய்**

# ஆட்கள் தேவை

வடமாகாணத்தின் மிக விரைவில் நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ள தேர்தல் திருவிழாவிற்காய் வெளிமாவட்டங்களில் இருந்துவந்து கடைவிரித்திருக்கும் முன்னணி நிறுவனம் ஒன்றிற்கு .கோஷம் போடுவற்கும் நோட்டீஸ் ஒட்டுவதற்கும் வாகனப் பவனியில் ஓடித் திரிவதற்கும் ஆட்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

இதற்கான தகுதி, 'தகுதியின்மை என்பது மட்டுமே' மூன்று நேர உணவும், மாலையில் தாக சாந்திக்குத் தேவையாக பானங்களும் தாராளமாக வழங்கப்படும்.

முன்னாள் கேடிகளும் கொள்ளைக்குப் பேர் போனவர்களும் வெட்கமின்றித் தொடர்புகொள்ளலாம். வேறு நிறுவனங்களில் இருந்து நைசாக நழுவி ஓடி வரும் ஓடுகாலிகளுக்கும் வேறு நிறுவனங்களினால் துரத்தியடிக்கப்பட்ட காவாலிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். முன் அனுபவம் இல்லையென்று யாரும் பின்னிற்கத் தேவையில்லை. எம்மிடம் கேடித்தனத்தில் கில்லாடிகளான பல பயிற்சியாளர்கள் பயிற்சியளித்துத் தலைமை தாங்க தயார்நிலையில் உள்ளனர் என்பதைப் பெருமையுடன் அறிய் தருகின்றோம். நன்றி.

**செயற்குழு.**

# உயிர் காத்த விளக்கு



இவ்விளக்கின் சுடர் கம்பி வலை உறையினால் மூடப்பட்டிருக்கும். கம்பி வலைக்கு வெளியேயுள்ள வாயுக்களைத் தீப்பிடிக்கச் செய்யாது விளக்கின் சுடர். இதுவே டேவி விளக்கின் தத்துவம். சுடரின் வெப்பத்தையெல்லாம் கம்பிவரை கிரகித்துக்கொள்ளும். வெளியிலுள்ள வாயு எரிவதற்கான வெப்பத்தை இது வெளியிடுவதில்லை.

டேவி தான் உருவாக்கிய விளக்கில் மேலும் பல (வலை உறையை) அபிவிருத்திகளைச் செய்தார். தொழிலாளி, சுரங்கத்தினுள் இந்த விளக்கின் சுற்றுச் சுவரைத் தவறுதலாகத் திறப்பாரானால், சுடர் எரிவாயுவோடு தொடர்பு கொண்டு விபத்து நேர வாய்ப்புண்டே! ஆகவே விளக்கைத் திறக்க முடியாமல் பூட்டு உத்தியை (லொக்கிங்) உருவாக்கினார். சுரங்கத் தொழிலாளியினால் இவ்விளக்கைச் சுரங்கத்தினுள் திறக்கமுடியாது. தொழிலாளிகளின் உயிர்ப்பாதுகாப்புக்கும் பத்திரத்துக்கும் வழிகோலிய இந்தக் கண்டுபிடிப்புக்காக ஹம்ஃப்ரி டேவி ஒரு பைசாகூட ஊதியமாக வாங்கிக் கொள்ளவில்லை. "என் ஒரே குறிக்கோள், மனித சமுதாயத்துக்குப் பணியாற்றுவதுதான் - பயனடைவல்ல" என்றார். இந்த முன்னோடி.

டேவி ஏராளமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, பல விஞ்ஞான முடிவுகளைக் கூறி இருக்கிறார். வைரம் உறுதியானது. அது தீயினால் பாதிக்கப்பட்டாது என்று முற்காலத்தில் நம்பிக்கொண்டிருந்தார்கள். இது தவறு. வைரத்தையும் அதிகமான உஷ்ணத்தில் எரிக்க முடியும் என்பதை விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தினார்கள். 1790 வாக்கில் வைரத்தை மூடப்பட்ட ஒரு பாத்திரத்தில் வைத்துக் காய்ச்சி அதனுள் பிராண வாயுவைச் செலுத்தினால் வைரம் எரிந்து எவ்விதச் சாம்பலையும் விடாமல் மறைந்து போயிற்று. ஆனால் ஒரு வாயு உருவாயிற்று. இந்த வாயு கரியமில வாயுதான் என்பதை ஹம்ஃப்ரி டேவி 1816இல் உறுதிப்படுத்தினார்.

அலுமினிய உலோகம் கலந்த கலவைகளைப் பற்றி பல நூற்றாண்டுகளாக அறிவார்கள். அலுமினியக் கலவைகளிலிருந்து அலுமினிய உலோகத்தை முதன்முதலில் தனியாகப் பிரித்துக் காட்டியவர் (அது அசுத்தமானதாக இருந்தாலும்) ஹம்ஃபிரி டேவி தான் 1810இல். சோடியம், பொட்டாசியம், மக்னீஷியம் ஆகியவற்றை அவற்றின் ஹைட்ராக்ஸைட்களிலிருந்து எலக்ட்ரோலிஸில் முறையில் மின்சாரம் பாய்ச்சுதல் தனியாகப் பிரித்துத் தயாரித்துக் காட்டினார். 1807 - 8 ஆண்டுகளில் டேவி.

**(முற்றும்)**

# இந்தவாரம் உங்கள் பலன்

**(19.09.2013 தொடக்கம் 25.09.2013 வரை)**

## மேடம்

முன்கோபம் தவிர்த்தல் நல்லது. புதிய ஆடை அணிகலன்களை வாங்குவதற்கான முயற்சிகளில் சற்றுப்பின்னடைவுகள் உண்டாகும். குடும்பச் சொத்துக்களில் வெகுகாலமாக இருந்துவந்துள்ள பிரச்சினைகள் பெரிய மனிதர்களின் தலையிடுதலால் திரும்பக் கிடைக்கும். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கடன்கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். உடம்பில் கண், காது, தலை போன்ற பாகங்களில் சிறசில உபாதைகள் வருவதன்மூலம் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். ரேஸ் லாட்டரி போன்றவற்றின் மூலமாக திடீர் தன-வரவுகள் உண்டாகும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## துலாம்

பெண்களால் தென்திசையில் இருந்து சில நல்ல செய்திகள் கிடைக்கும். வெகு காலமாகப் பிரிந்துபோன கணவன் – மனைவி இருவரும் ஒன்றுசேருவார்கள். நீண்டநாட்களாக வரக் கடன்கொடுத்து இருந்த பணம், பொருட்கள் திரும்பக் கை வந்து சேரும். தனியார் பணிசெய்யும் அடிமை ஆட்களால் பிரச்சினைகளும் பொருள் இழப்பும் வரவிருப்பதால் கவனத்தேவை. மாணவர்கள் கல்வியில் பரிசு மற்றும் பாராட்டுக்களைப் பெறுவ-தோடு அரசு உதவித்தொகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பழைய வாகனங்களை விற்றுப் புதிய வாகனம் வாங்குவதற்கான முயற்சிகளில் சற்று பின்னடைவுகள் ஏற்படுவிலாம். காதல் சம்பந்தமான விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேரும். தாகு மற்றும் சுயிசன் தொழில் செய்வோர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படுவது நல்லதாகும்.

## இடபம்

ஒரு சிலருக்குக் உத்தியோகத்தில் வீண் பிரச்சினைகள் உருவாகி பணி இடமாற்றம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொருளாதாரத்தில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் தீர்ந்து மனநிம்மதி அடைவீர்கள். வீடு, வாகனங்களைப் பழுது பார்ப்பதன் மூலமாகப் பொருட் செலவுகள் உண்டாகலாம். உடம்பில் வாயு மற்றும் வயிறு போன்ற உபாதைகள் வந்துபோகலாம். தீராத நாட்பட்ட நோய்கள் தீர்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். புதிய கடன்வாங்கிப் பழைய கடன்கள் அடைப்பதற்காக முயற்சிப்பீர்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமா-கும்.

## விருச்சிகம்

ஆடம்பரச் செலவுகளைச் செய்ய எண்ணி புதிய கடன்கள் வாங்குவீர்கள். பங்காளிகளுடன் சேர்ந்து புதிய கூட்டுத்தொழில் செய்வதற்கான முயற்சிகளில் நல்ல பலன்களை எதிர் பார்க்கலாம். புதுப்பட்ட பழைய வீடு மற்றும் வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காக பொருட்செலவுகள் வந்துசேரும். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கடன் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். உடல் நிலையில் வாயு மற்றும் வாத சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். புதிய நண்பர்களின் சேர்க்கையை தவிர்த்தல் நல்லது தந்தை – மகன் உறவுகளில் இருந்துவந்துள்ள பிரச்சினைகள் குறைந்த ஒற்றுமை உண்டாகும். புதிய ஆடைகள் மற்றும் அணிகலன்களை வாங்குவதற்கு வாய்ப்பு உள்ள காலமாகும். விவசாயம் செய்பவர்களுக்கு சுமாரான நற்பலனையே செய்யும்.

## மிதுனம்

மனத் தைரியமுடன் எடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்துமுடிக்க வாய்ப்பு உள்ள காலமாகும். தாயின் உடல்நிலையில் இருந்துவந்துள்ள பாதிப்புகள் குறைந்து மன நிம்மதி அடைவீர்கள். கணவன், மனைவிக்குள் காரணமற்ற மனக்கசப்புகள் வந்துபோகும். பிரிந்துபோன உறவுகளுடன் திரும்பவும் தொடர்புகள் ஏற்படக்கூடிய காலமாகும். சகோதர சகோதரர்களின் சுபகாரியங்களுக்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். காதல் சம்பந்தமான விசயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லதாகும். தாயின் உடல்நிலையில் வெகுநாட்களாக இருந்துவந்துள்ள உடல்நிலை பாதிப்புகள் குறைந்து காணப்படும். நண்பர்களால் வீண் பிரச்சினைகள் வரஇருப்பதால் கவனமுடன் பேசிப் பழகுதல் நல்லதாகும்.

## தனுசு

வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் சிக்கலில் மாட்டிக் கொள்ளவேண்டாம். வங்கிகளில் இருந்து நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்து கடன் உதவித்தொகைகள் நண்பர்களின் உதவியால் கிடைக்கும். குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்து வருவதன்மூலம் மனத்திருப்தி அடைவீர்கள். வடதிசையில் இருந்து நற்செய்திகள் வந்துசேரும். விபரீதமான எண்ணங்களை கைவிட்டுக் காரியத்தில் கவனமாய் இருப்பது நல்லது. பொருளாதாரத்தில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் மாறி சற்றுமுன்னேற்றமான சூழ்நிலைகள் காணப்படும். உற்றார் மற்றும் உறவினர்களின் திடீர்வரவுகளால் எதிர்பாராத பொருட்செலவுகளும் மனநிம்மதிக் குறைவுகள் ஏற்படலாம்.

## கடகம்

நீண்டகாலமாக பிள்ளை இல்லாதவர்களுக்கு இறையருளால் புத்திர பாக்கியம் உண்டாகும். அண்டை அயல்வீட்டுக்காரர்களுடன் கவனமாகப் பேசப்பழகுவதால் வரவிருக்கும் பிரச்சனைகளைத் தவிர்க்கலாம். உத்தியோகம் இல்லாதவர்களுக்கு புதிய வேலைவாய்ப்பு கிடைக்கும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான முயற்சிகளைச் சற்று தள்ளிப்போடவும். வீடு மற்றும் தொழிற்சாலைகளை இடமாற்றம் செய்வதற்கு வாய்ப்பு உள்ளது. ஒரு சிலருக்கு வீடு மற்றும் பணி இடமாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பரிசு மற்றும் பாராட்டுதல்க்ளோடு அரசு ஆதரவுகளையும் பெறுவார்கள். கணவன் – மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும்.

## மகரம்

ஒரு சிலருக்குப் புதிய வீடு மாற்றம் ஏற்படலாம். நண்பர்களின் வீட்டு சுப-காரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொண்டு மன மகிழ்ச்சி அடைவீர்கள். காதல் சம்பந்தமான விசயங்களில் உறவினர்களின் மூலமான நல்ல செய்திகள் வந்துசேரும். செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச்சொல்லுக்கு ஆளாக வேண்டி வரும் என்பதால் புதிய தொடர்புகளை தவிர்த்தல் நல்லது. விட்டுப்போன பழைய உறவுகளில் இருந்துவந்த மனக்கசப்புகள் தீர்ந்து நல்ல சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்துறையினர்களுக்கு மேலதிகாரிகளிடம் மனக்கசப்புகள் ஏற்பட்டு பணி இடமாற்றம் ஏற்பட இருப்பதால் முன்கோபத்தை தவிர்த்துப் பணி ஆற்றுதல் சிறந்ததாகும்.

## சிங்கம்

புதிய வீடுகள் மற்றும் வாகனங்களை வாங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உற்றார் மற்றும் உறவினர்களின் திடீர் வரவால் மனமகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாகும். ஒரு சிலருக்கு பணிசெய்யும் இடங்கள் மற்றும் வீடுகளை இடமாற்றம் செய்வீர்கள். சகோதர சகோதரிகளின் தடைப்பட்ட திருமண காரியங்கள் மற்றவர்களின் உதவியால் நிறைவே-றும் காலமாகும். நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த வங்கிக் கடன்கள் கைவந்துசேரும். கணவன் – மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். இரும்பு இயந்திரம் இரசாயன சம்பந்தமான தொழில் செய்வோர்கள், பழைய பொருட்களை விற்பனை செய்வோர்கள், பலசரக்கு வியாபாரிகள் ஆகியோர்கள் இலாபம் அடைவார்கள்.

## கும்பம்

வேலையாட்களால் எதிர்பார்த்த ஆதாயம் இல்லை. பூர்வீகச் சொத்து விசயங்களில் இருந்துவந்துள்ள கருத்துவேறுபாடுகள் தீர்ந்து மனநிம்மதி அடைவீர்கள். நீண்டகாலமாக திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமண காரியங்கள் நிறைவேறும். தேவையற்ற மனச்சஞ்சலங்களைத் தவிர்க்கவும். தாயின் உடல்நிலையில் சில பாதிப்புகள் வரக் கூடுமாகையால் கவனமுடன் இருக்கவும். குலதெய்வ வழிபாடுகளை செய்துவருவது நல்லது. உற்றார் மற்றும் உறவினர்களால் எந்த விதமான ஆதாயமும் இல்லை. விடுபட்டுப்போன பழைய வழக்குகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## கன்னி

விவசாயம் செய்பவர்களுக்குப் புதிய முறை விவசாயங்களின் மூலமாக நல்ல இலாபம் பெறுவார்கள். புதிய ஆடை மற்றும் அணிகலன்கள் வாங்குவதைச் சற்றுத் தள்ளிப் போடுதல் நல்லது. திருட்டுப்போன பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்ப கிடைக்கும். ரேஸ் லாட்டரி போன்ற படித்த வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்க வாய்ப்பு உள்ள காலமாகும். காதல் விசயங்களில் எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்துசேரும். நண்பர்களின் உதவிகிட்டும். சூதாட்ட விசயங்களில் பணம் வந்துசேரும் என எண்ணி ஏமாற்றம் அடைய வேண்டாம். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## மீனம்

தடைப்பட்டுப்போன சகோதர சகோதரிகளின் சுபகாரிய சம்பந்தமாக நல்ல தகவல்கள் வந்துசேரும். கணவன் – மனைவிக்கிடையில் அந்நியோந்நியம் அதிகரிக்கும். காதல் சம்பந்தமான விசயங்களில் மிகுந்த கவனமுடன் நடந்து கொள்வது நல்லது. திருமண சம்பந்தமான முயற்சிகளை இன்னும் சற்றுக்கால தாமதமாகவே நடத்துவது சிறந்ததாகும். மாணவர்களுக்கு புதிய படிப்புகள் சம்பந்தமாக நல்ல தகவல்கள் கிடைக்கும். பூர்வீக சம்பந்தமான சொத்துக்களில் இருந்து வந்த பிரச்சினைகள்தீர இன்னும் சற்றுக் காலதாமதம் ஆகலாம். புதிய வீடு மற்றும் நிலபுலன்களை வாங்குவதற்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.



வட மாகாணசபைத் தேர்தல் 2013
யாழ். மாவட்டம்
(ஈ.பி.டி.பி.வேட்பாளர்கள்)
எமது வெற்றியே வட மாகாண சபையை பலப்படுத்தவும் பாதுகாக்கவும் உதவும்!
முதன்மை வேட்பாளர்
எஸ்.தவராசா 07
03 அ.அகஸ்ரின்
05 ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்
08 சூ.அலெக்சான்டர்
10 க.கமலேந்திரன்
12 கோ.றுஷாங்கன்
13 திருமதி சி.ஞானசக்தி
15 நா.கணேசன்
17 சி.பாலகிருஷ்ணன்
19 சு.டிவகலாலா
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி